விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள்: இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail :valampurii@yahoo.com
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 15 சனிக்கிழமை (27.02.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 070

# போர்க்குற்ற விசாரணைகளின்போது மனித உரிமைகள் அலுவலகம் தேவை

## இலங்கையில் நிறுவ வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்து

(ஜெனிவா)

இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணைகளின்போது சர்வதேசத்தின் பங்களிப்பை உறுதிப்படுத்தவும் நீதியின் சுதந்திரத்தை பாதுகாக்கவும் மனித உரிமைகளை கண்காணிக்கும் வகையிலான ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் ஒன்று இலங்கையில் நிறுவப்பட வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க

## அதிகார பகிர்வுக்கு 13 நல்ல தீர்வு



(கொழும்பு)

அரசியலமைப்பின் பிரகாரமே தமக்கு கடமையாற்ற முடியும் என

23ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் கைதிகள் 5ஆவது நாளாக போராட்டம்

(அநுராதபுரம்)

அநுராதபுரம் மற்றும் புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 16 பேர் இன்றையதினம் 5ஆவது நாளாக தமது உண்ணா விரத போராட்டத்தை தொடர்ந்துள்ளனர்.

அனுராதபுரம் சிறைச்சாலையல் உள்ள 2 அரசியல் கைதிகளும் புதிய மகஸின் சிறைச்சாலையில்

24ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.பல்கலையில் ஆடைக் கட்டுப்பாடு ரத்துச் செய்யப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் கல்விசார் ஊழியர்களுக்கான ஆடைக் கட்டுப்பாடு பற்றிய அறிவித்தல் இரத்து செய்யப்பட்டுள்ளது. முன்னதாக நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் புதிய ஆடைக் கட்டுப்பாட்டு முறையை, யாழ்ப்பாண கலைப் பீடாதிபதி பேராசிரியர் நா.ஞான குமரன் அறிவித்திருந்தார்.

இதற்கமைய ஆண் கல்விசார்

24ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்க உதவித் தூதுவர் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம்



(கிளிநொச்சி)

இலங்கைக்கான அமெரிக்க உதவி தூதுவர் அன்ரூவ் சிமன் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்துள்ளார்.

கிளிநொச்சி உரு

23ஆம் பக்கம் பார்க்க

## இராணுவ அதிகாரி கொலை; உடலைத் தேடும் பணி தோல்வி



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு-விசுவமடு பிரதேசத்தில் இராணுவ முகாமில் கடமையாற்றியவேளை கொலை செய்யப்பட்டதாக கூறப்பட்ட நபரின் உடலை கண்டுபிடிப்பதற்கான அகழ்வு பணிகள்

23ஆம் பக்கம் பார்க்க

## கிணற்றுக்குள் வீழ்ந்து மாணவி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை நாரந்தனை மத்திய பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு கிணற்றுக்குள் தவறிவீழ்ந்த மாணவியொருவர் உயிரிழந்துள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நாரந்தனை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் அன்ரன் யோகராசா அருள்நிதி (வயது 17) என்ற மாணவியே உயிரிழந்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க

## ஹரிஸ்ணவி படுகொலை கைதான சந்தேக நபருக்கு மார்ச் 14வரை விளக்கமறியல்

(குருமன்காடு)

வவுனியாவில் கடந்த 16ஆம் திகதி மாணவி ஹரிஸ்ணவி வன்புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை மார்ச் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க வவுனியா மாவட்ட நீதிபதி நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த 16ஆம் திகதி 14வயது மாணவி வன்புணர்வின் பின் கொலை செய்யப்பட்டமை தொடர்பில நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அயல் வீட்டில் வசித்த குடும்பஸ்தரான 35 வயது நபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது

23ஆம் பக்கம் பார்க்க


## ஆணைக்குழு விசாரணை யாழில் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொளளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் யாழ்ப்பாணத்தில் இன்றைய தினம் ஆரம்பமாக உளளது. இதனைத் தொடர்ந்து நான்கு தினங்கள் விசாரணைகள் நடைபெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய இன்று 27 ஆம் திகதி முதல் 28,29ஆம் மற்றும் மார்ச்

24ஆம் பக்கம் பார்க்க



## இந்தியாதான் பிரபாகரனை...

10ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத்திட்டத்தின் விளக்கக் கூட்டம் வவுனியாவில் நாளை நடைபெறும்

(வவுனியா)

தமிழ் மக்கள் பேரவை தயாரித்த அரசியல் தீர்வுத்திட்ட வரைபை பொது மக்களுக்கு அறிமுகப்படுத்தும் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா நகராட்சி மண்டபத்தில் இடம்பெறும்.

தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர்கள் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில தீர்வுத்திட்டத்தை தயாரித்த நிபுணர்கள் விளக்க உரை ஆற்றவுள்ளனர்.

நாளை வவுனியாவில் நடைபெறும் இக் கூட்டத்தில் பெரும் திரளான மக்கள் பங்கேற்பர் என எதிர் பார்க்கப்படுகிறது. (ந)

## நல்லாட்சியாளருக்கும் பிள்ளைகள் உண்டு நாமல் எச்சரிக்கை



(கொழும்பு)

நல்லாட்சியில் ஈடுபடுபவர்களுக்கும் பிள்ளைகள் உண்டு. அவர்களின் பிள்ளைகளுக்கு எதிர்கால

23ஆம் பக்கம் பார்க்க

## கட்சி அரசியல் பிரச்சினைகளால் வடக்கின் அபிவிருத்தி பாதிப்பு-சி.வி

(கொழும்பு)

கட்சி அரசியல் தொடர்பான பிரச்சினைகள் எம்மிடையே ஏற்பட்டு எமது குறிக்கோள் மறப்பதால் வட மாகாண அபிவிருத்தி பாதிப்படைகிறது என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகர சபையின் ஆலோசனைக் குழு அமைத்தல் மற்றும் இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றைய தினம் யாழ்

24ஆம் பக்கம் பார்க்க



## கமரூன், ஹுசைன் கூறியவை பொய்யாக்கப்பட போகின்றதா!

### வலி.வடக்கு மக்கள் விரக்தியுடன் கேள்வி

(யாழ்ப்பாணம்)

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன அடுத்த முறை நான் வரும் போது நீங்கள் உங்கள் சொந்த ஊரில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்பர்கள், ஐ.நா மனிதவுரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைன்அடுத்த முறை நான்வரும் போது உங்கள் அனைவரினையும் சொந்த இடங்களில் சந்திப்பேன் என கூறியது எல்லாம் பொய்யாக போகின்றதா? என வலி.வடக்கு மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மேலும் எமது இருப்பிடங்களை பிடித்து, எம்மை முகாம்களில் குடியமர்த்தி விட்டு, பலாலி விமான நிலைய அபிவிருத்தி மேற்கொள்ளப்பட உள்ளது. இதற்கு இந்தியா உதவி செய்யவுள்ளது. ஆகையால் இது தொடர்பில் இந்தியா நிதானமாக செயற்பட வேண்டும். நாம்

24ஆம் பக்கம் பார்க்க

## இராணுவத்தினர் திடீர் சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - மன்னார் வீதியில் (ஏ -32 வீதி) பூநகரி, மண்டைகல்லாறு பகுதியில் இராணுவத்தினர் விசேட சோதனை நடவடிக்கையை நேற்று வெள்ளிக்கிழமை காலை மேற்கொண்டனர்.

பேருந்துகள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் மறிக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டதுடன் அதில் பயணித்தவர்கள் உடல் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, ஆள் அடையாள அட்டை

24ஆம் பக்கம் பார்க்க

# கழுத்துப்பட்டி இறுகியதில் பாடசாலை மாணவன் பலி

(கொழும்பு)

மாணவனொருவன் கழுத்துப்பட்டி இறுகியதினால் (ரை) மரணமான சம்பவமொன்று பூனாகலைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

பூனாகலை தோட்டத்தைச் சேர்ந்த மகேஸ்வரன் பேரின்பநாதன் என்ற தரம் ஐந்தில் கல்வி கற்று வந்த 11 வயது நிரம்பிய மாணவனே இவ்வாறு மரணமானவராவார்.

இம்மாணவன் பூனாகலை சிங்கள வித்தியாலயத்தில்,சிங்கள மொழி மூலம் கல்வி கற்று வந்தவர் ஆவார்.

இம்மாணவனின் பெற்றோர் கொழும்பில தொழில் செய்வதனால், மாணவன் பாட்டியின் பராமரிப்பிலிருந்தவாறு, கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளார்.

சம்பவ தினத்திற்கு முன்தினம், இம்மாணவனுக்கு (ரை) கழுத்துப்பட்டி பாடசாலையால் வழங்கப்பட்டுள்ளது.

கழுத்துப்பட்டியுடனேயே, மாணவனின் மரணம் சம்பவித்ததினால், குறித்த மரணம் தொடர்பாக பலத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பண்டாரவளை நீதவான் நீதிமன்ற நீதிபதியின் உத்தரவிற்கமைய மாணவனின் சடலம் பதுளை சட்ட வைத்திய விசாரணைக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், பதுளை சட்ட வைத்திய அதிகாரி விடுமுறையில் சென்றிருப்பதனால், கண்டி அரசினர் சட்ட வைத்திய விசாரணைக்கு நேற்று பகல் மாணவனின் சடலம் அனுப்பப்பட்டுள்ளது.

பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் இம்மரணம் கொலையாக இருக்கலாமென்று சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (செ-12)

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

பிறவுண் வீதி நீராவியடியில் அமைந்துள்ள தாட்ஷா அழகுக் கலையகத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நீராவியடி யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (ந)

# அமை.சுவாமிநாதனுடன் நேற்று த.தே.கூட்டமைப்பினர் சந்திப்பு



(கொழும்பு)

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் மற்றும் எதிர்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், மாவை சேனாதிராஜா மற்றும் அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி ஆகியோர் கலந்து கொண்ட முக்கிய சந்திப்பொன்று நேற்று அமைச்சுக் காரியாலயத்தில் இடம்பெற்றது.

இதன்போது வடக்கு கிழக்கு மாகாணங்களின் மீள்குடியேற்றம், அபிவிருத்தி, வாழ்வாதாரம் ஏனைய கருத்திட்டங்கள், கைத்தொழில் அபிவிருத்தி உள்ளடங்கலான பல முக்கிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. (செ-12)

# அச்சமான அரசியல் சூழலை — இலங்கை மக்கள் நிராகரிப்பு -நிஷா

(கொழும்பு)

அச்சமான அரசியல் சூழலை இலங்கை மக்கள் ஒன்றுபட்டு நிராகரித்துள்ளனர் என தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால் தெரிவித்துள்ளார்.

வாசிங்டனில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் (உள்ளூர் நேரம்) இடம் பெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அமைதிக்கான அமெரிக்க நிறுவகத்தில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுடன் இணைந்து, நிஷா பிஸ்வால் இந்தக் கருத்தரங்கில் பங்கேற்றிருந்தார்.



இதில், இலங்கையின் முன்னேற்றகரமான நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி என்ற தலைப்பில், நிஷா பிஸ்வால் உரையாற்றியிருந்தார். (செ-12)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கௌரவ சின்னத்துரை தவராஜா
(வட மாகாண சபை எதிர்க் கட்சி தலைவர்)
எமது ஜனசக்தி சனசமூக நிலையத்திற்கு உடற்பயிற்சிக்கு பன்முகப்படுத்தப்பட்ட 2015-ம் ஆண்டு நிதியில் இருந்து ரூ.100,000 தந்துதவிய கௌரவ சின்னத்துரை தவராஜா வட மாகாண எதிர்க்கட்சி தலைவரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.
(3710)
அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
ஜனசக்தி சனசமூக நிலையம்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## அழைப்பிதழ்

அப்பண்ணா நமசியண்ணா ஞாபகார்த்தமாக
ஆரம்பிக்கப்பட்ட
சதாபொன்ஸ் கல்வி சமூக மேம்பாட்டு நிதியத்தின்
10ஆவது ஆண்டுவிழாவும்
அவர்களால் நிறுவப்பட்ட
சதாபொன்ஸ் கல்வி நிலையத்தின்
50ம் ஆண்டு பூர்த்தி
ஞாபகார்த்த மலர் வெளியீடும்.

காலம் : 27.02.2016 சனிக்கிழமை
நேரம் : பி.ப. 2.00 மணி
இடம் : சதாபொன்ஸ் கல்வி நிலையம்

பிரதம விருந்தினர்
திரு.சி.சத்தியசீலன் அவர்கள்
(மீன்பிடி, போக்குவரத்து வர்த்தக வாணிப கிராமஅபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்துஅமைச்சு, வடமாகாணம்)

சிறப்பு விருந்தினர்
திரு.S. சிவஸ்ரீ அவர்கள்
(பிரதேச செயலர், கரவெட்டி)

திரு. S.நந்தகுமார் அவர்கள்
(வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி)

கலாநிதி செ. சேதுராஜா அவர்கள்
(ஓய்வுநிலை அதிபர், யா/நெல்லியடி மத்திய கல்லூரி)

அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

சதாபொன்ஸ் கல்வி சமூக மேம்பாட்டு நிதியம்,
அல்வாய்
(சி-3843)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கௌரவ
இமானுவல் ஆனோல்ட்



கௌரவ
அரியகுட்டி பரம்சோதி

எமது ஜனசக்தி சனசமூக நிலைய பாலர் பாடசாலைக்கு 100,000 ரூபா தந்துதவிய கௌரவ இமானுவல் ஆனோல்ட் வட மாகாணசபை உறுப்பினர் அவர்களையும் ஜனசக்தி சனசமூக நிலைய திருத்த வேலைகளுக்கு பன்முகப்படுத்தப்பட்ட 2015-ம் ஆண்டு நிதியில் இருந்து 70,000 தந்துதவிய கௌரவ அரியகுட்டி பரம்சோதி வட மாகாண சபை உறுப்பினர் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(3710)
ஜனசக்தி சனசமூக நிலையம்

## சம்பந்தர்
மொடேர்ன் வைத்திய நிலையம்
யாழ்ப்பாணம்.

வைத்திய நிபுணர்கள் சேவையை ஆரம்ப காலம் முதல் இன்றுவரை வழங்கி வரும் சம்பந்தர் வைத்திய நிலையம் சங்கானையிலும் கிளை நிலையத்தை ஆரம்பித்துள்ளார்கள்.
(3718)
மக்கள் வங்கி முன் வீதி
நாகநாதன் வைத்திய நிலையம் அருகே
சங்கானை.
T.P : 0778730129

## தவறிவிட்டது

கோபாலகிருஷ்ணன் கண்ணதாசன் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம், இன்சூரன்ஸ் ரக்ஸ் என்பன யாழ்ப்பாணத்திலிருந்து சங்கானை செல்லும் வழியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். (3720)
தொடர்பு : 075 070 3640

## பெண் உதவியாளர் தேவை

ஆரோக்கியமான வயோதிப பெண்ணை தங்கியிருந்து பார்ப்பதற்கு பெண் ஒருவர் தேவை. (3719)
0767 360 353

## காணி விற்பனை

A9 வீதி நுணாவில் சந்தி மட்டுவில் தெற்கு பருத்தித்துறை வீதியில், துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் 17 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
3 1/2, 7, 10 என பிரித்துக் கொடுக்கப்படும். தென்னை, மா போன்ற மரங்கள் வைப்பதற்கும், வீடு கட்டுவதற்கும் உகந்த இடம். (3717)
0778730129

## தவறிவிட்டது

தம்பிஐயா ஸ்ரீபதி என்பவருடைய 6029 82823V எனும் இலக்கமுடைய அடையாள அட்டை வாகன சாரதிப்பத்திரம் (B2395382) மோட்டார் சைக்கிள் காப்புறுதிப் பத்திரம் மற்றும் வரி அனுமதிப் பத்திரம் என்பன மல்லாவிக்கும் முள்ளியவளைக்குமிடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C-3844)
தம்பிஐயா ஸ்ரீபதி
1ம் வட்டாரம், அம்பாள் வீதி,
முள்ளியவளை, முல்லைத்தீவு.
தொ.பே : 0775003387

# ஊழல் மோசடி குற்றச்சாட்டின் அடிப்படையில் பிரபல அரசியல்வாதிகள் விரைவில் கைதாவர்

(கொழும்பு)

**ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் பிரபல அரசியல்வாதிகள் விரைவில் கைது செய்யப்பட உள்ளதாக இலஞ்ச ஊழல் மோசடித் தவிர்ப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஸி டயஸ் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.**

புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த கைதுகள் அரசியல் ரீதியான பழிவாங்கல்கள் அல்ல, சட்டத்தை அனைவருக்கும் ஒரேவிதமாக அமுல்படுத்தும் நோக்கில் இவ்வாறு அரசியல்வாதிகள் கைது செய்யப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் 12ஆயிரம் முறைப்பாடுகள் இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிற்கு கிடைக்கப் பெற்றுள்ளது. இதில் முக்கிய அரசியல்வாதிகளுக்கு எதிராக முறைப்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

புதிய விதிமுறைகளுக்கு அமைய முறைப்பாடுகள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விசாரணை அதிகாரிகளுக்கு போதியளவு கட்ட வசதிகள் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற மிகப் பெரிய இலஞ்ச ஊழல் மோசடியான சுங்கத் திணைக்கள 125 மில்லியன் மோசடி தொடர்பில் இரண்டு சுங்க அதிகாரிகள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது, நீதிமன்றிற்கு சென்றிருந்த தில்ருக்ஸி இந்த தகவல்களை ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். (இ)

# வரி அறவீட்டு நடவடிக்கைகள் வெளிநபர்களிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

இலங்கையில் வரி அறவீட்டு நடவடிக்கைகள் வெளிநபர்களிடம் ஒப்படைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரி அறவீட்டு நடவடிக்கைகள் வெளிநபர்களிடம் பெற்றுக்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் திணைக்களத்தின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விடயம் குறித்து உள்நாட்டு இறை வரித்திணைக்கள அதிகாரிகள், நிதி அமைச்சின் அதிகாரிகள், வரி கணக்காய்வு செய்யும் நிறுவன அதிகாரிகள் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன. வரி நிலுவைகளை அறவீடு செய்யும் பொறுப்பினை வரி கணக்காய்வு செய்யும் நிறுவனங்களிடம் ஒப்படைக்க நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

எனினும் இந்த முயற்சியை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அதற்கு எதிராக போராடப்படும் எனவும் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# பெருந்தோட்டத்துறை மக்களும் இலங்கை மக்களே- ஜே.வி.பி.

பெருந்தோட்ட மக்கள் இந்திய வம்சாவளியினர் அல்லர். அவர்களும் தற்போது இலங்கை பிரஜைகளே என ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டத்துறை தொடர்பான ஒத்திவைப்பு பிரேரணையை சமர்ப்பித்து நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும கருத்து தெரிவித்த அவர், கடந்த காலத்தில் மலையக மக்கள் அடிமைகளைப் போல நடத்தப்பட்டதாக தெரிவித்தார்.

எனினும் அந்த யுகம் தற்போது மாற்றம் கண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளர்.

இந்நிலையில், புதிய தலைமைத்துவம் நம்பிக்கை தருவதாக இருக்கிறது என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்காவின் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது என அமைச்சர் மனோ கணேசன் இதன் போது தெரிவித்தார்.

பெருந்தோட்ட மக்கள் தாம் இந்திய வம்சாவளிகள் என்ற அடையாளத்தை தவிர்த்து தமிழர்கள் என்ற அடையாளத்துக்கு வரவேண்டும் என இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் தம்மிடம் வலியுறுத்தியுள்ளதாக அமைச்சர்மனோ கணேசன்மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# உச்ச நீதிமன்ற நீதவானின் உத்தியோகபூர்வ அறையில் பாம்பு

கொழும்பு புதுக்கடை உச்ச நீதிமன்ற நீதவானின் உத்தியோகபூர்வ அறையில் நேற்று முன்தினம் பாம்பொன்று காணப்பட்டதனால் பதற்றம் நிலவியுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றிருந்தது.

உச்ச நீதிமன்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நடவடிக்கைகள் அநேகமாக பூர்த்தியாகியிருந்த போதிலும் அலுவலக நடவடிக்கைகள் இடம்பெற்று வந்த போது, திடீரென நீதிமன்றக் கட்டடத்தின் நான்காம் மாடியில பதற்ற நிலைமை ஏற்பட்டது.

நான்காம் மாடியில் நீதவான்களின் உத்தியோகபூர்வ அறைகள் காணப்படுவதனால் அதற்குள் பிரவேசிக்க வெளிநபர்களுக்கு அனுமதியில்லை.

நீதவான் ஒருவர் உத்தியோகபூர்வ அறைக்கு சென்ற போது பாம்பைக் கண்டு பதற்றமடைந்து, நீதிமன்ற உத்தியோகத்தர்களிடம் கூறியுள்ளார்.

நீதிமன்ற உத்தியோகத்தர்கள் பொல்லுகளுடன் சென்று பாம்பை பிடிக்கச் சென்றுள்ளனர்.

அப்போது அங்கிருந்த நீதிமன்ற செய்தி சேகரிப்பில் ஈடுபடும் ஊடகவியலாளர் ஒருவர் அனைவரையும் அந்த இடத்தை விட்டு அகலுமாறு கோரி வெறும் கையால் பாம்பை பிடித்து போத்தல் ஒன்றில் அடைத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றப் பகுதிகளில் நிலவி வந்த பதற்றம் தணிந்தது. (இ)

# தேர்தலுக்கு அரசு பயப்படுகின்றது

## டலஸ் அழகப் பெரும தெரிவிப்பு



உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசாங்கம் தள்ளிப் போட்டு வருவதற்குக் காரணம் தேர்தலை முகம் கொடுக்கவிருக்கும் பயத்தினாலேயே ஆகும் என கூட்டு எதிர்க்கட்சியின் தேசிய அமைப்பாளர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

தொகுதி நிர்ணயம் செய்வதற்கு எடுக்கும் தாமதமே இதற்குக் காரணம் என அரசாங்கம் சாட்டுப் போக்குத் தெரிவித்து வருகின்றது.

அப்படியானால், அரசாங்கம் ஏன் தொகுதி நிர்ணயம் செய்வதற்கு முன்னர் உள்ளூராட்சி சபைகளைக் கலைத்தது எனவும் அவர் கேள்வி எழுப்பினார். (இ)

## கார் விபத்தில் சிக்கிய சாரதி உயிரிழப்பு

வெலிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காலி - மாத்தறை பிரதான வீதியில் கார் ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் காரின் சாரதி உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த சாரதியையும் வெளிநாட்டுப் பிரஜையொருவரையும் வலான வைத்தியசாலையில் அனுமதித்த போது காரின் சாரதி உயிரிழந்துள்ளார்.

மாத்தறைப் பகுதியைச் சேர்ந்த 41வயதுடைய புபரண என்பவரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# போலி கடவுச்சீட்டுக்கள் மூலம் வெளிநாடு சென்ற இருவர் கைது

(கொழும்பு)

போலிக் கடவுச்சீட்டு மூலம் வெளிநாடுகளுக்கு சென்றிருந்த இரண்டு நபர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

போலி தகவல்களை வழங்கி அதன் மூலம் பெறப்பட்ட கடவுச்சீட்டு மூலம் டுபாய் நாட்டிற்கு சென்ற நபர் நாடு கடத்தப்பட்ட நிலையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பொறளை பிரதேசத்தை சேர்ந்த 51 வயதுடைய ஒருவரே நேற்றுமுன்தினம் மாலை குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.


இதேவேளை, போலி கடவுச்சீட்டு மூலம் ஜேர்மனிக்கு செல்ல முயற்சித்த ஒருவர் துருக்கியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று முன்தினம் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதையடுத்து விமான நிலையத்தில் வைத்து அவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறையைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (இ)

# ஞானசார தேரர் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுதாக்கல்

(கொழும்பு)



பொதுபல சேனாவின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர், உயர்நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

நேற்று முன்தினம் இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**அண்மையில் தம்மை கைது செய்தமையானது சட்டவிரோதமானது என்று தீர்ப்பளிக்கக் கோரியே இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

முழுமையான நீதித்துறையில் உள்ள பிரச்சினைகளையும் அவர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையில் ஷரியா வங்கி தொடர்பில் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனுடன் சந்திப்பு ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக பொதுபல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது. (இ)

# ஷிராணிக்கு எதிரான பிரேரணையின் போது ஆதரவளித்தமை பாரிய தவறு-பைஸர் கவலை



ஷிராணி பண்டார நாயக்கவிற்கு எதிரான குற்றப் பிரேரணையின் போது ஆதரவளித்தமை பாரிய தவறாகும் என உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த பாரிய தவறை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தைரியமான முறையில் திருத்தியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாருடனும் டீல் போடவில்லை. பொதுமக்களுடன் மட்டுமே அவர் டீல் போட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமைப் பொறுப்பினை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைத்து சென்றதன் பின்னர் காலில் இழுப்பது முன்னாள் ஜனாதிபதி மகிந்தவிற்கு உசிதமானதல்ல.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் மத்திய செயற்குழுவின் தீர்மானங்களை மதித்துச் செயற்பட வேண்டும். எவ்வாறெனினும் மகிந்த ராஜபக்ஷ கட்சியை நேசிக்கின்றார்.

எந்த காரணத்திற்காகவும் மகிந்த கட்சியை பிளவடையச் செய்யமாட்டார் என நம்புகின்றேன் என பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார். (இ)

# ஆசிய கிண்ண கிரிக்கெட் பங்களாதேஷ் அணி வெற்றி



ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு எதிரான போட்டியில் பங்களாதேஷ் அணி 51 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

இருபது ஓவர் ஆசியக்கோப்பை கிரிக்கெட் போட்டி பங்களாதேஷில் 24-ம் திகதி தொடங்கியது. மார்ச் 6-ம் திகதி வரை இந்தப் போட்டி நடக்கிறது. இதில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, போட்டியை நடத்தும் பங்களாதேஷ், ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய 5 நாடுகள் பங்கேற்கின்றன.


நேற்று, ஐக்கிய அரபு இராச்சிய அணியும் உள்ளூர் அணியான பங்களாதேஷ் அணி விளையாடின. நாணயச் சுழற்சியில் வென்ற அரபு இராச்சிய அணி, பங்களாதேஷ அணியை துடுப்பாட்டம் செய்ய பணித்தது. அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர் முகமது மிதுன் சிறப்பாக ஆடி 41 பந்துகளில் 47 ஓட்டங்கள் குவித்தார்.

பின்கள வீரரான மகமதுல்லா 37 ஓட்டங்கள் குவித்தார். 20 ஓவர் முடிவில் பங்களாதேஷ் 8 விக்கெட் இழப்புக்கு 133 ஓட்டங்கள் சேர்த்தது.

134 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய ஐக்கிய அரபு இராச்சிய அணி 17.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 82 ஓட்டங்கள் மாத்திரமே பெற்றுக்கொண்டது.

பந்து வீச்சில் பங்களாதேஷ் அணி சார் மகமதுல்லா, சகிப் அல் ஹசன், மோர்டசா, ரஹ்மான் தலா 2 விக்கெட்டினை கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக பங்களாதேஷ் அணியின் மகமதுல்லா தெரிவானார். (க)







# "கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தை கைவிடு"

# "திருத்தப்படாத பிரதான வீதிகளை புனரமைப்பு செய்"

# வடமராட்சி கிழக்கில் கண்டனப் பேரணி





(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கடற்பரப்பில் இருந்து கடல்நீரினை எடுத்து குடிநீராக்கும் திட்டத்தை உடனடியாக கைவிடுமாறும் 30 வருடங்களுக்கு மேலாக திருத்தமின்றி காணப்படுகின்ற வடமராட்சிக் கிழக்கில் உள்ள பிரதான வீதிகளை புனரமைக்கக்கோரியும் வடமராட்சி கிழக்கு பொது அமைப்பு மற்றும் வடமராட்சி கிழக்கு பட்டப்படிப்புகள் மாணவர் ஒன்றியம் என்பன ஏற்பாடு செய்திருந்த கண்டனப் பேரணி நேற்றைய தினம் மருதங்கேணியில் இடம்பெற்றது.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கடற்பரப்பு கடல்நீரினை எடுத்து நன்னீராக்கும் செயற்றிட்டத்துக்கு அரசு கடந்த சில மாதங்களாக முயற்சி எடுத்து வருகின்றது.

எனினும் இம்முயற்சிக்கு வடமராட்சி கிழக்கு கடற்றொழில் சம்மேளனங்கள், கடற்றொழில் சங்கங்கள், வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி அமைப்பு மற்றும் பொது அமைப்புக்கள், கடற்றொழிலாளர்கள் என்போர் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்ற போதும் அரசானது அம்முயற்சியை கைவிடுவதாக இல்லை.

அத்துடன் வடமராட்சி கிழக்கில் 30 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாத நிலையில் உள்ள பிரதான வீதிகளை திருத்தித் தருமாறு வடமராட்சி கிழக்கிலுள்ள பொது அமைப்புகள் மற்றும் பொது மக்களால் பலதரப்பட்டவர்களுக்கும் மகஜர் கையளிக்கப்பட்டும் வீதிகள் திருத்துவதற்குரிய எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை இடம்பெறவில்லை.

இதற்கமையவே நேற்றைய தினம் இக்கண்டனப் பேரணி முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இப்பேரணியில் மேற்குறிப்பிட்ட கடற்றொழில் சங்கங்கள், சமாசங்கள், பொது அமைப்புகள், கடற்றொழிலாளர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டு தமது கோஷங்களை எழுப்பியிருந்தனர்.

நேற்றைய தினம் முற்பகல் 10 மணியளவில் வடமராட்சி தாழையடி கடற்கரையில் இருந்து ஆரம்பமான இக்கண்டனப் பேரணியானது மணற்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரை சென்ற இக்கண்டனப் பேரணி மருதங்கேணி பிரதேச செயலகத்துடன் நிறைவடைந்தது.




தொடர்ந்து பிரதேச செயலர் க.கனகேஸ்வரனிடம் வடமராட்சி கிழக்கு பொது அமைப்பின்பிரதிநிதிகளால்மகஜரும்கையளிக்கப்பட்டது.

இம்மகஜரின் ஒரு பிரதி யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-5-60-64)

## கொலையுடன் தொடர்புடைய மூவருக்கு மரணதண்டனை

(கொழும்பு)

கொலை ஒன்றுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூவருக்கு எம்பிலிப்பிட்டிய நீதிமன்றம் மரணதண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

இந்த கொலை கடந்த 2008ஆம் ஆண்டு இடம்பெற்றுள்ளது.

எம்பிலிப்பிட்டிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செவனகல பிரதேசத்தில் 32 வயதான நபர் ஒருவரே படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த படுகொலையுடன் சம்பந்தப்பட்டதாக கருதப்பட்ட மூவருக்கே நேற்று முன்தினம் எம்பிலிப்பிட்டிய நீதிபதி மரணதண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளார்.

இதேவேளை, 32,36 மற்றும் 29 வயதுடைய குறித்த சந்தேக நபர்கள் செவனகல மற்றும் ஹிக்கடுவை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## நகரப்பகுதியில் துர்நாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரின் மத்திய பேருந்து தரிப்பிடத்தில் உள்ள மலசல கூட கழிவுகளை தினமும் பகல் வேளையில் அகற்றி வருவதாகவும் இதனால் அப் பகுதி முழுவதும் துர்நாற் றம் வீசிக் கொண்டிருப்பதாக பொதுமக்களால் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இத்தகைய செயற்பாடு காரணமாக யாழ்.நகர ப்பகு தியில் உள்ள பேருந்துத் தரி ப்பிடத்தில் சுகாதார சீர்கே டான நிலை ஏற்பட்டுள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-5-83)

## போலி அனுமதிப்பத்திரங்களுடன் வளர்க்கப்பட்ட 39 யானைகள் வன ஜீவராசிகள் திணைக்களத்திடம்

போலி அனுமதிப்பத்திரங்களுடன் வளர்க்கப்பட்ட 39 யானைகளை இதுவரை வன ஜீவராசிகள் திணைக்களம் பொறுப்பேற்றுள்ளது. ருவன்வெல்ல - அம்திரிகல பிரதேச வீடொன்றிலிருந்து யானைக் குட்டி ஒன்றை நேற்று முன்தினமிரவு மீட்டதாக வன ஜீவராசிகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மீட்கப்பட்ட யானைக் குட்டியை உடவலவை யானைகள் சரணாலயத்திற்கு கொண்டுசெல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போலி ஆவணங்களுடன் வளர்க்கப்பட்டு வரும் மேலும் 6 யானைகளை மீட்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

சட்டவிரோதமாக பராமரிக்கப்பட்டு வரும் யானைகளை மீட்பதற்கு குற்றப்புலனாய்வு பிரிவினரும் வன ஜீவராசிகள் திணைக்களத்தினரும் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## சிசிலியாவின் தங்க நகைகளை மதிப்பீடு செய்யுமாறு உத்தரவு

(கொழும்பு)

கோல்டன் கீ நிதிமுறைகேடு தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள சிசிலியா கொத்தலாவவின் மொத்த தங்க நகைகளை மதிப்பீடு செய்யுமாறு கொழும்பு பிரதான நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

நீதவான் கிஹான் பிலப்பிட்டிய இந்த உத்தரவை நேற்று முன்தினம் சீஐடிக்கு பிறப்பித்தார்.

கோல்டன் கீ வழக்கில் வாடிக்கையாளர்களின் 4.3 மில்லியன் சொத்துக்களை முறைகேடு செய்த குற்றச்சாட்டே சிசிலியா மீது சுமத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், சிசிலியாவின் தங்க நகைகளை விற்பனை செய்து வாடிக்கையாளர்களின் வைப்புக்களை மீளச்செலுத்த முடியுமா? என்பது குறித்து ஆராயுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

மேலும், நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சிசிலியாவை மார்ச் 9 வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார். (இ)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



### அமரர் சிவமங்களம் கமலேஸ்வரன்

**(திதி: தைமாத அபர பக்க பஞ்சமி)**

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை 28.02.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் தும்பளை முத்துமாரி அம்மன் கோவில் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் பங்குபற்றுவதோடு மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இவ் அழைப்பிதழை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொண்டு இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**நன்றி நவிலல்**

**கடந்த 29.01.2016 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்னை அமரர் சிவமங்களம் கமலேஸ்வரன்**

அவர்களின் மரணச் செய்தியறிந்து நேரில் வருகை தந்து எமக்கு உதவி புரிந்த நண்பர்களிற்கும், எமது துன்பத்தில் பங்கேற்று எம்மை ஆறுதல்படுத்தியோருக்கும், தொலைபேசி, ரெலிமெயில் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

15, எல்லை ஒழுங்கை, நெல்லண்டை,
தும்பளை, பருத்தித்துறை.

நன்றியுடன்
- குடும்பத்தினர்-

(3687)



## விற்பனைக்குண்டு

புறோயிலர் சுத்தம் செய்தது 1Kg 430/- அத்தோடு கலபேட், பேரன்ஸ், ஊர்ச்சேவல் விற்கப்படும்.
தாசன் பாம், 158/2, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
(3709)



## யாரிடம் பேசுவது?

யார் என்னை புரிந்து கொள்வார்? நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்? நான் என்ன தவறு செய்தேன்? என்னால் ஒன்றுமே முடியாது! நான் என்ன செய்வது?

எம்முடன் பேசுங்கள்
**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தினந்தோறும் காலை 9 மணி தொடக்கம்
நண்பகல் 1 மணி வரை
• மத சார்பற்றது • ரகசியம் பேணப்படும்
021 222 8117 077 900 8776
Sponsored by enlightenment circle an arm of Saiva munnetta sangam UK
(C-3808)


## இராசி பலன்

27.02.2016
(மாசி 15, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு
சதுர்த்தி காலை 7.29 மணிவரை
சித்திரை பிற்பகல் 5.08மணிவரை
சுபநேரம் 3.29-4.59மணிவரை
இராகுகாலம் 9.29-10.59 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சூரி புத கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பூரட்டாதி, உத்தரட்டாதி | | |
| சுக் | | | குரு ராகு |
| | சனி செவ் | சந் | |

**மீனம்:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை, போசன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**மேடம்:** மறக்க முடியாத இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் கைகூடும், வருமானம் திருப்திதரும்.

**இடபம்:** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், வெளியூர்த் தொடர்புகள் நன்மைதரும், பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கும்பம்:** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொலைபேசித் தகவல் மனக் குழப்பத்தை அகற்றும், போசன சுகமுண்டு.

**கடகம்:** பெற்றோர் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மகரம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வருமானம் திருப்திகரமானதாக அமையும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொட்ட காரியம் வெற்றி பெறும்.

**சிம்மம்:** உறவு பகை பாராமல் உதவும் நாள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**தனுசு:** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய பொருட்சேர்க்கையுண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும், சிந்தனை மிகுதியான நாள்.

**துலாம்:** உறவினர் தொடர்பான சில காரியங்களுக்காக சற்று அலைய நேரிடலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், தேக நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**கன்னி:** சுயமுயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், வீட்டுத்தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் மேலோங்கும்.

# யாழ்.நகரின் வீதியோரங்களில் கண்காணிப்பு கமராக்கள்

யாழ்.நகரின் வீதியோரங்களில் விசேட கண்காணிப்புக் கமராக்கள் விரைவில் பொருத்தப்படவுள்ளதாக யாழ். மாநகரசபையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்துள்ளார்.

செம்மணி வீதியில் பொதுமக்களாலும் வேறுதரப்பட்டவர்களாலும் கழிவுப் பொருள், குப்பை கொட்டுதல் தொடர்பாக யாழ்.மாநகர சபையினால் அறிவிக்கப்பட்டும் அவ் அறிவித்தல் தொடர்பில் எவராலும் கவனம் செலுத்தப்படவில்லை.

இதனால் இது தொடர்பாக யாழ். மாநகர சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கலந்துரையாடல் ஒன்று கடந்த 23 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு யாழ். மாநகர சபையில் இடம்பெற்றது. வடமாகாண முதலமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்கமாநகரசபைஆணையாளர் பொ.வாகீசன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் செம்மணி வீதியில் குப்பை கொட்டுதல் தொடர்பான படரீதியான முன்வைப்பு காட்சிப்படுத்தப்பட்டது.

தொடர்ந்து அக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில், யாழ். நகரை அழகுபடுத்துவதற்கு வீதியோரங்களில் மரங்கள் நடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் வீதியோரங்களில் கவனயீர்ப்புப் பதாகைகள், பெயர்ப் பலகைகள் என்பன அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதேவேளை கவனயீர்ப்பு பதாகைகள் யாழ்.மாநகர சபையின் நிதியில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் பெயர்ப்பலகைகள் அந்தந்த உள்ளூராட்சி அமைப்புக்களின் நிதியில் அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

மேலும் வீதியோரங்களில் கண்காணிப்பு கமரா (CCTV Camera) பொருத்தி கண்காணிப்பை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் செம்மணி வீதியில் தெரு மின் விளக்குகளை (Street Lamps) அமைக்கத் தீர்மானிக்கப்பட்டதுடன் இதற்கான வலி.கிழக்கு பிரதேச சபையினதும் நல்லூர் பிரதேச சபையினதும் ஒப்புதல் பெறப்பட்டது.

பெரிய தெரு மின் விளக்குகளை அமைத்துத் தரும்படி இலங்கை மின்சார சபையிடம் இரு உள்ளூராட்சி அமைப் புக்களும் தனித்தனியே கோரிக்கை விடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

20 microns இற்கு குறை ந்த தடிப்புடைய பொலித்தீன் பாவனையை தடை செய்வதற்காக மத்திய சூழல் அதிகார சபையிடமிருந்து 20 microns இற்கு குறைந்த தடிப்புடைய பொலித்தீன் மாதிரிகளை (Samples) பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

பத்திரிகையில் 20 microns இற்கு குறைந்த தடிப்புடைய பொலித்தீன் பாவனையை தடை செய்தல் மற்றும் பிளாஸ்ரிக் எரிப்பதை தடை செய்தல் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செய்திகளை பிரசுரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் செம்மணி வீதியில் குப்பை கொட்டுதலை கண்காணிப்பதற்கு கண்காணிப்புக் குழுவும் அமைக்கப்படவுள்ளது. இதற்கமைய கண்காணிப்புக் குழு உறுப்பினர்களாக வலி.கிழக்கு பிரதேச சபை உப அலுவலகம், கோப்பாய் (பு.லிங்கநாதன், வருமானப் பரிசோதகர், சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலடி, கல்வியங்காடு -077 978 8718)

நல்லூர் பிரதேச சபை (சி.சிவதாசன், மின்னியலாளர், கலா சாலை வீதி, திருநெல்வேலி-077 873 6971)

பாரதி சனசமூக நிலையம் (த.ரூபன், செயலாளர், பாரதி வீதி, நாயன்மார்கட்டு- 077 901 4403)

நாயன்மார்கட்டு சனசமூக நிலையம் (சா.பத்மநாதன், பொருளாளர், இல.81 அம்பாள் வீதி, நாயன்மார்கட்டு -077 970 2508)

மாநகர சபை ( ஏ.அருண்ராஜ், சுகாதார மேற்பார்வையாளர், அரியாலை, இல.3/8, சென்.பெனடிக்ற் வீதி, அரியாலை- 077 615 8879, 071 862 7651)

சுற்றுச்சூழல் பிரிவு- பொலிஸ் நிலையம் (சுற்றுச்சூழல் பொலிஸாரின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்காக தலைமைப்பீட பொலிஸ் அதிகாரிக்கு சுற்றுச்சூழல் பிரிவிலிருந்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை கண்காணிப்புக்கு ழுவின் பிரதிநிதியாக நியமிக்கக் கோரி கடிதம் வரைவதற்கு எனவும் தீர்மானிக்கப்பட்டது)

கண்காணிப்புக்குழுவின் இணைப்பாளராக மாநகர சபையின் நவீன சந்தை பொறுப்பு உத்தியோகத்தரான எஸ்.சிவேஸ்வரன் (தொலைபேசி இலக்கம்- 077 706 1181) நியமிக்கப்பட்டார். இக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடானது நேற்று முதல் ஆரம்பிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிகளின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.சட்டநாதர் கோவில் வீதியில் அமைந்துள்ள இளம் கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-5)

## சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலேஸ்வரம் அருள்மிகு நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வர சுவாமி திருக்கோவில் மஹோற்சவ விஞ்ஞாபனத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 7 ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து அன்றைய தினம் இரவு சிவராத்திரி விழா சிறப்பு பூஜைகளும் இடம்பெறும்.

8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கண்டகி தீர்த்தத்தில் தீர்த்த உற்சவமும் நடைபெறும். (இ-5)

## மண்டைதீவு மகாவித்தியாலய அபிவிருத்திக் கூட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மண்டைதீவு மகா வித்தியாலயத்தின் அபிவிருத்தி தொடர்பான கூட்ட்ம் ஒன்று நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு மண்டைதீவு மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில்ஆர்வமுள்ளஅனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-5)

## கலைஞர்கள் கௌரவிப்பு



ஈழத்துக் கலைஞர்களின் பங்களிப்பில் இலங்கை தமிழ்சினிமா பிறிலியன்ட் கிரிகேசன்ஸ் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட கீறல்கள் என்ற திரைப்படக் கலைஞர்கள் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர்.

## வடமாகாண ஆளுநரை மக்கள் சந்திக்க ஏற்பாடு

### பிரச்சினைகளை நேரில் எடுத்துக் கூறலாம்

வட மாகாணத்தில் உள்ள பொது மக்கள் தமது தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரேயை சந்தித்து தெரிவிப்பதற்கான ஏற்பாடுகள் எதிர்வரும் மார்ச் மாதத்தில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதனடிப்படையில் வடமாகாணத்தைச் சேர்ந்த அனைத்து பொதுமக்களும் இன, மத பேதமின்றி வடமாகாண ஆளுநரை சந்தித்து கலந்துரையாட முடியும்.

யாழ்ப்பாணத்திலுள்ள வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில் எதிர்வரும் மார்ச் 2 ஆம் திகதி முதல் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் இவ்வாறான பொதுமக்கள் சந்திப்புக்கள் இடம்பெறும் எனவும் குறித்த நாளில் மக்கள் வருகை தந்து ஆளுநரை சந்திக்குமாறு ஆளுநர் அலுவலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

சுழிபுரம் வடகிழக்கு சோழியபுரம் சாத்தாவோலை அருள்மிகு சம்புராதேஸ்வரி சமேத சம்பு நாதேஸ்வரர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 7ஆம் திகதி சிவராத்திரி விசேட பூஜையும் நடைபெறும். (இ-5)

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி -பருத்தித்துறை கொட்டடி அருள்மிகு சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. இதற்கமைய எதிர்வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 8 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (இ-5-60)




## வீடுகளிலுள்ள பயன்படுத்த முடியாத கழிவுகள் தொடர்பில் அறியத்தரவும்

வீடுகளில் பெருமளவிலான கழிவுப் பொருட்கள் பயன்படுத்த முடியாதவாறு காணப்படின் அது தொடர்பாக உடனடியாக பருத்தித்துறை நகராட்சி மன்றத்துடன் தொடர்பு கொள்ளுமாறு நகராட்சி மன்றச் செயலாளர் பு.ரமேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொலித்தீன் பாவனையைக் குறைத்தல், மரணச்சடங்கின் போதும் பட்டாசு வெடி கொளுத்துவதனை தவிர்த்தல், கடற்கரையோரங்களில் சேதமான மீன்பிடி வலைகள், மிதப்பான்கள் போன்றவற்றை கைவிடுவதனை தவிர்த்தல், சமையலறைக் கழிவு நீர் மற்றும் இதனை ஒத்த கழிவு நீரினை இயற்கை நீரோட்டத்திற்கென அமைக்கப்பட்ட வெள்ளவாய்க்கால்களில் விடுவதனை நிறுத்தி வீடுகளில் குழிகளை அமைத்து விடுவதற்கு நடவடிக்கை எடுத்தல், வதிவிட சுற்றுப்புறங்கள், வெற்றுக்காணி களை துப்புரவாக வைத்திருப்ப தோடு வீட்டுக்கழிவுப்பொருட்களை வீதிகளில் வீசுவதனை தவிர்த்தல், உக்காத கழிவுப் பொருட்களான பிளாஸ்ரிக், தகரப் பேணிகள், போத் தல்கள் போன்றவற்றை வேறாகப் பொதிகளில் பொதியிட்டு வீதியோரத்தில் வைத்தல், இலைகள், ஓலைகள், குழைகள், வாழைத்தண்டுகள் போன்றவற்றினை இயற்கைப் பசளையாகப் பயன்படுத்தல், வீடுகளில் பெருமளவிலான கழிவுப் பொருட்கள் பயன்படுத்த முடியாதவாறு காணப்படின் அல்லது கழிவுநீர், மலசலகூட கழிவகற்றல் போன்றவற்றுக்கு நகரசபையின் கழிவகற்றலுக்கான கட்டணம் செலுத்திய சேவையை பெற்றுக்கொள்ளல் போன்றவையாகும்.

இது தொடர்பான முறைப்பாடுகளுக்கும் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் 021 226 3213 - நகராட்சி மன்ற அலுவலகம், 077 999 1817- நகராட்சி மன்றச் செயலாளர், 077 954 5533-பொதுசுகாதார பரிசோதகர், 077 186 4885- சுகாதார மேற்பார்வையாளர் என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு பருத்தித்துறை நகராட்சி மன்றச் செயலாளர் பு.ரமேஸ்வரன் மேலும் அறிவித்துள்ளார். (இ-5)

## காத்தவராயன் கூத்து நாளை

பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் கலைப்பண்பாட்டு மன்றம் வழங்கும் காத்தவராயன் சிந்து நடைக் கூத்து நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணிக்கு பண்டத்தரிப்பு தாளையடி மறுமலர்ச்சி மன்றத்தின் தியாகராஜா மகேந்திரன் உள்ளரங்கில் நடைபெறவுள்ளது.

ஏ.எஸ்.சந்திரன் நெறியாள்கையில் இச் சிந்து நடைக் கூத்து இடம்பெறவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5-17)

## விசேட செயலமர்வு

கை கொடுக்கும் நண்பர்களுக்கான ஸ்ரீலங்கா சுமித்திரயோ கிளையின் யாழ்.கிளையினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விசேட செயலமர்வு ஒன்று நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல்10மணிக்கு இல.104, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ்.கிளை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வுக்கு புதிதாக இணைந்து கொள்ள விரும்பும் அனைத்து தொண்டர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.கிளையின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-5-17)


# மிருக பலியிடுதலைத் தடை செய்யும் சட்டத்திற்கு மாமன்றத்தின் ஆதரவு

மிருக பலியிடுதலைத் தடைசெய்யும் சட்டத்தை அகில இலங்கை இந்து மாமன்றம் வரவேற்றுள்ளது. எமது சமயத்தின் பெயரால் மிருக பலி நடத்தப்படுவதை அகில இலங்கை இந்து மாமன்றம் எப்போதும் கண்டித்து வந்துள்ளதுடன் அதனை முற்றாக நிறுத்துமாறு வேண்டுகோள்களையும் அறிவுறுத்தல்களையும் விடுத்து வந்துள்ளது.

இந்து வழிபாட்டுத் தலங்களிலும் அதன் சூழல்களிலும் மிருக பலியை முற்றாக தடைசெய்யும் சட்டத்தை செயற்படுத்த மீள் குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் சுவாமிநாதன் முயற்சி எடுத்து வருவதையறிந்து அகில இலங்கை இந்து மாமன்றம் மகிழ்ச்சியடைகிறது. அந்தப் புனித முயற்சிக்கு மாமன்றம் முழுமையான ஆதரவைத் தரும் என்பதுடன் இந்து மக்கள் அவ்வாறான மூடச் செயல்களில் ஈடுபட வேண்டாமென்றும் அறிவுரை கூறுகின்றோம்.

அமைச்சர் சுவாமிநாதன் விழிப்புணர்வுப் பிரசாரங்களை ஆரம்பிக்க வேண்டுமெனவும் அதற்கு இலங்கையிலுள்ள அனைத்து ஆலய தர்மகர்த்தாக்களும் பூரண ஆதரவு நல்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறோம் என இந்து மாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் தெரிவித்துள்ளார். (இ)

# இணையத்தள அங்குரார்ப்பணம்



யாழ்ப்பாணம் மாநகர சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உத்தியோகபூர்வமாக நேற்று வெள்ளிக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். மாநகர ஆணையாளர் பொன்னம்பலம் வாகீசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் http://jaffna.mc.gov.lk என்ற மாநகர இணையத்தளம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. பொதுமக்கள் குறைகேள், பொதுமக்கள் ஆலோசனைகள் ஆகியவற்றை பதிவிடக்கூடிய வகையில் இந்த இணையத்தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் மாநகர சபை ஊழியர்களும் கலந்துகொண்டனர். (படங்கள்- உ.சாளின்,கொழும்புத்துறைச்செய்தியாளர்)

# அத்தநாயக்கவிற்கு எதிரான விசாரணை சட்டமா அதிபரிடம்

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரும், முன்னாள் சுகாதார அமைச்சருமான திஸ்ஸ அத்தநாயக்கவிற்கு எதிரான விசாரணை சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஊடக அமைச்சர் கயந்த கருணா திலக்க இந்த தகவலை நாடாளுமன்றில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் போலி ஆவணம் தயாரித்ததாக திஸ்ஸ அத்தநாயக்க மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டு குறித்து புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி அந்த அறிக்கையை சட்டமா அதிபரிடம் ஒப்படைத்துள்ளதாக தெரிவித்தார்.

போலிஆவணம்தயாரிப்பு தொடர்பில்திஸ்ஸ அததநாயக்கவிற்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும், தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் இரகசிய ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட் டுள்ளதாகவும் அது நாட்டுக்கு பாதகமானது எனக் கூறிய திஸ்ஸ அத்தநாயக்க ஊடகங்களில் ஆவணங்களை சமர்ப்பித்திருந்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின், பரிந்துரைகளை அமுல்படுத்துவதாகவும், வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ள படையினரை 50 வீதத்தினால் குறைப்பதாகவும், காணிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைப்பதாகவும் இரகசிய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என திஸ்ஸ அத்தநாயக்க 2014 டிசெம்பர் மாதம் 22 ஆம் திகதி ஊடக சந்திப்பு ஒன்றின் மூலம் தெரிவித்திருந்தார்.

சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்த மைத்திரிபால சிறிசேனவும் ரணில் விக்கிரமசிங்கவும் இரகசிய உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளதாகத் தெரிவித்திருந்தார். இந்த ஆவணத்தையும் அத்தநாயக்க ஊடகங்களில் சமர்ப்பித்திருந்தார். எனினும், இந்த ஆவணத்தில் ரணில் மற்றும் மைத்திரிபால சிறிசேனவின் கையொப்பங்கள் போலியான முறையில் இடப்பட்டிருந்தமை விசாரணைகளின் மூலம் தெரிய வந்தது. இதனைத் தொடர்நது திஸ்ஸ அத்தநாயக்க கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (இ)


## ஆசீர்வாதங்கள்



ஷஷ்டி அபித பூர்த்தி (மணிவிழா) காண இருக்கும் E.S.P. நாகரத்தினம் தம்பதிகளை இணுவில் காயத்ரிபீடம் தர்மசாஸ்தா குருகுல ஆசிரிய மாணவர்கள் ஆசீர்வதிக்கிறார்கள்.

சிவாகம ஞான பாஸ்கரன்
சிவ ஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்,
தர்மசாஸ்தா குருகுலம், இணுவில்.



## CAMBRIDGE ENGLISH

**PET** UNIVERSITY OF CAMBRIDGE



August மாதத்தில் A/L பரீட்சைக்குத் தோற்றி மருத்துவ பொறியியல், விவசாய, விஞ்ஞானமுகாமைத்துவம் போன்ற பாட நெறிகளை பல்கலைக்கழகங்களில் ஆங்கில மொழி மூலம் கற்க இருக்கும் மாணவர்கள் தங்கள் ஆங்கில அறிவைக் கூட்டிக் கொள்ளவும், பல்கலைக்கழகங்களில் எந்தவித சிரமமுமின்றி விரிவுரைகளைக் கேட்கவும், ஒப்படைகளை எழுதவும் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள அரிய சந்தர்ப்பம்.

**Exam Date 27.05.2016-Colombo**

- Around 4 million people a year take cambridge English exam
- 13000 universities and employers globally recognise our certificates
- Cambridge have an international network of 2,700 authorised exam Centres in 130 countries
- 40,000 Schools and institutions prepare students for cambridge English exam
- Cambridge have 100 years of experience and expertise in English language assessment
- நீங்கள IELTS பரீட்சை எடுப்பதற்கு விருப்புவீர்களானல், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாடநெறியைப் பின்பற்றிய பின் IELTS வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும்

**FCE** Cambridge First Certificate in English

FCE is an upper intermediate level exam.It tests the ability to deal confidently with range of written and spoken. communication.FCE is the most widely taken of the general English exam.with over 250,000 candidates every year. this exam is at CEFR level B2. Exam Date:07.06.2016

**Course Schedule**

| | Mo,tuse, wed,thue | Saturday & Sunday |
|---|---|---|
| Duaration | 10 week | 10 week |
| Time | 10.30-12.30 | 2.00-5.00 |

புதிய பிரிவுகள்
01.03.2016
இல் ஆரம்பமாகும்

**BRITISH COLLEGE OF ENGLISH**
NO.192,Navalar Road,Jaffna.
(பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
Tel: 021 222 0384,077 880 3887



## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா:42செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்O/L/பிரான்ஸ் NOT PR<br>தொ.இ: B/5552 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 55சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்A/L/தனியார் தொழில<br>தொ.இ: G/4501 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 33செவ் 4 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:O/Lமலேசியா<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/5553 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 57செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்HNDIT/அரசதொழில<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4502 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 18<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc, MSc லண்டன் NOT PR<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/5555 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 15சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/4507 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 49<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்IT/வங்கியாளர் கடை<br>தொ.இ: B/5557 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 40சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BBA/கணக்காளர்<br>தொ.இ: G/4512 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



இவ்வாண்டிற்கான பொலிஸ் அதிகாரிகளின் திறமைகளை ஆய்வு செய்கின்ற நிகழ்வு நேற்றுக்காலை 7 மணியளவில் மாங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.எம்.ஏ. மாலன் பெரேராவின் ஒழுங்குபடுத்தலில் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ்.பி.சரத்குமார ஜோசப் சிறப்பு விருந்தினராக வருகை தந்து இந்தக் கண்காணிப்பில் ஈடுபட்டார். (படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# கட்டமைப்பு சார் இன அழிப்புக்கு எதிரான ஜனநாயக ரீதியான போராட்டங்கள் தொடரும்

## சிறிதரன் எம்.பி.திட்டவட்டம்

(கிளிநொச்சி)

எம்மை எம் மண்ணில் நிம்மதியாக, கௌரவமாக, சுதந்திரமாக வாழவிடுங்கள் என்றே எம் மக்கள் கேட்கிறார்கள். தமிழர்கள் வன்முறை மீதோ போரின் மீதோ விருப்புக் கொண்டவர்களல்லர்.

எமது தேசத்தின் மீது திணிக்கப்பட்ட போருக்குள் வாழ நாம் நிர்ப்பந்திக்கப்பட்ட போதும் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் சமாதானத்துக்கான வாசல் கதவைத் திறந்தவர்கள் தமிழர்கள்.

கட்டமைப்புசார் இன அழிப்பு எம் மண்ணில்தொடரும்வரை அடக்குமுறையும் ஆக்கிரமிப்பும் எமது மண்ணை விட்டகலும் வரை எமது இனத்தின் இருப்புக்கும் அதன் அடையாளத்துக்குமான ஜனநாயக ரீதியிலான போராட்டங்கள் தொடரும் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் இடம்பெற்ற அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பான அமர்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதாக அறிவிக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் முடிவடையப் போகிறன. நல்லாட்சி அரசாங்கமென்று கூறப்படும் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஓராண்டு நிறைவடைந்துவிட்டது.

ஆயினும் தமிழ் மக்களின் வாழ்வில் குறிப்பிடத்தக்க பெரும் சாதகமான மாற்றங்கள் எதுவும் நிகழவில்லை. இயல்பு வாழ்வுக்காக எமது மக்கள் ஏக்கத்தோடு காத்திருக்கிறார்கள். வடக்கு, கிழக்கில் சுமார் 95 ஆயிரம் கணவனை இழந்த பெண்கள் வாழ்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான சிறார்கள் தமது எதிர்காலம் தொடர்பான கேள்விக்குறியோடு வாழ்கிறார்கள்.

ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 679 பேருக்கு என்ன நடந்ததென்பது தெரியாமல் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் ஏக்கத்தோடு வாழ்கிறார்கள். காணாமற்போகச் செய்யபபட்ட தமது உறவுகளுக்கு என்ன நேர்ந்ததென்பதை அறியுமுகமாக அவர்களது குடும்பத்தினரும் உறவினர்களும் தொடர போராட்டங்களில ஈடுபட்டுள்ளார்கள். எமது பகுதிகளில் இராணுவ ஆக்கிரமிப்பு இன்னமும் தொடர்கின்றது.

இலங்கை பல மொழிகளை, பல இனங்களை, பல மதங்களை பல பண்பாடுகளைக் கொண்ட ஒரு நாடு என்பதை எழுத்தில் மட்டும் கொண்டிராமல் அன்றாட வாழ்விலும் நடைமுறைப்படுத்திக் காட்டுவதற்கான சூழல் எழுந்துள்ளது. இதனை வெற்றிகரமாக அமுல் படுத்தாமல்போனால் இலங்கைத் தீவில் தொடரும் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண முடியாது.

போரின்போது சர்வதேச சட்ட மீறல்களில் ஈடுபட்டவர்களை நீதியின்முன் நிறுத்தி அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதற்கான நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்துச் செயற்பட வேண்டும்.

அரசியல் மாற்றங்களைத் தொடர்ந்து ஆர்ஜென்ரீனாவில் ஐந்து நாட்களிலும் பெருவில் ஒரு மாதத்திலும் சிலியில் இரண்டு மாதங்களிலும் கிழக்குத் திமோரில் நான்கு மாதங்களிலும் சியாரா லியோனில் சுமார் எட்டு மாதங்களிலும் நிலைமாற்றுக் கால நீதி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால் இலங்கையில் அத்தகைய விரைவுத் தன்மையையோ அல்லது அதற்கான அரசியல் திடசங்கற்பத்தையோ காணமுடியவில்லை.

அத்துடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் ஆக்கபூர்வமான வேலைத் திட்டங்களை இதுவரை முன்னெடுக்கவில்லை. இது பாதிக்கப்பட்டு நீதிக்காக ஏங்கிக்கொண்டிருக்கும் மக்களுக்கு ஆத்திரத்தையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே புதிதாக உருவாக்கப் படவுள்ள அரசியலமைப்பானது போர்க்குற்றம், மானுட குலத்துக்கு எதிரான குற்றம் மற்றும் இன அழிப்பு போன்ற சர்வதேச சட்ட மீறல் குற்றங்களில் ஈடுபட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைப்பதற்கு வழியேற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

சிங்கள மக்களின் உரிமைகள் மறுக்கப்படும்போது நாம் அதற்கெதிராகக் குரலெழுப்புவோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(2-3-281)




## அரசினர் ஆயுர்வேத வைத்தியசபையின் நடமாடும் சேவை

(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஆயுர்வேத சித்த வைத்தியர்களது நலனை நோக்கமாகக் கொண்டு எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை அரசினர் ஆயுர்வேத வைத்திய சபையின் ஏற்பாட்டில் கிளிநொச்சி நகரில் நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள்பணிமனையில்அன்றைய தினம் காலை 8.30 மணி முதல் பிற்பகல்ஒரு மணிவரை இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

இதில் வைத்திய சான்றிதழ் புததகங்களைப் பெற்றுக் கொள்ளல, வைத்திய அடையாள அட்டை பெற்றுக் கொள்ளல், சாராம்சத்துடனான தமிழ் மற்றுமு சிங்களப் பிரதிகள் வழுங்கல், ஆயுர்வேத வைத்திய சாலையில் பதிவு செய்யப்பட்ட ஆங்கில சான்றிதழ் நிழற்பிரதி வழங்கல் உள்ளிட்ட பல்வேறுபட்ட சேவைகள் இடம்பெறும் என ஆயுர்வேத வைத்திய சபை பதிவாளர் வைத் தியர் ஆர்.எல். ரணசிங்க தெரிவித் துள்ளார்.

அத்துடன் வைத்தியசபையில் பதிவு செய்யப்பட்ட சர்வதேச சான்றிதழ் வழங்குதல், பெயர் மாற்றக் கடிதம், வாகனத்திற்கான அனுமதி, வைத்திய பதிவினை புதுப்பித்தல் ஆகியவற்றையும் மேற்கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2-3-281)

## திறக்கப்படாதுள்ள ஒலுமடு அரிசி ஆலை மின்சாரம் கிடைத்தால் திறக்கப்படும்



(திருமுறிகண்டி)

ஒட்டுசுட்டான் ஒலுமடுவில் கடந்த 2013 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட அரிசி ஆலை மற்றும் நெற்களஞ்சியம் என்பன இதுவரை திறக்கப்படாமையால் தாம் சிரமங்களைஎதிர்கொள்வதாகவும் இதனைத் திறப் பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஒலுமடுவில் கடந்த 2013 ஆம் ஆண்டு சேவாலங்கா நிறுவனத்தின் நிதியுதவியில் மம்மில் விநாயகர் விவசாய கம்பனியினால் அமைக்கப்பட்ட அரிசி ஆலை மற்றும் நெற்களஞ்சியம் என்பன இதுவரை திறக்கப்படவில்லை.

இதனால் இக் கட்டடத்தை சூழ்ந்து பற்றைகள் மண்டிக் கிடக்கின்றன.

இவ் அரிசி ஆலைக்குப் பதிலாக மாங்குளம் அரிசி ஆலைக்குத் தாம் செல்லவேண்டியுள்ளதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக கம்பனி நிர்வாகத்திடம் வினவிய போது தமக்கு இன்னும் மின்சாரம் கிடைக்கவில்லை எனவும் மின்சாரம் கிடைத்ததும் கட்டடம் திறக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கிளிநொச்சி 155 ஆம் கட்டையில் கடந்த 2010 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட எண்ணெய் தொழிற்சாலைக் கட்டடமும் இதுவரை திறக்கப்படாமை குறித்து தெங்கு உற்பத்தியாளர்கள் விசனம் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (2-3-31)

## இளைஞர் கழக கரைதுறைப்பற்று பிர.சம்மேளனப் பொதுக்கூட்டம்

(தண்ணீரூற்று)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முகாமையில் இயங்கும் அரச அங்கீகாரம் பெற்ற இளைஞர் கழகத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சம்மேளனத்தின் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அங்கத்துவம் வகிக்கும் 46 கழகங்களில் ஒவ்வொரு கழகங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் அனைவரையும் தவறாது பங்கேற்கும் படி மேற்படி இளைஞர் சேவைகள் மன்றத்தின் அதிகாரி எம்.என்.எம். துசான் கேட்டுள்ளார்.

இளைஞர் கழகத்தின் மூலம் சிறந்த ஆளுமை மிக்க இளைஞர்களை உருவாக்கும் செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

இதனடிப்படையில் தலைமைத்துவப் பயிற்சி, தொழில் வழிகாட்டல் தொழிற்பயிற்சி, வெளிநாட்டு, உள்நாட்டு இளைஞர் பரிமாற்றுத் திட்டம், விளையாட்டுப் போட்டி, கலை கலாசார போட்டிகள் என்பன நடத்தப்படுகின்றன.

இளைஞர் கழகங்களின் பிரதேச அமைப்பாக பிரதேச சம்மேளனம் இயங்குகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (2-292)

## வடக்கு மாகாண சபை உறுப்பினரின் நிதியொதுக்கீட்டில் அபிவிருத்தி சங்கங்களுக்கு அலுவலக உபகரணங்கள்

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசனின்2015 ஆம் ஆண்டுபிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டின் மூலம் கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச செயலகங்களின் கீழுள்ள கிராம, மாதர் அபிவிருத்திச் சங்கங்களுக்கு பிளாஸ்ரிக் கதிரைகள், அலுவலக மேசைகள், அலுவலக அலுமாரிகள் என்பன அண்மையில் மணற்குடியிருப்பு பார் வீதியிலுள்ள மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்கள களஞ்சிய சாலையில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

இந்த வகையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் உள்ள பழம்பாசி, ஒலுமடு, செல்வபுரம், இந்துபுரம், கூழாமுறிப்பு ஆகிய கிராமங்களின் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு தலா 60 பிளாஸரிக் கதிரைகள், பெரிய இத்திமடு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு 18 பிளாஸ்ரிக் கதிரைகள், 2 அலுவலக மேசைகள், ஒரு அலுவலக அலுமாரி, பனிச்சங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு 28 பிளாஸ்ரிக் கதிரைகள், ஒரு அலுவலக மேசை, ஒரு அலுவலக அலுமாரி என்பன வழங்கப்பட்டன.

கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவின் கீழுள்ள பூதன் வயல், முள்ளிவாய்க்கால் கிழக்கு, கொக்கிளாய் கிழக்கு ஆகிய கிராமங்களின் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கும் சிலாவத்தை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கும் தலா 60 பிளாஸ்ரிக் கதிரைகள் வழங்கி வைக்கப்பட்டன.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிலுள்ள வள்ளுவர்புர கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு 42 பிளாஸ்ரிக் கதிரைகள், ஒரு அலுவலக மேசை என்பன வழங்கி வைக்கப்பட்டன.

இதேவேளை துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலக பிரிவின் கீழுள்ள கிராம மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு மொத்தம் 645 பிளாஸரிக் கதிரைகள் பிறிதொரு தினத்தில் துணுக்காய் மாந்தை கிழக்கு பிரதேசங்களில் வைத்து வழங்கப் படவுள்ளதாக மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பி.மாலினி தெரிவித்துள்ளார். (2-3-302)

# தண்டனை வழங்காவிடின் தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகிவிடும்

## ஹரிஸ்ணவியின் படுகொலைக்கு நீதி கேட்டு மன்னாரில் போராட்டம்





பாலியல் வன்புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்ட வவுனியா விபுலானந்த கல்லூரி மாணவி ஹரிஸ்ணவியின் படுகொலையை கண்டித்து மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் நேற்று மு.ப 11.15 மணியளவில் மன்னார் அரச பேருந்து தரிப்பிடத்தில் இப் போராட்டம் இடம் பெற்றது.

பாலியல் வன்புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்ட வவுனியா விபுலானந்த கல்லூரி மாணவி ஹரிஸ்ணவியின் மரணத்துடன் தொடர்புடையவர்கள் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும் எனவும், இனிவரும் காலங்களில் இலங்கையின் பொலிஸ் துறையும் அதனுடன் இணைந்த ஏனைய சிவில் மற்றும் சமூக அமைப்புக்கள் என்பவற்றுடன் இணைந்து மக்களையும், மாணவர்களையும், இளம் சிறார்களையும் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளில் முழு மூச்சாக ஈடுபட வேண்டும் என கோரி குறித்த கவனயீர்ப்பு போராட்டம் இடம் பெறவுள்ளது.

கவனயீர்ப்பு போராட்டத்தில் வடமாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன்,வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன், மன்னார் சமாதான அமைப்பின் தலைவர் பீ.ஏ.அந்தோனி மார்க்.மன்னார் நகர சபையின் முன்னாள் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம்,மன்னார் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் மாட்டீன் டயேஸ், பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள்,சமூக ஆர்வலர்கள், மதத்தலைவர்,பொது மக்கள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பு இயங்கிய காலத்தில் இவ்வாறான கேவலமான சம்பவங்கள் தமிழர் தாயகத்தில் எங்கே யாவது நிகழ்ந்ததுண்டா? என ஜனாதிபதியிடம் கேள்வியெழுப்பியுள்ள மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியம் நாட்டில் இடம்பெறும் பாலியல் குற்றங்களுக்கு சிறப்பு நீதிமன்றம் அமைக்கவும் ஜனாதிபதியிடம் கோரியுள்ளது.

மன்னாரில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் முடிவில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மேற்படி விடயம் தொடர்பாக நாட்டில் அண்மைக்காலமாக ஜனநாயக அத்துமீறல்களும் தான்தோன்றித்தனமான தன்னதிகாரச்செயற்பாடுகளும் வரன்முறைக்குட்பட்ட நிர்ணய நிலையியலுக்கு அப்பால் எல்லைமீறி தொல்லை கொடுக்கும் துயரச் சம்பவங்கள் தூபமிடுகின்றன.

கடந்த வருடத்தில் நடைபெற்ற புங்குடுதீவு மாணவி வித்தியாவின் வன்கொடுமை மரணம் நிகழ்ந்தது ஒரு வருடம் அண்மித்த நிலையில் உங்கள் சட்ட ஆட்சி அல்லது நல்ல ஆட்சி சாதித்தது என்ன?

உங்கள் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்படும் எனும் வாக்குறுதி கானல் நீராகி கரையேறிவிட்டதா? எனவே உங்கள் வாக்குறுதிகளை எதிர்காலத்தில் நாம் எப்படி நம்புவது? சிறுவர் துஷ்பிரயோகமும் பாலியல் வன்கொடுமைகளும் நாளொன்றுக்கு பல நூறு சம்பவங்கள் இடம்பெறுகின்றன. வெளிவருபவை ஒரு சிலதே. இதை தடுக்க வேண்டிய சட்டம் இருட்டறையில் நித்திரை கொள்கிறதா?

வித்தியாவின் வழக்கிற்கே இதுவரை குற்றப்பத்திரம் தாக்கல் செய்யாத உங்களின் சட்டக் கட்டமைப்பு சேயாவின் படுகொலையிலும் இதுவே தொடர்கிறது. ஹரிஸ்ணவியின் கொலையாளியை இதுவரை கண்டுபிடிக்க முடியாத அளவில் மிகப் பலவீனமான முறையிலா தங்களின் புலனாய்வுக் கட்டமைப்பு இயங்குகின்றது. வழக்குகளையும் வசாரணைகளையும் ஆணைக்குழுக்களையும் சந்தித்து அலுத்துப் போனவர்கள். எனவே அவசரமாக நடைமுறையில் உள்ள குற்றவியல் தடுப்புச்சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டு வந்து இவ்விதமான சிறுவர் வன்கொடுமைக் கொலைகளிற்கு விரைவாக தண்டனை கிடைப்பதற்கு வழிவகுப்பதுடன் அத் தண்டனை வினோதமான முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு வலுவேற்ற வேண்டும். ஆகவே அவ் விதமான அதி பயங்கரமான தண்டனை வழங்கா விட்டால் தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகவே போய்விடும்.

எனவே உங்களாலும் சில சர்வதேச நாடுகளாலும் பயங்கரவாதிகள் என்று சொல்லப்பட்ட தமிழ்மக்களின் நம்பிக்கைக்குரிய விடுதலைப் புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பு இயங்கிய காலத்தில் இவ்வாறான கேவலமான சம்பவங்கள் தமிழர் தாயகத்தில் எங்கேயாவது நிகழ்ந்ததுண்டா? அவர்களால் மட்டும் இக்கட்டமைப் புக்களை சரியாக செயற்படுத்த எப்படி முடிந்தது என்பதை நீங்கள் ஆராய வேண்டும். ராஜபக்ஷ ஆட்சிக்கும் உங்கள் ஆட்சிக்கும் பெரிய இடைவெளி இருப்பதாக எமக்கு தெரியவில்லை. எனவே எமது வேண்டுகோளை ஏற்றுணர்ந்து சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவீர்கள் என நம்புகின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-3-4-28)

# துணுக்காய் கல்வி வலயத்தில் வலய வாரியத் திட்டம்

## திங்களன்று அங்குரார்ப்பணம்

(மல்லாவி)

வடக்குமாகாணத்தின்கல்வி சீரமைப்பு பரிந்துரைகளில் ஒன்றான ஒவ்வொரு வலயங்கள் தோறும் வலய வாரியத்தை உருவாக்கி அதனூடாக எதிர்கால கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்லும் திட்டத்தில் முதல் தெரிவு வலயமாக துணுக்காய் கல்விவலயம்தெரிவாகியுள்ளது.

இதன் அங்குரார்ப்பண வைபவமும் உறுப்பினர்கள் பதவிப் பிரமாண நிகழ்வும் நாளை மறுதினம் திங்கட்கிழமை துணுக்காய் கல்வி வலயத்தில் நடைபெறும். இது தொடர்பில்தெரியவருவதாவது,


வலய வாரியத்திட்டமானது வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்றது. இக்கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயின்றுவருகின்ற மாணவர்களின் பெற்றோர்களில் இருந்து தேர்தல் மூலமாக 10 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வலயத்திற்குட்பட்ட 1ஏபி, 1சி,தரம்II ஆகிய பாடசாலைகளில் கல்வி பயின்று வருகின்ற மாணவர்களில் இருந்து தேர்தல் முறை மூலமாக மூன்று மாணவர்களும் மூன்று மாணவிகளுமாக மொத்தம் 6 பேர் தெரிவாகியுள்ளனர்.

அத்தோடு 10 நியமன அதிகாரிகள் வடக்கு மாகாண கல்வியமைச்சர்,வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர்,வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோரினால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஒட்டுமொத்தமாக 26 உறுப்பினர்கள் வலய வாரியத்தின் நிர்வாகத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

இந்த 26 பேரும் நாளை மறுதினம் தொடக்கம் துணுக்காய் கல்வி வலயத்திற்குட் பட்ட பாடசாலைகளின் நிதிவளம், ஆசிரியர்வளம்,பௌதீகவளம் ஆகிய தேவைகளை நிறைவேற்றுவதை முன்னிலைப் படுத்தி செயற்படுவதுடன் எதிர்கால கல்வி அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து செல்வதும் இவர்களின் செயற்பாடாக அமையவுள்ளது.

அங்குரார்ப்பண வைபவத்தைத் தொடர்ந்து வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழுள்ளஏனைய 11 கல்வி வலயங்களிலும் இவ்வாரிய அங்குரார்ப்பண வைபவம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண கல்வியமைச்சின் அலுவலகத்தகவலில்தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-3-15)




# டிப்பர்- முச்சக்கரவண்டி விபத்து

## முச்சக்கரவண்டி தடம் புரண்டது; சாரதி காயம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஏ9 வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பர் வாகனம் பயணிக்க முற்பட்ட வேளை பின்னால் இருந்து முன்னோக்கிச் சென்ற முச்சக்கரவண்டி டிப்பர் வாகனத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் முச்சக்கரவண்டி தடம்புரண்டது. இதன் போது முச்சக்கரவண்டியின் சாரதி காயங்களுக்குள்ளானதுடன் வாகனமும் சேதமடைந்தது. இச் சம்பவம் நேற்று முற் பகல் 11.20 மணியளவில் கரடி போக்குசந்தியிலிருந்து புத்த கோவிலை நோக்கிய தான 250 மீற்றர் தூரத்தில் நடைபெற்றது. இது தொடர்பில் தெரிய வருவதாவது, பரந்தன் சந்தியிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த முச்சக்கரவண்டி அதே பாதையில் நிறுத்தி வைக்கப்பட்டு பயணத்தை தொடர்ந்த டிப்பர்வாகனத்தின் வலது பக்கமுள்ளபவர் பாகத்துடன் மோதுண்டு தடம் புரண்டது. இதனையடுத்து முச்சக்கரவண்டி சாரதி காயமடைந்தார்.சம்பவஇடத்திற்குவிரைந்த கிளிநொச்சி போக்குவரத்து பொலிஸார்மேலதிகவிசாரணைகளைமேற்கொண்டனர். (2)

# கால்நடை வளர்ப்பாளர்களின் தொழிலை விருத்தி செய்ய சுற்றுலா



இலங்கை மத்திய வங்கியின் கிளிநொச்சி பிராந்திய காரியாலயத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைதீவு ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட கால் நடை வளர்ப்பாளர்கள் 35 இற்கு மேற்பட்டவர்கள் தமது தொழிலை விருத்தி செய்வதற்கான ஒரு சுற்றுலாவை நேற்று முன் தினம் மேற்கொண்டனர். இவர்கள் குருநாகல் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள பால் உற்பத்தி நிலையங்களை பார்வையிட திட்டமிட்டுள்ளனர்.

கால் நடை கைத்தொழிலை நவீன முறையில் விருத்தி செய்வதற்கான அனுபவத்தை பெறுவதே இச் சுற்றுலாவின் நோக்கம் என்பது குறிப் பிடத்தக்கது. (2-311)

## கண்ணதாசன்- வைரமுத்து நாவல்களின் வாசிப்பும் அனுபவப் பகிர்வும்

வவுனியா தமிழ் மாமன்றம் நடத்தும் 'வாசிப்பும் அனுபவப் பகிர்வும்' எனும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வவுனியா பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

கண்ணதாசனின் "ஒரு கவிஞனின் கதை, வைரமுத்துவின் தண்ணீர் தேசம்" ஆகிய இரு நாவல்களின் அனுபவப் பகிர்வு இடம்பெறும்.

இதில் கண்ணதாசனின் "கவிஞனின்கதை" எனும்நாவல் அனுபவப்பகிர்வினை சி.துஷ்யந்தனும்வைரமுத்துவின் "தண்ணீர் தேசம்" எனும் நாவல் அனுபவப் பகிர்வினை கு.அனுஜனும் வழங்கவுள்ளனர்.(2-3-5-17)

# 12இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு



தலைமன்னார் கடற் பரப்பில் வைத்து கைது செய் யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இராமேஸ்வர மீனவர்கள் 12 பேருக்குமான விளக்கமறியல் எதிர்வரும் மார்ச் 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த 12 இராமேஸ்வர மீனவர்கள் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன் தினம் வியாழக்கிழமை மன்னார் நீதவான் ஆசீர்வாதம் கிரேசியன் அலெக்ஸ்ராஜா முன்னிலையில் இடம்பெற்றது. இதன்போதே நீதவான் இந்த உத்தரவைப்பிறப்பித்தார்.


இலங்கை கடற்பரப்பினுள் கடந்த 10 ஆம் திகதி அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்டகுற்றச்சாட்டில் இரண்டு படகுகளும் அதில்பயணித்த 12 இராமேஸ்வரமீனவர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். பின்னர் மீனவர்கள் மன்னார் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

இதனைத்தொடர்ந்து கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை அடுத்து கடந்த 11ஆம்திகதி மன்னார் நீதிமன்றத்தில் இவர்களை முன்னிலைப்படுத்தியிருந்தனர்.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த மீனவர்களை நேற்றுமுன்தினம் வரை விளக்க மறியலில் வைக்க உத்தர விட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# இந்தியாதான் பிரபாகரனை உயிருடன் வைத்திருக்க விரும்புகிறது

## ஈழத்தில் இருந்து ஒரு குரல்


பிரபாகரன்

"அவன் தணிந்த குரலில் கதைத்தான். வார்த்தைக்கு வார்த்தை இடைவெளி விட்டு விட்டுக் கதைத் தான். அந்த இடைவெளிக்குள் அகப்பட்டு, அவஸ்தைப்பட்டு அவஸ்தைப் பட்டு வெளியே வந்தான். இரண்டு வார்த்தைகளுக்கு இடையிலான மௌனத்தில் என்மனம் நசிந்தது. இது ஒரு வலி... பட்டால் மட்டும் புரியும் வலி.'

இவை, ஈழத் தமிழர் குணா கவியழகன் எழுதிய 'நஞ்சுண்டகாடு' நாவலில் வரும் வரிகள். அவருடனான உரையாடலும் இப்படித்தான் இருந்தது. "நஞ்சுண்டகாடு", "விடமேறிய கனவு", "அப்பால் ஒரு நிலம்" என மூன்று நாவல்களை எழுதியவர் ஊடகவியலாளர். தன் நாவல்கள் மூலம் விடுதலைப் புலிகள் தரப்பையும் நேர்மையாக விமர்சனம் செய்பவர். இப்போது புலம் பெயர்ந்த தமிழர் என்ற அடை யாளத்துடன் நெதர்லாந்தில் வசிக்கிறார். அவர் சென்னை வந்தபோது ஒரு முன்பகலில் சந்தித்து உரையாடியதில் இருந்து...

**"புலம்பெயர் ஈழத் தமிழரான உங்களை, எது எழுத்தின் பக்கம் திருப்பியது?"**

"எனக்கு இலக்கியம் அவ்வளவு பரிச்சயம் இல்லை. வன்னி யுத்தத்துக்கு பிறகு நான் அமெரிக்காவின், 'ஆசிய மறுசீராக்கல் கொள்கை' குறித்து ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதினேன். அதன் நீட்சியாக வேண்டுமானால் என் முதல் இலக்கிய நூலான 'நஞ்சுண்டகாடு' நாவலைச் சொல்லலாம். யோசித்தால், அதற்கு இன்னொரு முக்கியக் காரணமும் இருக்கிறது. என் நாவல்கள் என் வலிகளுக்கான வடிகால். அதை எனக்கான உளச் சிகிச்சையாக நினைக்கிறேன். போர் தந்த வலிகளில் இருந்து மீள, எனக்கு எழுத்து நல்ல சிகிச்சையாக இருக்கிறது. அந்தச் சுய சிகிச்சையே நாவலாக உருமாறியுள்ளது. இன்னும் சொல்லப்போனால், நான் எழுதப்போகும் ஒரு முக்கியமான நாவலுக்கான பயிற்சியே இந்த மூன்று நாவல்களும்"

**"நஞ்சுண்டகாடு" நாவலில் விடுதலைப் புலிகள் மீதும் விமர்சனங்களை முன் வைத்திருந்தீர்கள் இல்லையா?"**

"ஆம்... நான் எழுதுவது என்று முடிவெடுத்ததுமே ஒரு விடயத்தில் திடமாக இருந்தேன்... அது சமரசமற்றதாக இருக்க வேண்டும் என்பது தான். அதனால் புலிகள் செய்த பிழைகளையும் நான் விமர்சனம் செய்திருந்தேன். இந்தக் காரணத்தால் நான் எதிர் கொண்ட விமர்சனங்கள் கொஞ்சம் நஞ்சம் அல்ல. ஆனால், என் எழுத்தில் இன்னும் உறுதியாக இருக்கிறேன்."

**"முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தம் தவிர்க்கப்பட்டிருப்பதற்கான சாத்தியங்கள் உண்டா?"**

"ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள். ஈழ மக்கள் என்றுமே போரை விரும்பியது இல்லை. உலக நாடுகளின் இராஜதந்திர விளையாட்டில் ஈழம் சிக்கிச் சின்னாபின்னம் ஆனது. இந்தப் போரை விரும்பியது சீனா. அது சிங்கள அரசுக்குத் துணை நின்றது. நியாயமாக சீனாவின் அரசியல் எதிரிகளான இந்தியாவும் அமெரிக்காவும் புலிகளின் பக்கம் இருந்திருக்க வேண்டும். ஆனால், அப்படி நடக்கவில்லை. சீனாவின் பிடி இலங்கையில் இறுகக் கூடாது என்று இந்தியா நினைத்தது. அதனால் அது இலங்கை அரசின் பக்கம் நின்றது. நிற்கிறது. ஆசியா கண்டத்தில் இந்தியாவைப் பகைத்துக் கொள்ள அமெரிக்கா விரும்பவில்லை. அதுவும் இந்தியாவின் நிலைப் பாட்டையே ஆதரிக்கிறது. ஆனால், புலிகள் தோற்கடிக்கப்பட வேண்டும் என்று மட்டும் தான் அமெரிக்கா விரும்பியது. அவர்கள் அழித்தொழிக்கப்பட வேண்டும் என்பது இந்தியாவின் விருப்பமாக இருந்தது"

**"இந்தியாவின் இனப் பகைதான் இந்த இனப் படுகொலைக்கு இந்தியா துணை நின்றதற்குக் காரணம்" என இங்குள்ள தமிழ்த் தேசியர்கள் சொல்கிறார்களே?"**

"இல்லை... இந்தியா துணை நின்றதற்குக் காரணம் புவிசார் அரசியல் மட்டுமே!"


**"அப்படியானால்... இது புலிகளின் இராஜதந்திரத் தோல்வி எனக் கூறலாமா?"**

"இது அவர்களின் ராஜதந்திரத் தோல்வி மட்டும் அல்ல. முள்ளிவாய்க்கால், அனைத்து நாகரிகச் சமூகங்களின் தோல்வி. போரில், போர் குற்றம் நடந்ததாகச் சொல்கிறார்கள். ஆனால், இந்தப் போரே குற்றம்தான். அமைதி உடன்பாட்டில் இருக்கும் ஒரு சமூகத்தின் மீது போரைத் திணித்தது யார், இது மோசமான முனனுதாரணம் அல்லவா? இனி எந்தப் போராட்ட இயக்கமாவது, இவர்கள் கொண்டுவரும் அமைதி ஒப்பந்தத்தை நம்புமா?"

**"அந்தச் சமயத்தில் காங்கிரஸ் அல்லாத வேறு கட்சி இந்திய அரசின் அதிகாரத்தில் இருந்திருந்தால், இவ்வளவு அழிவுகள் ஏற்பட்டிருக்காது என்று சொல்லலாமா?"**

"நிச்சயம் இல்லை... இது இந்தியாவின் நிலைப்பாடு!"

**"புலிகள் பலமுறை இந்தியாவுடன் நேசக் கரம் நீட்டியும், இந்தியா அவர்களை நம்ப மறுக்க காரணமாக, நீங்கள் எதை நினைக்கிறீர்கள்?"**


குணா கவியழகன்

"ஆரம்பத்தில் சில தவறுகள் நடந்தன. அப்போது புலிகள் அரசியல் முதிர்ச்சி அடைந்திருக்கவில்லை. ஆனால், பிறகு அவர்கள் இந்தியா இல்லாமல் ஒரு தீர்வு கிடைக்காது என்பதைப் புரிந்து கொண்டார்கள். ஆனால், இந்தியாவோ, புலிகளின் தனி ஈழக் கோரிக்கையை, அகண்ட தமிழ்த் தேச பேரரசுக்கான கோரிக்கையாகப் பார்த்தது. அதனால், அவர்கள் அதை ஆதரிக்கவில்லை. அதை முன்னெடுத்த புலிகளையும் ஆதரிக்கவில்லை. இப்போதும் நாங்கள் இந்தியாவையே நம்புகிறோம். இந்தியா இல்லாமல் ஒரு தீர்வு இல்லை."

**"ஒரு காலத்தில் எம்.ஜி.ஆரின் முயற்சியால், இந்தியா ஒரு தீர்வை முன்வைத்தது. இலங்கையின் வடகிழக்கை ஒன்றிணைத்து, தனி மாகாணமாக்கி, அதற்கு பிரபாகரனை முதலமைச்சர் ஆக்குவது என்ற அந்தத் தீர்வை ஏற்றுக் கொண்டிருந்தால், இந்த அழிவைத் தவிர்த்திருக்கலாம் என்ற கருத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?"**

"நிச்சயம். நான் இராஜதந்திரத் தோல்வி எனக் குறிப்பிட்டது இதைத்தான். அப்போது அதை ஏற்றுக்கொண்டிருந்தால், நாங்கள் அரசியல் செய்வதற்கு, எங்கள் கோரிக்கைகளை அனைத்து சமூக மக்களிடமும் எடுத்துச் செல்வதற்கு ஒரு வாய்ப்பாக இருந்திருக்கும். அதை மறுத்த தன் மூலம், அந்த வாய்ப்பு முற்றாக அழிக்கப்பட்டு விட்டது. புலிகள் போர் வெற்றியில்தான் அதிகம் கவனம் செலுத்தினார்கள். அரசியல் தளத்தில் கவனம் செலுத்தத் தவறி விட்டார்கள். இரண் டிலும் கவனம் செலுத்தியிருந் தால், பல தோல்விகளைத் தவிர்த் திருக்கலாம்."

**"சரி... இப்போது ஈழ மக்களுக்கு எது தீர்வாக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?"**

"வடகிழக்கை இணைப்பது. பொலிஸ், வருவாய் போன்ற அதிகாரங்களை மையப்படுத்தாமல் பகிர்ந்து அளிப்பது. கிட்டத்தட்ட இந்தியாவில் உள்ள மாநில அமைப்பைப்போல"

**"தனி ஈழக் கோரிக் கையை முன்னிறுத்தி மீண்டும் அங்கு போர் மூள வாய்ப்பு உள்ளதா?"**

"நிச்சயமாக இல்லை. எந்தக் காலத்திலும் போர் மூள வாய்ப்பே இல்லை. ஆனால், போர் மட்டுமே முடிந்து விட்டது. போராட்டங்கள் முடியவில்லை. தன்னாட்சி உரிமைக்கான அரசியல் போராட்டங்கள் தொடரும். அங்கு உள்ள தமிழ் மக்களும் அரசியல் விழிப்புணர்வுடன் இருக்கிறார்கள். தங்களது கூட்டு உரிமைக்காக இன்னும் போராடி வருகிறார்கள். அதனால் தான் தமிழ்த்தேசியக் கட்சிகள் தேர்தலில் வெற்றிபெறுகின்றன."

**"உங்கள் கோரிக்கையை ஏற்க ராஜபக்ஷ முன்வந்தால் அவரை ஆதிரிப்பீர்களா?"**

"நிச்சயமாக."

**"என்ன...?!"**

"ஆம்... போர் எதிரி, அரசியல் எதிரியாக இருக்கவேண்டியது இல்லை. இதற்கு நம் கண் முன்னால் இருக்கும் உதாரணம் ஜப்பான். இரண்டாம் உலகப் போர் முடிந்ததும், அவர்கள் கூட்டுச் சேர்ந்தது, அவர்கள் மீது அணுகுண்டு வீசிய அமெரிக்காவுடன்.'

**"போர்நடந்தபோது, தமிழக மக்கள் மீதும், ஈழ ஆதரவு தலைவர்கள் மீதும், போராளிகளின் பார்வை எப்படி இருந்தது?"**

"நாங்கள் தமிழக மக்களை மட்டுமே முழுமையாக நம்பினோம். தலைவர்களை அல்ல. எங்களுக்கு தலைவர்களின் நிலையையும் புரிந்து கொள்ள முடிந்தது. அவர்களுக்கு தமிழக அரசியலைத் தாண்டித்தான், ஈழம் எல்லாம். அதற்காக எங்களையும் அவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். அதையும் நாங்கள் உணர்ந்தே இருந்தோம். அரசியல் தலைவர்களுக்கு ஈழ மக்கள் மீது உண்மையான கரிசனம் இருந்திருந்தால், இங்கு அகதி முகாமில் இருக்கும் ஈழ மக்களுக்கும் அவர்கள் ஆதரவு கரம் நீண்டிருக்க வேண்டும் அல்லவா? ஆனால், உண்மை நிலவரம் அப்படி இல்லையே."

**"வேறு எப்படி உங்கள் இலட்சியங்களை அடைவது சாத்தியம் என நினைக்கிறீர்கள்?"**

"எங்கள் படகுக்கு நாங்கள் தான் துடுப்பு போட வேண்டும். எங்கள் பிள்ளையை நாங்கள் தான் பெற்றெடுக்க வேண்டும்."

**"ஈழ எழுத்தாளர்களிடம் கேட் கப்படும் வழக்கமான கேள்வி யோடு இந்தப் பேட்டியை முடித்துக் கொள்ளலாம். பிரபாகரன் இன்னும் உயிரோடு இருக்கிறாரா?"**

"இந்தச் சந்தேகத்தைக் கிளப் புவதே இந்திய அரசு என்றுதான் நினைக்கிறேன். அவரின் தியாகம் முக்கியமானது. 'பிரபாகரன் இறந்து விட்டார்' என போரை நடத்திய இலங்கை அரசே சொல்லிவிட்டது. இவர்கள் இப்படி ஒரு சந்தேகத்தைக் கிளப்பக் காரணம், 'பிரபாகரன் இறந்து விட்டார்' என்று அவர்கள் அறி வித்தால், விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டியிருக்கும். ராஜீவ் காந்தி கொலைவழக்கு தண்டனைவாசிகள் விவகாரத்தில் ஒரு முடிவு எடுக்க வேண்டிய நிர்பபந்தம் உருவாகும். அதை இந்தியா விரும்பவில்லை. இவற்றைத் தவிர்க்கவே இந் திய அரசு ஒரு குழப்ப நிலையை உண்டாக்கி, பிரபாகரனை உயிருடன் வைத்திருக்க முயற்சிக்கிறது என நினைக்கிறேன். இந்திய அரசின் ராஜதந்திரத்துக்கு, இங்கு உள்ள தமிழ் ஈழத் தலைவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ பலிகடா ஆகிக்கொண்டிருக்கிறார்கள்!"

**ஜூனியர் விகடன்**

# போர்க்குற்ற விசேட நீதிமன்றத்தில் வெளிநாட்டவர் பங்கேற்க வாய்ப்பு

## உள்நாட்டு விசாரணையில் சர்வதேச தலையீடு இருக்காது என்பது ஜனாதிபதியின் தனிப்பட்ட கருத்தென அமெரிக்காவில் அமைச்சர் மங்கள விளக்கம்

(கொழும்பு)

**இலங்கையின் இறுதிக்கட்டப் போரின் போது நடந்த போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்க வுள்ள சிறப்பு நீதிமன்றத்தில் வெளிநாட்டவர்கள் பங்கேற்பதற் கான வாய்ப்புகள் இன்னமும் திறந்த நிலையிலேயே இருப்பதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**

வோஷிங்டனில் உள்ள அமை திக்கான அமெரிக்க நிறுவகத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஆற்றிய உரை யிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியுடனான சந்திப் பையடுத்தே, மங்கள சமரவீர இங்கு உரையாற்றியிருந்தார்.

போர்க்குற்றங்கள் குறித்து உள் நாட்டு விசாரணையே நடத்தப்படும் என்றும் வெளிநாட்டவர்கள் பங் கேற்கமாட்டார்கள் என்றும் ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன முன்னர் கூறியிருந்தார்.

இந்தநிலையில், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இது பற்றி அமெரிக்க நிறுவகத்தில் ஆற் றிய உரையில், அது ஜனாதிபதி யினது கருத்து மட்டுமே.

முன்னைய அரசாங்கத்தினால் அரசியல் மயப்படுத்தப்பட்டதால், கட ந்த 10 ஆண்டுகளாக இலங்கை யின் நீதித்துறையின் சுதந்திரமும், நம்பகத்தன்மையும் சீரழிக்கப்பட்டன. தற்போது நீதித்துறை சரியான பாதை க்குத் திரும்பியிருக்கிறது. நம்பகத் தன்மையை பெறுவதற்கு அதற்கு சற்று காலஅவகாசம் தேவைப்படும்.

போர்க்குற்ற விசாரணை விடயத்தில், வெளிநாட்டு நீதிபதிகள், தடயவியல் நிபுணர்கள், விசார ணையாளர்கள் மற்றும் வழக்குத் தொடுநர்களின் பங்களிப்புத் தொடர் பாக ஆராயப்பட்டு வருகிறது.

நாம்எல்லா வாய்ப்புகள் குறித்தும் கவனத்தில் கொள்கிறோம்.

நாம் அமைக்கும் நீதிமன்றம் நம்பகமானதாக இருக்க வேண் டும் என்பதை மட்டும் கவனத்தில் கொள்ளவில்லை. போரில் பாதிக்கப் பட்டவர்களால் ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இருக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறோம்.

சிறுபான்மை தமிழ் சமூகத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏனைய தரப்புகளுடன் கலந்துரையாடப் பட்ட பின்னர், சிறப்பு நீதிமன்றத்துக் கான வரையறைகள் இன்னும்ஐந்து ஆறு மாதங்களில் முடிவு செய்யப்ப டும் என்று தெரிவித்துள்ளார். (இ)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–82

## தேனீக்களை வதைக்காது தேனைப் பெறும் தொழில்நுட்பம்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இந்த நூற்றாண்டுக்கான கண்டுபிடிப்புக்கள் பலவற்றில் நாம் எம்மையறியாமலேயே மூழ் கியிருக் கின்றோம். அதிலும் குறிப் பிட்டகண்டுபிடிப்புக்கள் எம்மை ஆச்சரியப்படவும் வைக் கின்றன. அதில் முக்கியமாக தேன் கூட்டிலிருந்து தேனீக்களை வதை செய்யாமல் தேனீக்களின் வதையிலிருந்து எளிய சிறந்த மதி நுட்பமான தொழில் நுட்பத்தின் உதவியுடன் தேனீக்களுக்கு தெரி யாமலேயே தேனைப் பெறுவதை கண்டுபிடித்திருக் கின்றார்கள். அவுஸ்திரேலியாவில் நீண்டநாட் களாக தேனீவளர்ப்பில் ஈடுபட்ட தந்தை ஸ்ருவாட்டுடன் மகன் செடார் அன்டர்சனுமிணைந்து இந்த கண்டுபிடிப்பை நிகழ்த்தி யிருக்கின்றார்கள். தேனீவளர்ப் பில் இது ஒரு இமாலயசாதனை. அற்புதமானகண்டுபிடிப்பு. நினைத் துப் பார்க்க முடியாதளவிற்கு இவர் களின் இக்கண்டுபிடிப்பு நடந்திருக் கின்றது. இது பற்றியவிபரங்கள் தேவைப்படுபவர்கள் கீழுள்ள இணையமுகவரியை அணுகி பெற்றுக்கொள்ளலாம்.

அநேகமானதேன் போத்தல்க ளில் தேனீக்களின் புழுக்களை நசித்தபடி அல்லதுஅதன் பாகங் கள் காணப்படுவது வழக்கம். சாதாரணமாக தேனைப் பெறும் போது புகையடித்து தேனீக்களை கலைத்து விட்டுபெட்டியிலே உள்ள தேன் சேகரிக்கப்பட்டிருக்கும் வதைகளைப் பிரித்தெடுத்து அவ ற்றை கையினாலேயோ அல்லது இதற்கென பிரத்தியேகமாக தயா ரிக்கப்பட்ட இயந்திரத்தின் உதவியு டனோ வதையை பிழிந்து தேன் பெறப்படுகின்றது. இவ்வாறு பெறப் படும் போது அந்த தேனில் தேனீக்க ளின் உடலின் பாகங்கள், உட்லிலி ருந்தசாறு மற்றும் வதையின் பகுதி என்பன நிறைந்துகாணப்படும். இவை இறுதியில் தேன் போத்த லின் மேற்பகுதியில் செறிவடைந் திருப் பதையும் அவதானிக்கலாம். குறிப்பாககலப்படம் செய்யப்பட்ட தேனில் அதுதேன் வதையிலிருந்து தான் பெறப்பட்டதாக காட்டுவதற்காக இவ்வாறுவதையை பிழிந்து போத் தலின் மேற்பகுதியில் இட்டிருப் பார்கள். எதையும் ஆய்ந்தறிந்த எம் மவர் இதனைப்பார்த்தவுடன் அது உண்மையானதேனென வாங்கி பயன்படுத்துகின்றார்கள். கலப்படம் செய்வதற்கு தகைமை தேவை யில்லைபுத்திக்கூர்மை இருந்தால் போதுமானது. தேனின் விலை அதிக மானகாலங்களில் இவ்வாறு கலப் படம் செய்யப்பட்ட தேன் விலைப்ப டுவதுண்டு. ஆனால் நிஜமாகவே தேனை எடுக்கும் மக்கள் இவ் வாறு கலப்படம் செய்து விற்பதி ல்லை. அவர்களுக்கென்று ஒருநிய தியை நிர்ணயஞ்செய்து வைத்தி ருப்பார்கள். அது அவர்களின் தொழில் சுத்தி அதிலுள்ள பக்தி. ஆக மொத் தத்தில் தேனை வாங்கி விற்பனை செய்பவர் இந்த கலப்படநாடகத் திற்குள்இடையில் வந்த அதனை செம்மனே அரங்கேற்றுகின்றார்.

"அதிசயம் ஆனால் உண்மை"

ஆச்சரியப்பட்டது இதைத்தான். எப்படிதேனீயைவதைக்காது தேனைப் பெறமுடியும்என்பது தானே. இங்கே தான் இவர்களின் கண்டுபிடிப்பு நடந்திருக்கின்றது. இதற்கென தனித்துவமான தேன் வதையை (அதுமெழுகினால் ஆனது) மெழுகுபோன்ற பொருளினால் ஆக்கியிருக்கின்றர்கள். இந்த தேன்வதையில் நீளப்பக்கமாக ஒவ் வொரு அறையும் பாதியாக மேலே கீழே அசையக்கூடியவாறு ஆக்கி யிருக்கின்றார்கள். தேனீப் பெட்டி யில் ஒருஆளியைச் செலுத்தி திருப் பும் போது இந்தஒவ்வொரு அறை யினதும் பாதிப்பகுதிமேல் நோக்கி நகரும். இவ்வாறுநகரும் போது அதனுள் சேமித்து வைத்தி ருக்கும் தேன் கீழ்நோக்கிவிழும். அது சேகரிக்கப்பட்டுகுழாய் மூல மாக வெளியேவரும். தேனீக்கும்சேதமில் லாமல் வதையையும் சேதப்படுத்தா மல் தேன் இலகுவாக சேகரிக்கப்படு கின்றது.



தேனீவளர்ப்பவர்கள் வதை களை சேதப்படுத்த பொதுவாகவே விரும்புவதில்லை. மேலும் தேனீ யினுடைய புழுக்களையும் அழிக்க விரும்புவதில்லை. இந்நிலையில் எப்படிதேனைப்பிரித்தெடுப்பது என் பது எல்லோர் முன்னிலையிலும் எழுப்பப்பட்ட கேள்வியாகும். தற் போது எந்தவிதமானசேதத்தையும் ஏற்படுத்தாதுதேனை அறுவடை செய்வதற்கான தொழில்நுட்பம் தயார். இது தேனீவளர்ப்பாளர் களிடையே அதிகவிருப்பத்தைக் கொண்டிருக்கின்றது. சுலபமாக இலகுவாக கண்காணித்து தேனீக் களை வளர்க்கவழியொன்று பிறந்தி ருக்கின்றது.

FlowTM Hive என்னும் நிறு வனம் (http://www.honey flow. com) இந்த இலகுவழிதேன் பெட் டியினை உருவாக்கிவிற்பதாக தெரியவருகின்றது. வேறுவேறு அளவுகளில் இந்த தேனீப்பெட்டியை பெற்றுக்கொள்ளலாம். இலங்கை ரூபாவில் 40,000 தொடக்கம் 70,000 வரைவிற்பனையாகும் இவ்வகைதேன் பெட்டிகளை மேற் குறித்த நிறுவனத்திடமி ருந்து வாங்கி நீண்டநாட்களுக்கு பயன்படுத்திக்கொள்ளலாம். எம் மவர்கள் முயற்சிசெய்தால் இதே போன்ற தொழில்நுட்பத்துடனான விலை குறைந்ததேனீப் பெட்டி களை உருவாக்கி தேனீ வளர்ப்பு தொழிலை முன்னெடுக்க வழி கோலலாம். இந்தமாதிரியான தொழில்நுட்பத்தின் அவசியம் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட் டிருந்தாலும் தற்போது அதுபயன் படுத்தத்தக்கவடிவில் கண்டு பிடிக் கப்பட்டுள்ளது. தேனீ வளர் ப்பை நாம் அதிகளவில் பரந்து பட்டு முன்னெடுக்கும் போது அது மக ரந்த சேர்க்கையினளவை அதிக ரிக்க உதவுவதோடு சூழலையும் பாதுகாக்கஉதவும். தேனீக்களின் பயன்பாடு அதிகரிக்கும் போது நிச்சயமாகபயிருற்பத்தியில் பாரிய ளவு உயர்வு ஏற்படும். தேனீக்க ளுக்கு தெரியாமலேயே அவற்றை பாதிக்காதவண்ணம் தேனை பெறும் இம் முயற்சி நிச்சயம் தொழில் வாய்ப்புக்களையும் பெருக்கிக்கொள்ளும் எனலாம். இயற்கையாக கிடைக்கக்கூடிய தேனை நாம்பயன்படுத்திக்கொள்ள நல்லதொருதொழில்நுட்பம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 79

# இளம் பெண்களைக் கல்லால் அடித்து கொலை செய்த ஐ.எஸ்.தீவிரவாதிகள்

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆதிக்கம் மிகுந்த பகுதியில் இளம் பெண்கள் இருவர் கல்லால் அடித்து கொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சிரியாவின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள Deir ez-Zor நகரின் முக்கிய பகுதியில் இந்த கொடூர சம்பவம் நடந்தேறியுள்ளது.

இப்பகுதியில் உள்ள குடியிருப்பு ஒன்றில் சந்தேகத்துக்கு இடமளிக்கும் வகையில் இரண்டு ஆண்களுடன் இந்த இளம் பெண்களை கண்டுபிடித்துள்ளனர்.

ஷரியா சட்டத்தின்படி அவர்களை கல்லால் அடித்து தண்டனை வழங்க வேண்டும் எனவும் முடிவுக்கு வந்தனர்.

இதனையடுத்து ஹமீதியா மாவட்டத்தில் உள்ள Deir ez-Zor என்ற நகரின் முக்கிய பகுதியில் ஏராளமான பொது மக்கள் முன்னிலையில் தண்டனையை நிறைவேற்றியுள்ளனர்.

கூடி நின்ற நூற்றுக் கணக்கான ஆண்கள் அந்த இளம் பெண்கள் இருவரையும் அவர்களின் உயிர் பிரியும் மட்டும் கல்லால் அடித்துள்ளதாக கூறப்படுகிறது.

அந்த பெண்களுடன் பிடிபட்ட ஆண்கள் இருவருக்கும் பொதுவீதியில் வைத்து தலா 50 கசை அடிகளை மட்டுமே தண்டனையாக வழங்கியுள்ளது.

ஷரியா நீதிமன்றத்தின் இந்த வேறுபட்ட தண்டனை நியதி அப்பகுதி குடியிருப்பு மக்களை அதிர்ச்சியடையவைத்துள்ளது மட்டுமல்ல கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (இ)

# மசூதியில் தாக்குதல்

## 12 பேர் சம்பவ இடத்தில் உயிரிழப்பு 30இற்கும் அதிகமானோர் படுகாயம்

**ஈராக் நாட்டின் வடமேற்கில் ஷியா பிரிவு மக்கள் பெரும்பான்மையாக வாழும்ஷீவாலாமாவட்டத்தில்உள்ள மசூதியில் அடுத்தடுத்து இர ண்டு தற்கொலைப்படை தீவிரவாதி கள் நடத்திய தாக்குதலில் 12 பேர் சம்பவ இடத்தில் பலியாகினர்.**

இங்குள்ள ரசூல் அல் ஆஸம் மசூதிக்குள் நேற்று முன்தினம் தொழுகை நடந்து கொண்டிருந்தபோது கூட்டத்தோடு கூட்டமாக நின்றிருந்த ஒருவன் பொத்தானை அழுத்தி, தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்க வைத்தான். குண்டு வெடித்த வேகத்தில் பலர் உடல் சிதறி கீழே விழுந்தனர்.

அவர்களுக்கு உதவி செய்ய பொலிஸாரும் அப்பகுதி மக்களும் விரைந்து வந்தனர்.

அப்போது மேலும் ஒருவன் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தான்.

இந்தத் தாக்குதலில் 15 பேர் பலியாகினர். முப்பதுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். (இ)

# வின்ஸ்டன் புயலால் பாதிக்கப்பட்ட பிஜிக்கு 40 ஆயிரம் கிலோ நிவாரணப் பொருட்கள்

## இந்தியா உதவி


(சுவா)

வின்ஸ்டன் புயலால் சீர்குலைந்த பிஜி நாட்டுக்கு 40 ஆயிரம் கிலோ நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்படும் என அரசு தெரிவித்துள்ளது. பிஜியில் கடந்த சனிக்கிழமை மணிக்கு 300 கி.மீ.வேகத்தில் வின்ஸ்டன் புயல் தாக்கியது. புயலின் கோரதாண்டவத்தில் சிக்கி 44 பேர் உயிரிழந்தனர். பலத்த காற்றினால் மரங்கள் வேரோடு சாய்ந்தன. ஏராளமான வீடுகள் தரைமட்டமாகின. மின்சாரம் துண்டிக்கப்பட்டு இயல்பு நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. ஏராளமானோர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர்.

எல்லா இடத்தையும் வெள்ளம் சூழ்ந்திருப்பதால், மீட்புப் படையினர் கடும் சிரமத்திற்கிடையே, மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். வின்ஸ்டன் புயலால் கடுமையாக பாதிக்கப்பட்ட பிஜிக்கு, நாடுகள் தாராளமாக உதவ வேண்டும் என அந்நாட்டு அரசு வேண்டுகோள் விடுத்தது. இதனையடுத்து, டில்லியில் இருந்து 20,000 கிலோ உணவு, மருந்து மற்றும் கூடாரம் அமைக்கத் தேவையான பொருட்கள் இராணுவ சரக்கு விமானத்தில் சென்னை க்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சென்னையில் தயார் நிலையில் இருக்கும் மேலும் 20 ஆயிரம் கிலோ நிவாரணப் பொருட்கள் ஏற்றப்பட்ட பின்னர், விமானம் பிஜிக்கு செல்லும் என பாதுகாப்புத் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# ஆறு போல நீண்டு கிடக்கும் குப்பை மூடைகள் தொற்றுநோய் பரவும் அச்சத்தில் பொதுமக்கள்



லெபனான் நாட்டின் தலைநகரில் அரசாங்கத்தின் அலட்சியப்போக்கால் நகர் முழுவதும் குப்பை மூடைகள் அப்புறப்படுத்தாமல் ஆறு போல தேங்கி இருப்பதால் தொற்று நோய் பரவும் அச்சத்தில் பொதுமக்கள் பீதியில் ஆழ்ந்துள்ளனர்.

மத்திய கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்றான லெபனானின் தலைநகரான பெய்ரூட்டில் தான் இந்த அவல நிலை நீடித்து வருகிறது.

தலைநகரின் வளர்ச்சி பணிகளுக்காக குப்பைகளை சுத்திகரிக்கும் பகுதியை அரசு கடந்த ஜூலை மாதம் தற்காலிகமாக மூடியது.

ஆனால், இதற்கு மாற்று இடத்தை ஏற்பாடு செய்யாததால், பொதுமக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட குப்பைகளை கொட்ட இடமில்லாமல் Jdeideh என்ற ஒரே பகுதியில் தொடர்ந்து கொட்டப்பட்டு வருகிறது.

பல வாரங்களாக குப்பை மூடைகள் தேங்கியதால், இப்பகுதியே இரு 'வெள்ளை ஆறு' போல காட்சியளிக்கிறது.

எனினும், இந்த குப்பை மூடைகளை ஒரு பிரித்தானிய நிறுவனத்தின் மூலம், அருகில் உள்ள ரஷ்யா நாட்டிற்கு கொண்டு செல்ல திட்டம் வகுக்கப்பட்டது.

ஆனால், இதற்கான சான்றுகள் ஒப்படைக்காததால் இந்த முயற்சியும் கைவிடப்பட்டு, தற்போது குப்பை மூடைகள் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

பல வாரங்களாக குப்பைகள் தேங்கி வருவதால், இப்பகுதியில் வசிக்கும் பொது மக்களுக்கு தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளதாகவும் அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ)

# கடலுக்கு அடியில் புகைப்படங்கள் எடுத்துக்கொள்ளும் தம்பதிகள்

## அதிகரிக்கும் விநோத கலாசாரம்




தங்களது திருமணத்திற்கு அடுத்த நாளில் கடலுக்கு அடியில் சென்று புகைப்படங்கள் எடுத்துக் கொள்ளும் விநோத பழக்கம் அவுஸ்திரேலிய புதுமணத் தம்பதிகளிடம் அதிகரித்துள்ளது.

திருமணம் என்பது அனைவரது வாழ்க்கையிலும் ஒரு முக்கிய நிகழ்வாகும்.

பெரும்பாலான புதுமணத் தம்பதிகள் தங்களின் திருமண நிகழ்வை என்றும் மறக்க முடியாத பசுமையான நிகழ்வாக மாற்றுவதற்காக பல புதுமைகளை கடைப்பிடிக்கின்றனர்.

விமானத்தில் திருமணம் செய்து கொள்வது, நடுக்கடலுக்கு சென்று கப்பலில் திருமணம் செய்து கொள்வது என புது முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

அந்த வகையில் திருமணத்துக்கு அடுத்த நாள் கடலுக்கு அடியில் சென்று புகைப்படம் எடுத்துக் கொள்ளும் பழக்கம் புதுமணத்தம்பதிகளிடம் அதிகரித்துள்ளது.

த்ராஷ் தி டிரஸ் (Trash the Dress) என்ற பெயரில் அழைக்கப்படும் இந்த புகைப்படம் எடுக்கும் நிகழ்வை அவுஸ்திரேலியாவை சேர்ந்த பல புதுமணத் தம்பதிகள் மேற்கொள்கின்றனர்.

திருமணத்திற்கு அடுத்த நாள் நண்பகல் புத்தாடைகள் அணிந்தபடி கடற்கரைக்கு செல்லும் அவர்கள் கடற்கரை மணலிலும், கடலுக்கு அடியிலும் சென்று புகைப்படங்கள் எடுத்துகொள்கின்றனர்.

இதுகுறித்து புகைப்படக்காரரர் பேஸ் என்பவர் கூறியதாவது, மக்கள் நடமாட்டம் இல்லாத கடற்கரைகளிலேயே இது போன்ற புகைப்பட நிகழ்வுகளை மேற்கொள்கிறோம்.

இதன் மூலம் எத்தகைய நெருக்கடியும் இல்லாமல் புதுமணத் தம்பதிகளால் இருக்க முடிகிறது. ஒரு மணி நேரத்தில் இந்த புகைப்பட நிகழ்வு முடிந்துவிடும்.

தம்பதிகளுக்கு இது மிகவும் மகிழ்ச்சியான தருணமாகவே இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பல்வேறு தம்பதிகள் தங்களின் திருமணத்தையே கடலுக்கு அடியில் நடத்த முயற்சி செய்துவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)




# சமூக வலைத்தளங்களுக்கு ஐ.எஸ்.தீவிரவாதிகள் மிரட்டல்

பேஸ்புக் மற்றும் டுவிட்டரின் தலைமை நிர்வாக அதிகாரிகளான மார்க் ஸக்கர்பெர்க், ஜாக் டோர்ஸி ஆகியோருக்கு மிரட்டல் விடுத்து ஐ.எஸ். ஆதரவாளர்கள் வீடியோ வெளியிட்டுள்ளனர்.

ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்களின் நாச வேலைகளுக்கு சமூக வலைத்தளங்களை பெருமளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால் பேஸ்புக் மற்றும் டுவிட்டர் வலைத்தளங்கள் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு ஆதரவான கணக்குகளை முடக்கி வருகின்றன.

டுவிட்டர் இதுவரை ஒரு லட்சத்து 25 ஆயிரம் ஐ.எஸ். ஆதரவு கணக்குகளை முடக்கியுள்ளது. இதுபோல் பேஸ்புக்கும் ஐ.எஸ். ஆதரவு பக்கங்களையும் கணக்குகளையும் நீக்கி வருகிறது.

இச்செயல் ஐ.எஸ். அமைப்புக்கு பெரும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் மார்க் ஸக்கர்பெர்க், ஜாக் டோர்ஸி ஆகியோருக்கு எச்சரிக்கை விடுக்கும் விதமாக வீடியோ ஒன்று சமூக வலைத் தளங்களில் பரவி வருகிறது.

மார்க் மற்றும் டோர்ஸியின் புகைப்படத்தில் துப்பாக்கி தோட்டாக்கள் சுடப்பட்டுள்ளது போல் தொடங்கும் அந்த வீடியோவில், எங்களின் கணக்குகளை நீங்கள் தொடர்ந்து முடக்கி வருகின்றீர்கள்.

உங்களுக்கு நாங்கள் கூறுவது என்னவென்றால், உங்களால் அது முடியுமா?

எங்களின் இலக்கில் நீங்கள் இல்லை. எங்களது ஒரு கணக்கை நீங்கள் நீக்கினால் பத்து கணக்குகளுடன் நாங்கள் திரும்ப வருவோம்.

உங்கள் தளங்களை நாங்கள் அழித்த பின்னால் உங்கள் பெயரும் அழிக்கப்படும் என்ற வாசகங்கள் இடம் பெற்றுள்ளன.

பிரபல சமூக வலைத்தளமான டெலிகிராமில் இந்த வீடியோ வேகமாக பரவி வருகிறது. (இ)

# போதைக்கு அடிமையாகும் மாணவர்கள்

## கல்விப்பணிப்பாளர் கவலை

இன்றைய மாணவர்களில் பலர் போதைப் பொருளுக்கு அடிமையாகி வருகின்றனர் என தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கவலை தெரிவித்துள்ளார்.

இதில் குறிப்பாக பாடசாலை விட்டு இடைவிலகும் மாணவர்கள், பாடசாலைக்கல்வி முடித்துவெளியேறுவோர் என்போர் இதில் அதிகம் அடங்குகின்றனர் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தென்மராட்சி கல்வி வலய வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் அலகினால் வெளியிடப்பட்ட கடல் தேடும் மழைத்துளிகள் என்ற செயற்றிட்ட நூல் வெளியீட்டு விழாவும் மாணவர் பாராளுமன்றத் தேர்தலும் அண்மையில் நாவற்குழி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போது தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய மாணவர்களில் பலர் குறிப்பாக பாடசாலைகளில் இருந்து வெளியேறும், இடைவிலகும் மாணவர்கள் போன்றோர் போதைப் பொருள் பாவனைக்கு ஆளாகின்றனர்.

சிறுவயதில் போதைக்கு அடிமையாகும் இம் மாணவர்கள் காலப் போக்கில் அவற்றிற்கு முழுமையாக அடிமையாகி விடுகின்றனர்.

எந்தவொரு சமூகத்தில் உயர்ந்த நற்பண்புடைய மாணவர் ஒருவர் இருப்பாராயின் அம் மாணவரையே போதைப் பொருள் என்ற கொடிய விசம் சென்று ஆட்டிப்படைக்கிறது.

போதைப்பொருள் பாவனை என்பது ஆயுதங்களை விடக் கொடியது. அது ஒரு நொடிக்குள் வாழ்வை அழித்து விடும் என்பதை அனைத்து மாணவர்களும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இலங்கையில் போதைப் பொருள் பாவனை வட பகுதியிலே அதிகமாக காணப்படுகிறது.

எனவே இது தொடர்பில் ஒவ்வொரு மாணவரும் பெற்றோரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எதிர்காலச் சந்ததியினரான எமது பிள்ளைகளை நல்ல வழியில் கொண்டு செல்வதே ஒவ்வொரு பெற்றோரினதும் நோக்கமாகும்.

ஆனால் அவ் நோக்கத்தை கலைத்து விடும் மாணவர்களாக எந்தவொரு மாணவரும் இருக்கக் கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இந்தியத்தூதரகம் முன் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

## 29 ஆம் திகதி நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் இந்திய மீனவர்களின் அத்துமீறலினை கட்டுப்படுத்த கோரி நாளை மறுதினம் 29 ஆம் திகதி யாழ்.இந்திய துணைத் தூதரகம் முன்பாக வடக்கு மாகாண மீனவர் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நான்கு மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் இணைந்து ஆர்ப்பாட்டம்ஒன்றினை மேற்கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மனனார், முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர். வடக்கு மாகாணத்தில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களினால் மேற்படி நான்கு மாவட்ட மீனவர்களும் பெரும் பாதிப்பினை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த பிரச்சினை கடந்த பல வருடங்களாக, நடைபெற்ற வண்ணமே உள்ளது, எமது கடல் வளத்திற்குள் அத்துமீறி றோலர்களுடன் உள்நுழையும் இந்திய மீனவர்கள் எமது கடல் வளத்தினை அள்ளிச் செல்வதோடு, எமது மீன்பிடி தொழல் உபகரணங்களையும் நாசம் செய்து விட்டு செல்கின்றனர்.

ஆரம்பத்தில் எமது கடல் பகுதியில் அத்துமீறிய மீனவர்களை, இலங்கை கடற்படை கைது செய்த போதிலும், தற்போது கைது நடவடிக்கைகள் என்பன மிக மிக குறைவாகவே உள்ளன. அவ்வாறு அத்துமீறும் மீனவர்கள் கைது செய்யப்பட்டாலும், அவர்கள் ஒரு சில வாரங்களில் விடுதலையாகி அவர்களது நாட்டுக்கு சென்றுவிடுகின்றனர்.

மீண்டும் எமது கடல் பகுதிக்குள அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். சிலவேளைகளில் புதுவருடப் பிறப்பு, சுதந்திர தினம் போன்ற தினங்களில் கூட எவ்வித நிபந்தனையும் இல்லாமல், குற்றம் செய்த இந்திய மீனவர்கள் விடுதலையாகி செல்கின்றனர். இவ்வாறு எமது கடல் வளத்தை அழித்தவர்கள் எவ்வித தண்டனைக்கும் உட்படுத்தப்படாமல விடுதலையாகி செல்வதனை எவ்வாறு எம்மால் ஏற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறு எமது பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டிருக்க, எமது பிரச்சினைகள் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்ககப்படுவதாக பலதடவைகள் ஏமாறப்பட்டு விட்டோம். ஆகையால் இனியும் எங்களை பேச்சுவாரத்தை எனக் கூறி ஏமாற்றி கொண்டு இருக்காமல், ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை, இந்திய மீனவர்கள் அத்துமீறல் தொடர்பில் எடுக்க கோருகின்றோம்.

இராஜ தந்திர ரீதியிலான அழுத்தங்களைப் பிரயோகித்து இந்திய மீனவர்கள் எமது கடல் பகுதியில் தொழிலில் ஈடுபட முடியாதவாறு நடவடிக்கைகளை இரு நாட்டு அரசாங்கங்களும் மேற்கொள்ள வேண்டும். மற்றும் எமது நாட்டு கடல் பகுதிக்குள் அத்துமீறும் இந்திய மீனவர்களுக்கு இந்திய அரசே தண்டனை வழங்கும் ஒரு முறைமையை கொண்டுவர வேண்டும் என வலியுறுத்தியே மேற்படி ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

இப்போராட்டத்திற்கு வடக்குமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பு, பூநகரி கூட்டுறவு சங்க ஒன்றியம், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கம், முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம் ஆகிய அமைப்புக்கள் ஆதரவினை வழங்கியுள்ளன. மேலும் இதற்கு அனைத்து மீனவர்களையும் ஒத்துழைப்பு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-4)

# கட்டுரைகளை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி நீடிப்பு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி வருடாந்த ஆய்வரங்குக்கான க.பொ.த. உயர்தர மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் பங்குபெறும் கட்டுரை போட்டி சம்பந்தமாக கட்டுரைகளை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக கலாசார அலுவல்கல் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

பாடசாலைமட்டத்தில் க.பொ.த. உயர்தரவகுப்பில் கல்வி பயிலும் மாணவர்கள், பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் ஆகியோருக்கு நடத்தப்படவிருந்த இக் கட்டுரைப் போட்டிகளில்,

பல்கலைக்கழக மாணவர்களுக்கான கட்டுரைத் தலைப்புக்கள் :-பெரிய புராணத்திற்கு முன்னோடியாக பதினொராம் திருமுறை, பதினொராம் திருமுறையில் திருத்தலங்கள், பிரபந்த நோக்கில் பதினொராம் திருமுறை, சமய தத்துவ கருத்தில் பதினொராம் திருமுறை. கட்டுரைகள் 1000 சொற்களுக்கு மேற்படாமலும் துறைத்தலைவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதாகவும் அமைய வேண்டும்.

பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைத் தலைப்புக்கள்:- பக்தி இலக்கிய வரலாற்றில் காரைக்கால் அம்மையார், பதினொராம் திருமுறையில் விநாயகர்,பதினொராம் திருமுறையில் முருகன், பதினொராம் திருமுறையில் சம்பந்தர், பதினொராம் திருமுறையில் அப்பர், நம்பியாண்டார் நம்பியின் கவித்திறன். கட்டுரைகள் 500 சொற்களுக்கு மேற்படாமலும் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டதாகவும் அமைய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ

# ஒவ்வொரு நாளையும் கழிப்பது பெரும் கொடுமையாகவுள்ளது

## நளினி வேதனை



சிறையில் ஒவ்வொரு நாளையும் கழிப்பதே மிகக் கொடுமையாக இருக்கிறது. அதனால், எங்களை அரசாங்கம் விடுதலை செய்ய வேண்டும்.

தமிழக அரசு அதைச் செய்யும் என்று நம்புகிறோம் என பரோலில் விடுதலைபெற்று தந்தையாரின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்ள வெளியே வந்த நளினி வேதனையுடன் தெரிவித்தார்.

இந்திய சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்து வரும் பெண் கைதிகளில், அதிக காலம் சிறைக்குள் அடைக்கப்பட்டுள்ளவர் நளினி.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நளினி, 25 ஆண்டுகளுக்குப் பினனர் 12 மணி நேரம் மட்டும் சிறைச்சாலையில் இருந்து பரோலில் வர அனுமதிக்கப்பட்டார்.

அதுவும், அவருடைய தந்தை சங்கர நாராயணனின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக மட்டும்.

சங்கரநாராயணன், ஓய்வுபெற்ற பொலிஸ் சப் - இன்ஸ்பெக்டர். நெல்லை மாவட்டம் வீ.கே.புரத்தில் வசித்து வந்தார்.

91 வயதான அவர், கடந்த 23 ஆம் திகதி மாலை மரணம் அடைந்தார். அவருடைய உடல் சென்னை கோட்டூர்புரம் எல்லையம்மன் கோயில் தெருவில் உள்ள நளினி யின் அண்ணன் ரவியின் வீட்டுக் குக் கொண்டு வரப்பட்டது.

ரவி, தி.மு.க. பிரமுகர் என்பதால், நிறைய தி.மு.கவினர் நளினியின் வீட்டைச் சுற்றி குழுமியிருந்தனர்.

தமிழ் உணர்வாளர்கள், விடுதலைச் சிறுத்தைகள் மற்றும் ம.தி.மு.கவைச் சேர்ந்த ஏராளமானோர் சங்கரநாராயணனுக்கு அஞ்சலி செலுத்தினர்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், மனிதநேய மக்கள் கட்சி எம்.எல்.ஏ. ஜவாஹிருல்லா, தடா ரஹீம் உள்ளிட்டவர்கள் அஞ்சலி செலுத்தினார்கள். வீட்டைச் சுற்றி ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டு இருந்தனர். (இ)

# உலகின் வசீகரமான குற்றவாளிக்கு வித்தியாசமான தீர்ப்பளித்த நீதிமன்றம்



கனடாவின் கியூபெக் பகுதியை பிறப்பிடமாக கொண்ட பெண் குற்றவாளிக்கு அங்குள்ள நீதி மன்றம் வித்தியாசமான தீர்ப்பு வழங்கியுள்ளது.

கனடாவின் கியூபெக் பகுதியை பிறப்பிடமாக கொண்டவர் 24 வயதான Stephanie Beaudoin. சிறுவயதிலேயே திருட்டு சம்பவங்களில் இவர் ஈடுபட்டு வந் துள்ளார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு கனேடிய பொலிஸார் இவரை கைது செய்யும் போது, வீடு புகுந்து இவர் கொள்ளை நடத்தியதன் எணணிக்கை 39 என வெளிப் படுத்தினர்.

இளம் பெண்களுடன் சேர்ந்து இந்த கொள்ளைகளை நடத்தியுள்ளதும், அதன் மூலம் 41,667 பவுண்ட் பணம் மற்றும் விலை மதிப்பற்ற பொருட்களையும் சூறையாடியுள்ளனர்.

இதனிடையே இவரது பேஸ்புக் புகைபபடங்கள் உலக அளவில் இவருக்கு ரசிகர் வட்டத்தை உருவாக்கி தந்துள்ளது.

இந்த புகைப்படங்களை காணக் கிடைத்த ஒரு விளம்பர நிறுவனம் இவரை தங்களது விளம்பரப் படங்களில் நடிக்க ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

தற்போது வழக்கு விசாரணை முடிவுக்கு வந்த நிலையில், இவரது கோரிக்கை மற்றும் வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு இவருக்கு 90 நாட்கள் தண்டனை விதித்து கனேடிய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும் வார இறுதி நாட்களில் மட்டும் சிறை தண்டனை அனுபவித்தால் போதுமானது எனவும் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.(இ)

# தப்பிச் செல்வதற்கு முயன்ற 11 கைதிகள் சுட்டுக்கொலை

தெற்கு பசுபிக் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள அவுஸ்திரேலியாவின் அயல் நாடான பப்புவா நியு கினியாவின் சிறையில் இருந்து தப்பிச்செல்ல முயன்ற 11 கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தலைநகரான போர்ட்மோர்ஸ்பை என்ற இடத்தில் இருந்து சுமார் 320 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள லாயே என்ற இடத்தில் உள்ள புய்மோ சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 30 கைதிகள் நேற்று முன் தினம் சிறைக் காவலர்களை தாக்கி விட்டு தப்பியோட முயன்றனர்.

சிறையின் பாதுகாப்பு அதிகாரிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 11 கைதிகள் பலியாகினர். 17 பேர் குண்டுக் காயங்களுடன் பிடிபட்டுள்ளனர் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ)

# அமெ.தொழிற்சாலைக்குள் துப்பாக்கிச்சூடு-7 பேர் பலி

(நியூயோர்க்)

மத்திய மேற்கு அமெரிக்காவின் ஒக்லஹாமா மாநிலத்தின் முக்கிய நகரங்களில் ஒன்றான கன்ஸாஸ் சிட்டியில் புற்களை வெட்டி, தோட்டத்தை சமப்படுத்தும் இயந்திரங்களை தயாரிக்கும் எக்ஸெல் தொழிற்சாலை இயங்கி வருகிறது.

இந்த தொழிற்சாலையில் வேலை செய்து வந்த செட்ரிக் ஃபோர்ட் என்பவர் நேற்று முன்தினம் ஏ.கே.47 மற்றும் கைத்துப்பாக்கியால் சக தொழிலாளிகளை நோக்கி கண்மூடித்தனமாக சுட்டார்.

எதிர்பாராத விதமான இந்த கோரத் தாக்குதலில் ஆறு தொழிலாளர்கள் குண்டுபாய்ந்து உயிரிழந்தனர்.

இந்த தாக்குதல் தொடர்பான தகவல் அறிந்து விரைந்து வந்த பொலிஸார் மற்றும் மீட்புப் படையினர், செட்ரிக் ஃபோர்டை சரணடையும்படி கேட்டுக் கொண்டனர். அவர்கள் மீதும் துப்பாக்கியால் சுட முயன்றதால் செட்ரிக் ஃபோர்ட் சுட்டுக் கொல்லப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இச்சம்பவத்தில் காயமடைந்த சுமார் 30 தொழிலாளர்கள் அருகாமையில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.(இ)

# களுத்துறையில் மாணவன் கடத்தல் முயற்சி முறியடிப்பு

களுத்துறை பிரதேசத்தில் பாடசாலை மாணவன் ஒருவரை கடத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி பொதுமக்களால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் களுத்துறை, கட்டுக்குருந்தை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

குறித்த மாணவர் நாடகம் மற்றும் அரங்கியற்கலை தொடர்பான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் செயற்பாட்டு பரீட்சைக்குத் தோற்றி விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்துள்ளார்.

இதன்போது வான் ஒன்றில் வந்த மர்ம நபர்கள் சிலர் மாணவனை இழுத்து வானுக்குள் போட்டுக் கொண்டு தப்பிச் செல்ல முயன்றுள்ளனர்.

இதனைக் கண்ட பொதுமக்கள் ஒன்றுதிரண்டு கடத்தல்காரர்களின் முயற்சியை முறியடித்துள்ளதுடன், பொலிஸாருக்கும் தகவல் கொடுத்துள்ளனர். சம்பவம் தொடர்பில் இரண்டு பேரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-26.02.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.52 | 146.54 |
| பவுண்ட் | பிரிட்டன் | 198.51 | 205.59 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 156.47 | 162.70 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 143.24 | 149.20 |
| டொலர் | கனடா | 104.54 | 108.78 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 102.23 | 107.04 |
| டொலர் | சிங்கப்பூர் | 101.35 | 105.23 |
| ரூபா | இந்தியா | 2.0934 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் . | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.7179 |
| குவைத் | டினார் | 478.7889 |
| ஓமான் | ரியால் | 373.7565 |
| கட்டார் | ரியால் | 39.5161 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3718 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1762 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 80 | 60 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 50 | 70 | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 120 | 120 | 120 | 100 |
| தக்காளி | 50 | 25 | 40 | 50 | 80 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 35 | 40 | 50 | 40 | 40 |
| கோவா | 60 | 50 | 60 | 80 | 80 | 80 |
| கரட் | 140 | 170 | 160-200 | 200 | 200 | 150 |
| பூசணி | 50 | 70 | 50 | 50 | 80 | 80 |
| புடோல் | 40 | 25 | 50 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 60 | 40-60 | 80 | 80 | 60 |
| பெரிய வெங்காயம் | 60 | 45 | 60 | 60 | 60 | 80 |
| பாகற்காய் | 120 | 70 | 100 | 80 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 80 | 70 | 60 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 80 | 80 | 80 |
| பயற்றங்காய் | 100 | 90 | 70 | 80 | 120 | 100 |
| லீக்ஸ் | 60 | 80 | 100 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 50 | 50 | 60 | 50 | 80 | 70 |
| கறிமிளகாய் | 150 | 120 | 100 | 120 | 160 | 100 |
| முருங்கைக்காய் | 500 | 300 | 240-300 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 80 | 40 | 80 | 80 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 50 | — | — | 60 | 60 |
| கீரை - 1பிடி | 40 | 15 | 30 | 50 | 30 | 20 |
| தேசிக்காய் | 50 | 40 | 60 | 60 | 40 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-40 | 50 | 40 | 35-45 | 40 |
| இராசவள்ளி | 120 | 100 | 150 | 140 | 160 | 150 |
| வெங்காயப்பூ | 60 | 70 | 60 | 80 | 120 | 80 |
| முள்ளங்கி | 20 | 25 | 40 | 60 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 30 | 50 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | — | — | — | — | 80 | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## ராஜீவ்காந்தியின் அழைப்பை ஏற்று பிரபாகரன், பெங்களூர் விரைந்தார் 116

சார்க் மாநாட்டிற்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனா வரும்போது பெங்களூரில் வைத்து இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஒரு முயற்சியை மேற்கொள்வதற்கு ராஜீவ் காந்தி விரும்பினார்.

அக்காலகட்டத்தில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தை மூன்று கூறுகளாகப் பிரித்து அதிகாரப் பகிர்வு செய்யும் ஒரு தீர்வுத் திட்டத்தை இந்திய- இலங்கை அரசுகள் தயாரித்தன. தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத இத்திட்டத்தைப் பெங்களூரில் வைத்து விடுதலைப்புலிகளிடம் திணித்துவிட வேண்டும் என்று ராஜீவ் காந்தி திட்டமிட்டார்.

### பெங்களூருக்கு

பெங்களூர் மாநாட்டிற்கு ஒரு சில தினங்களுக்கு முன்பாக தலைவர் பிரபாகரனுக்கும் எனக்கும் போடப்பட்டிருந்த வீட்டுக்காவல் திடீரென நீக்கப்பட்டது. நவம்பர் 16 ஆம் திகதி இரவு பிரபாகரனும் நானும் சென்னை விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்த ஒரு விமானப்படை விமானத்தில் பெங்களூர் கொண்டு செல்லப்பட்டோம்.

பெங்களூரில் உள்ள ராஜ்பவனுக்கும் நாங்கள் போய்ச் சேர இரவு 10 மணி ஆகிவிட்டது. அங்கு என்னைச் சந்திப்பதற்காக இந்திய அரசாங்கத்தின் பிரமுகர்கள் பலர் காத்திருந்தனர். அமைச்சர் நட்வர்சிங், வெளிவிவகாரச் செயலாளர் வெங்கடேஸ்வரன், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஜே.என்.தீட்சித், வெளிவிவகார அமைச்சகத்தைச் சேர்ந்த குல்திப் சகாதேவ் மற்றும் இந்தியப் புலனாய்வுத்துறை உயர் அதிகாரிகள் ஆகியோர் அங்கிருந்தனர்.

நாங்கள் அங்கு சென்றதுமே முதலில் தீட்சித் எங்களை வரவேற்று நாங்கள் எதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதைக் கூறி, கிழக்கு மாகாணத்தைக் கூறுபோடும் தீர்வுத் திட்டம் பற்றி ஒரு விளக்கமும் தந்தார். ஏற்கனவே அவமானப்பட்டு நொந்துபோயிருந்த எங்களுக்கு, ஏற்க முடியாத ஒரு தீர்வுத் திட்டத்தை இந்தியத் தூதுவர் திணிக்க முயன்றது கடும் சினத்தை ஏற்படுத்தியது. கடுமையான தொனியில் ஒரே வசனத்தில் பதிலளித்தார் பிரபாகரன். தமிழர் தாயகத்தைப் பிரிக்கவும் முடியாது, பிரிக்கவும் விடமாட்டோம் என்று அடித்துச் சொன்னார்.

கிழக்கு மாகாண வரைபடத்தைச் சுட்டிக்காட்டி விளக்கங்கள் கூறி ஏதோவெல்லாம் அலம்பிக் கொண்டிருந்தார் தீட்சித். எதிலுமே அக்கறை காட்டாது பதிலும் கூறாது இறுக்கமாக மௌனம் சாதித்தார் பிரபாகரன்.

இறுதியில் நான் குறுக்கிட்டு எங்கள் இயக்கத்தின் நிலைப்பாட்டை ரத்தினச் சுருக்கமாகச் சொல்லிவிட்டார் பிரபாகரன். தமிழர் தாயகத்தைக் கூறுபோடும் எந்தத் திட்டத்தையும் நாங்கள் ஏற்கப் போவதில்லை. இதுபற்றிப் பேசுவதில் பயனில்லை என்றேன்.

என்னையும் பிரபாவையும் முறைத்துப் பார்த்துவிட்டு அங்கிருந்து சென்றார் தீட்சித்.

### தமிழ் அதிகாரி

இந்தியத் தூதுவரின் முயற்சி தோல்வியில் முடிந்ததும் அடுத்ததாக வெங்கடேசுவரனைக் களத்தில் இறக்கினார்கள். ராஜீவ்காந்தியின் நிர்வாகத்திலுள்ள ஒரு முக்கிய தமிழ் அதிகாரி என்பதால் அவர் மூலம் ஏதாவது சாதிக்கலாம் என் எண்ணினார்கள் போலும்.

வெங்கடேஸ்வரன் மிகவும் அன்பாகவும் பண்பாகவும் பேசினார். எங்கள் நிலைப்பாட்டை இந்தியத் தூதுவர் தமக்கு எடுத்துரைத்ததாகச் சொன்னார். ஆயினும் இப்பொழுது முன்வைக்கப்படும் தீர்வுத் திட்டம் நிரந்தரமானது அல்ல என்றும் ஒரு இடைக்கால ஒழுங்கு என்றும் விளக்கினார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு வெகு விரைவில் ஒரு தீர்வு காண வேண்டும் என்பதில் ராஜீவ் ஆர்வமாக இருக்கிறார். இந்தச் சார்க் மாநாட்டில் ஒரு தீர்வு எட்டப்படுமானால் அது அவருக்கு ஒரு பெரிய அரசியல் ராஜதந்திர வெற்றியாக அமையும் என்றார். இப்படியெல்லாம் கூறிவிட்டு எங்கள் நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டார்.

பிரபாகரனுக்குக் கோபம் வந்துவிட்டது. ராஜீவ்காந்தியைத் திருப்திப்படுத்துவதற்காக எங்கள் விடுதலைப் போராட்டத்தை விற்கவா சொல்கிறீர்கள்? என்று கடிந்து சொன்னார்.

வெங்க டேஸ்வரன் மலைத்துப்போனார். எனக்கு உங்கள் மனநிலை புரிகிறது என்று சொல்லி ஒருவாறு சமாளித்துக்கொண்டு விடைபெற்றார்.

அடுத்ததாக இந்தியப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் வந்தார்கள். எவ்வளவோ முயற்சித்துப் பார்த்தார்கள் முடியவில்லை.

### கடைசி ஆயுதம்

பிரபாகரனை நெகிழ்வுபடுத்தும் கடைசி ஆயுதமாக எம்.ஜி.ஆரைப் பயன்படுத்த முடிவாகியது.



(தொடரும்)

# மகிந்தவை வீழ்த்திய மக்களுக்கு ரணிலை வீழ்த்துவது கடினமல்ல

## லால் காந்த தெரிவிப்பு



(கொழும்பு)

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்திலும் பாராளுமன்றத்திற்கு வெளியிடங்களில் இடம்பெறும் அரசியல் செயற்பாடுகளின் போதும் அநாகரிகமான முறையில் நடந்து கொளவதாக மக்கள் விடுதலை முன்னணியின் இணைப்பாளர் லால் காந்த குற்றம் சாட்டினார்.**

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை எதிர்பாராத விதத்தில் ஆட்சி கவிழ்த்திய இந்நாட்டு மக்களுக்கு பிரதமரை வீட்டிற்கு அனுப்புவது கடினமான செயலல்ல என்பதை அவர் மறந்து செயற்படக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு சனசமூக நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

இலங்கை, இந்திய வர்த்தக மற்றும் பொருளாதார உடன்படிக்கை தொடர்பில் சண்டித்தனமான போக்கை கடைப்பிடிக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதற்கான களமாக பாராளுமன்றத்தை பயன்படுத்திக் கொள்கின்றார்.

இந்நிலையில் சில நாட்களுக்கு முன்னதாக குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாது என பிரதமர் பகிரங்கமாக அறிவித்தார். ஆனால் தற்போது யார் எதிர்த்தாலும் ஒப்பந்தத்தில் கைச்சாததிடுவோம் என்கிறார். இவை வேடிக்கையான விடயங்கள் என்று பார்க்க முடியாது. பிரதமர் கடுமையான போக்கை கடைபிடிக்கின்றார்.

இதனை எதிர்ப்பவர்களுக்கு எதிராக தானும் மக்களை வீதியில் இறக்கி போராட்டம் நடத்துவேன் என்றும் பிரதமர் அண்மையில் குறிப்பிட்டிருந்தார். இது ஐக்கிய தேசிய கட்சியின் கடந்த காலங்களை மீட்டிப் பார்ப்பதாகவுள்ளது.

இன்று வெளிநாடுகள் எமது நாட்டை ஆக்கிரமித்துள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. இவ்வாறான நிலையில் மக்கள் எதிர்ப்பின் மத்தியில் இந்தியாவுடனான பொருளாதார ஒப்பந்தம் அவசியமா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இந்த உடன்படிக்கையில் சீபா என்ற பெயர் மட்டுமே மாற்றப்பட்டுள்ளது என்பதை பிரதமர் மறுக்கவும் முடியாது.

கடந்த காலங்களில் ஒருவருக்கு சேறு பூசுவதற்காக அவரை புலியாக அடையாளப்படுத்தினர். அது மகிந்த ஆட்சியில் இடம்பெற்ற சம்பவம். ஐக்கிய தேசிய கட்சியில் ஒருவருக்கு சேறுபூச வேண்டும் என்றால் ஜே.வி.பி. முத்திரை குத்துவர். ஐக்கிய தேசிய கட்சியின் நிலைப்பாட்டில் தற்போதும் மாற்றம் இல்லை.

தற்போது மகிந்த உள்ளிட்டவர்களுக்கு துணைபோக வேண்டாம் என்று ஊடகங்களை பகிரங்கமாக விமர்சிக்கும் பிரதமர் ஊடகங்கள் அவருக்கு சேவை செய்ய வேண்டும் என்றா குறிப்பிடுகின்றார்?

இந்நிலையில் தேசிய அரசாங்கத்தில் நிலைகொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினர் விரைவில் விலகிச் செல்வர். அவ்வாறு அவர்கள் விலகிச் செல்லும் நாள் வரவேண்டும் என்றே நாமும் பிரார்த்தித்துக் கொண்டிருக்கின்றோம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனக்கு மிகப்பெரிய அரச பலம் உள்ளது என்ற அதிகாரப் போக்கில் செயற்படுகின்றார். ஆனால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை எதிர்பாராத விதத்தில் ஆட்சி கவிழ்த்திய இந்நாட்டு மக்களுக்கு பிரதமரை வீட்டிற்கு அனுப்புவது கடினமான செயலல்ல என்பதை அவர் மறந்து செயற்படக்கூடாது என மேலும் தெரிவித்தார். (இ)

# ஆடம்பர விமானம் ஒன்றில் கட்டில் உட்பட உபகரணங்களை பொருத்த மகிந்த முயற்சி

## ரஞ்சன் ராமநாயக்க குற்றச்சாட்டு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆடம்பர விமானம் ஒன்றில் கட்டில் உட்பட நவீன உபகரணங்களைப் பொருத்த முயற்சித்ததாகவும் கட்டில் ஒன்றை பொருத்த பல அமெரிக்க டொலர்கள் செலவாகும் எனவும் பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார். கட்டில் உட்பட உபகரணங்களைப் பொருத்த குறிதத விமானம் விமான நிலையம் ஒன்றில் நிறுத்தப்பட்டிருந்தது. விமானத்தில் பொருத்தும் கட்டில் உட்பட உபரகரணங்ளை கழற்றுவதற்கு மேலும் இரண்டு நாட்கள் தேவைப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த ஆடம்பர வசதிகளை நிராகரித்துள்ளார். அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, புருணை சுல்தான் ஆகியோர் விமானங்களில் ஆடம் பர வசதிகளை பயன்படுத்தி வருகின்றனர்.

அதேபோல் மகிந்த ராஜபக்ஷ 8 எயார் பஸ் விமானங்களைக் கொள்வனவு செய்துள்ளார். இந்த கொள்வனவு தொடர்பில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப் பாட்டுக்கு அமைய அரசாங்கம் மாதாந்தம் ஒரு மில்லி யன் நஷ்டததை எதிர்நோக்கி வருகிறது.

கோப் குழுவில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தொடர்பாக ஆராய்ந்து பார்த்த போது இந்த தகவல்கள் தெரிய வந்தன.

ஊழல், மோசடிகளில் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணை நடத்த சபாநாயகர் என்னை கோப் குழுவின் உறுப்பினராக நிய மித்துள்ளார். பொலிஸ் நிதி மோசடி பிரிவை விட கோப் குழுவுக்கு அதிகாரங்கள் உள்ளன.

மகிந்த ராஜபக்ஷவின் மைத்துனரான நிஷாந்த விக்ரமசிங்கவிடம் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை நிறுவனத்தில் நடந்த முறைகேடுகள் தொடர்பில் விசாரணை நடத்த சென்ற போது, அவரது மனைவி தனது கணவன் காணாமற் போய்விட்டதாகக் கூறினார்.

நிஷாந்த விக்ரமசிங்க, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தலைவராக இருந்த போது, அவரது காதலியை சிங்கப்பூரில் இருந்து கொழும்பு அழைத்து வர, கோலாலம்பூரில் இருந்து கொழும்பு வரவிருந்த விமானத்தை சிங்கப்பூருக்கு அனுப்பியிருந்தனர். இதற்காக பெருந்தொகைப் பணம் செலவிடப் பட்டது.

அதேபோல் சிவக்குமார் என்பவரை ஸ்ரீலங்கன் விமான சேவையின் விற்பனை ஆலோசகராக நிய மித்து, அவருக்கு மாதாந்தம் 30 இலட்சம் ரூபா ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. நாட்டுக்காக சேவை செய் ததன் காரணமாகவே தான் சிறைச்சாலைகளுக்கும், மோசடி விசாரணை ஆணைக் குழுக்களுக்கும் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக மகிந்த ராஜபக்ஷ பத்திரிகை ஒன்றிடம் கூறியுள்ளார். நாட்டுக்கு செய்த சேவை என்ன என்பது இந்த செயல்கள் மூலம் தெளிவாகியுள்ளது எனவும் பிரதியமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ)

# அனுமதியின்றி சேவையில் ஈடுபடும் பேருந்துகளுக்கு 2 லட்சம் அபராதம்

(கொழும்பு)

அனுமதியின்றி பேருந்து போக்குவரத்தில் ஈடுபட்டால் இரண்டு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட வேண்டுமென இலங்கை போக்குவரத்து ஆணைக்குழு சட்ட மூலத்தை திருத்தி அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அனுமதியின்றி பேருந்து ஒன்று போக்குவரத்தில் ஈடுபட்டால் அதற்கான அபராதமாக தற்போது 10 ஆயிரம் ரூபா அறவீடு செய்யப்படுகின்றது.

நாட்டில் மாகாணங்களுக்கு இடையில் போக்குவரத்தில் ஈடுபடும் பல வாகனங்களுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட அனு மதிப்பத்திரம் கிடையாது என தெரிவிக்கப்படுகிறது.

தரமான போக்குவரத்து சேவையொன்றை வழங்க சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன. 1991 ஆம் ஆண்டு 37ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 40(இ) சரத்தில் திருத்தம் செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இந்த யோசனை குறித்த அமைச்சரவை பத்திரத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல பகுதிகளில் முறையான அனுமதிப் பத்திரமின்றி பேருந்துகள் சேவையில் ஈடுபட்டுள்ளதாக அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

## இன்று ஒரு தகவல்

### அகமும் புறமும்

எனக்கு அழகான கணவன்தான் வேண்டும். மற்ற வற்றைப் பற்றி எனக்கு கவலையில்லை என்று எந்தப் பெண்ணும் கூறுவதில்லை. இது ஆராய்ச்சி பூர்வமான உண்மை.

ஆனால், ஆண்கள் அப்படியா? நூற்றுக்கு 90சத விகிதம் பேர் அழகைப் பற்றித்தான் அக்கறை கொள் கிறார்கள்.

குணம் நிறைந்தவனாய், ஒழுக்கம் உள்ளவனாய், ஓரளவு கல்வி அறிவு உடையவனாய் இருப்பவன் தன் கணவனாக அமைய வேண்டும் என்றே பெண்கள் விரும் புகிறார்கள்.

ஆனால் ஆண்கள்?

அழகாயிருந்தால் போதும், தலையாட்டி விடுகிறார்கள். அப்புறம் வாழ்வு முழுவதும் தலைவிதியே என்று நொந்து கொள்கிறார்கள். எனக்கு அழகான மனைவி அமைய வேண்டும் என்று ஓர் ஆண் விரும்புவதில் தவறில்லை. ஆனால் மற்ற அம்சங்களையும் கவனிக்க வேண்டு மல்லவா?

கண்கள் இப்படி இருக்க வேண்டும், உடல்வாகு இப்படி இருக்க வேண்டும், நிறம் சிவப்பாக இருக்க வேண்டும் என்றெல்லாம் கற்பனை மனைவியை உருவகம் செய்து வைத்துக் கொண்டு முடிவில் ஏமாந்து போகிறார்கள்.

இது எவ்வளவு பெரிய தவறான கோட்பாடு?

நமக்கு மனைவியாய் வரப் போகிறவள் குலப்பெரு மையையும் குடும்ப கௌரவத்தையும் காப்பாற்றுகிற வளாக அமைய வேண்டும். அன்பும் அக்கறையும் பண்பும் பாசமும் நிறைந்தவளாய், பெற்ற குழந்தைகளை இலட்சிய நோக்குடன் வளர்ப்பவளாய் அமைய வேண்டும் என்றெல்லாம் விரும்பவேண்டும். இந்தக் கோணத்தை மனத்தில் கொண்டு பெண்ணைப் பற்றி நன்கு விசாரித்துத் தெரிந்து கொண்ட பின்னரே முடிவுக்கு வர வேண்டும். இவ்வளவும் அமையப் பெற்ற ஒரு பெண் அழகான வளாகவும் இருந்து விட்டால் அவளை மணந்து கொள்ளப் போகிறவன் கொடுத்து வைத்தவன் என்பதில் சந்தேகமில்லை.

வெளியில் கூட்டிச் செல்லும் போதும், நான்கு பேர் முன்னிலையில் இவள்தான் என் மனைவி என்று சொல் லும் போதும், என் மனைவி அழகு என்ற பெருமை ஒருவ ருக்கு தலை தூக்கலாம்.

ஆனால், அந்த சிறிய நேரப் பெருமையை விட, நாள் தோறும் அவளது ஒவ்வொரு நற்செயலிலும் வெளிப்படும் உயரிய பண்பைக் கண்டு ஆகா! இவளை நாம் மனை வியாக அடைய நாம் எவ்வளவு கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று ஒவ்வொரு நிமிடமும் ஒரு கணவனால் எண்ணி மகிழ்ச்சி அடைய முடியுமானால் அதுவே பெரு மைக்குரிய அம்சமாக இருக்கும்.

இல்லற வாழ்வில் சிறு சத விகிதமே இடம் பெறும் அந்த ஆசைக்கு மட்டுமே மனைவி அல்ல, மேலும் வெளித் தோற்றத்திற்கு மட்டுமே மனைவி அல்ல.

அழகு அழகு என்று மட்டுமே அலைந்து அதில் மட்டும் வெற்றி கண்ட ஆண்கள் அணு அணுவாக சித்திரவதைக்கு ஆளாகி அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பதை நாம் தின மும் காண்கிறோம்.

புற அழகு வெறுத்து விடும், சலித்து விடும் ஒரு சிறு விபத்து ஏற்பட்டால் சிதைந்து போய் விடும். ஆனால் அக அழகு அனைவராலும் போற்றக் கூடியதாக இருக்கும்.

அதோடு நிம்மதியான வாழ்வுக்கு நிலைப்படியாய் அமையும்.

**லேனா தமிழ்வாணன்**




# சிஷ்யா!



கிராமத்தில் ஆடு ஒன்று வசித்து வந்தது.

ஒருநாள் அந்த ஆடானது காட்டிற்குச் சென்று தன் மனம்போல் பச்சைச் செடி, கொடிகளை உண்ண வேண்டும் என்று மனதில் நினைத்தது.

தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள விரும்பிய ஆடு, உடனே காட்டை நோக்கிப் புறப்பட்டது.

காட்டினை வந்தடைந்த ஆடு அங்கே ஒரு முனிவரைப் பார்த்தது.

அந்த முனிவர் ஆட்டை நோக்கினார்.

முனிவர் ஆட்டை நோக்கியதும் ஆடானது தாமாகவே அவர் அருகில் சென்றது.

முனிவரின் முன்னே அமைதியுடன் நின்று கொண்டிருந்தது அந்த ஆடு.

முனிவர் தன் கண்களை மூடியபடி ஏதோ மந்திரத்தினை உச்சரித்தார்.

உடனே அந்த ஆடானது முனிவரின் சிஷ்யனாக மனித உருவம் அடைந்தது.

சிஷ்யனும் முனிவருக்கு வேண்டும் பணி விடைகளை எல்லாம் நாள்தோறும் செய்யத் தொடங்கினான்.

இப்படியே பல மாதங்கள் கடந்துவிட்டன. ஒருநாள் சிஷ்யன் முனிவரை நோக்கினான்.

"சுவாமி, ஆடாக இந்த காட்டிற்குள் நுழைந்த என்னை நீங்கள் உங்கள் சிஷ்யனாக மாற்றி விட்டீர்கள்.

எனக்கு இப்போது கிராமத்திற்குச் செல்ல வேண்டும் என்று ஆசை ஏற்பட்டு விட்டது.

எனவே என்னை நீங்கள் ஆடாக மாற்றி விடுங்கள்," என்றான்.

முனிவர் சிறிது நேரம் யோசனை செய்தார். பின்னர் சிஷ்யனைப் பார்த்தார்.

"சிஷ்யனே, உன்னை நான் என் சிஷ்யனாக மாற்றி விட்டேன்.

நீ அப்படியே உன் கிராமத்திற்குச் செல். அங்கு சென்று மனிதனாகவே உன் வாழ்க்கையை நடத்து." என்றார்.

அதனைக் கேட்ட சிஷ்யனோ திடுக்கிட்டான்.

"சுவாமி, ஆடாக வாழ்வதென்றால் அது எளிமையான காரியம்.

ஆனால், ஊருக்குள் சென்று நான் மனிதனாக வாழ வேண்டு மென்றால் அது கடினமான காரியமாகும்.

நான் கிராமத்திற்குள் சென்றதுமே என்னை எல்லாரும் சூழ்ந்து கொள்வர்.

யார் நீ? எங்கிருந்து வருகிறாய்? என்று கேட்பார்கள்.

நானோ நீங்கள் என்னை மனிதனாக மாற்றிய கதையைக் கூறினால் அவர்கள் நம்ப மாட்டார்கள்.

அப்படி என்னை நம்பினாலும் நான் அவர்களின் பார்வையில் ஆடாகத் தெரிவேன்.

நான் மனிதனாகச் சென்றால் என்னை வளர்த்து வந்தவரே என்னை நம்ப மாட்டார்.

அதன் பின்னர் நான் எனக்கொரு வீட்டைத் தேடிக் கொள்ள வேண்டும்.

நான் புதியவன் என்று கருதி யாருமே எனக்கு வீடு கொடுக்க மாட்டார்கள்.

அதன்பின்னர் நான் தங்குவதற்கு இடம் கூடக் கிடைக்காமல் திண்டாடி விடுவேன்," என்றான்.

அதனையெல்லாம் பொறுமையாகக் கேட்ட முனிவரோ தன்னுடைய தவறை உணர்ந்தார்.

"சிஷ்யனே, உன்னை நான் அப்படியே விட்டுவிடலாம் என்று நினைத்தேனே தவிர, பின் விளைவுகள் எல்லாம் நினைத்துப் பார்க்க வில்லை.

நீ கூறிய பின்னர்தான் அவைகளைப் பற்றி நான் உணர்கிறேன்.

நான் என்னதான் பெரிய முனிவராக இருந்தாலும், உன்னிடம் இருக்கிற பொது அறிவு கூட என்னிடம் இல்லாததைக் கண்டு நான் வெட்கப்படுகிறேன்." என்றார்.

சிறிது நேரம் மௌனமாக இருந்த முனிவர் தன் கண்களை மூடியபடி ஏதோ மந்திரங்களை உச்சரித்தார். உடனே சிஷ்யன் ஆடாக மாறி விட்டான்.

உடனே அந்த ஆடானது தன் கிராமத்தை நோக்கிப் புறப்பட்டது.

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்




- 1560 - ஸ்கொட்லாந்திலிருந்து பிரெஞ்சுக்காரரை வெளியேற்ற ஸ்கொட்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் பேர்விக் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1594 - பிரான்சின் மன்னனாக நான்காம் ஹென்றி முடிசூடினான்.
- 1700 - புதிய பிரித்தானியா தீவு கண்டுபிடிக்கப் பட்டது.
- 1801 - வோஷிங்டன், டிசி நகரம் அமெரிக்க காங்கிரசின் நிர்வாகத்தின் கீழ் வந்தது.
- 1844 - டொமினிக்கன் குடியரசு ஹெயிட்டியிடமிருந்து விடுதலை அடைந்தது.
- 1861 - போலந்தில் ரஷ்ய ஆக்கிரமிப்பை எதிர்த்து வார்சாவில் மக்கள் எதிர்ப்புப் போராட்டம் நடத்தினர்.
- 1879 - சக்கரீன் என்ற செயற்கை இனிப்பூட்டி கண்டுபிடிக்கப்பட்டது.
- 1900 - இரண்டாம் போவர் போர்: தென்னாபிரிக்காவில் போவர்களின் தளபதி பியெட் குரோனியே நிபந்தனையயின்றி சரணடைவதாக அறிவித்தார்.
- 1900 - பிரித்தானிய தொழிற் கட்சி அமைக்கப் பட்டது.
- 1933 - பெர்லினில் ஜேர்மனியின் நாடாளுமன்றம் தீ வைத்து எரிக்கப்பட்டது.
- 1940 - ரேடியோ கார்பன் என்ற கரிமம்-14 கண்டு பிடிக்கப்பட்டது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜாவா கடலில் இடம்பெற்ற சமரில் கூட்டுப் படைகளை ஜப்பான் படைகள் தோற்கடித்தன.
- 1951 - ஐக்கிய அமெரிக்காவில் ஜனாதிபதி ஒருவர் இருதடவைகளுக்கு மேல் போட்டியிட முடியாதவாறு அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டது.
- 1967 - டொமினிக்கா ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலை பெற்றது.
- 1976 - முன்னாள் ஸ்பானிய நாடான மேற்கு சகாரா சாராவி அரபு ஜனநாயகக் குடியரசு என்ற பெயரில் விடுதலையை அறிவித்தது.
- 1991 - வளைகுடாப் போர: அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் குவெய்த் விடுதலையானதாக அறிவித்தார்.
- 2007 - மட்டக்களப்பு நகரில் உள்ள இலங்கை விமானப் படையினரின் விமான ஓடு பாதையை நோக்கி விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட எறிகணை வீச்சில் இலங்கைக்கான அமெரிக்க, இத்தாலியத் தூதுவர்கள் காயமடைந்தனர்.

**பிறப்புகள்**


- 272 - முதலாம் கான்ஸ்டன்டைன், உரோமைப் பேரரரசர் (இ. 337)
- 1912 - குசுமாகரசு, இந்திய எழுத்தாளர் (இ. 1999)
- 1932 - எலிசபெத் டெய்லர், ஆங்கிலேய-அமெரிக்க நடிகை (இ. 2011)
- 1934 - ரால்ஃப் நேடர், அமெரிக்க அரசியல்வாதி
- 1962 - இராபர்ட் ஸ்பென்சர், அமெரிக்க எழுத்தாளர்
- 1975 - கிறிஸ்டோபர் பி. லாண்டன், அமெரிக்க இயக்குநர்
- 1977 - ஜேம்ஸ் வான், மலேசிய-ஆத்திரேலிய இயக்குநர்
- 1982 - புருனோ சோரெஸ், பிரேசிலிய டென்னிசு வீரர்
- 1983 - முகமது நபௌசு, லிபிய ஊடகவியலாளர் (இ. 2011)

**இறப்புகள்**

- 1931 - சந்திரசேகர ஆசாத், இந்திய செயற்பாட்டாளர் (பி. 1906)
- 1936 - இவான் பாவ்லோவ், நோபல் பரிசு பெற்ற ரஷிய மருத்துவர் (பி. 1849)
- **2008 - சுஜாதா, எழுத்தாளர் (பி. 1935)**
- 2014 - ந. பாலேஸ்வரி, ஈழத்துப் புதின எழுத்தாளர் (பி. 1929)

# தென்பகுதியில் தமிழின் பரிதாபநிலை!













**தமிழ் எழுத்துப் பிழைகளுடன் தென்பகுதி அலுவலகங்களில் பெயர்ப்பலகைகள் வைக்கப்பட்டுள்ளதை படங்களில் காணலாம்.**

## அம்புலன்ஸ் சேவையை தனியார் மயப்படுத்தும் திட்டம் முன்னெடுப்பு

அம்புலன்ஸ் சேவையை தனியார் மயப்படுத்தும் திட்டத்தினை தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக முன்னிலை சோஷலிஸக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுகாதார சேவையை தனியார் மயப்படுத்தும் திட்டத்தின் ஒரு அங்கமாகவே தாம் இதனை கருதுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அம்புலன்ஸ் சேவையை இந்தியாவிலுள்ள தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்குவதன் ஊடாக இந்த தனியார் மயப்படுத்தல் திட்டம் அமுல்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது இலவசமாக பெற்றுக் கொள்ளப்படுகின்ற இந்த சேவை எதிர்வரும் காலங்களில் பணம் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதனால் இந்த திட்டத்திற்கு எதிராக மக்கள் ஒன்று திரள வேண்டும் என முன்னிலை சோஷலிஸக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது. (இ)

## பொதுக்கூட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி டிறிபேக் தாரகை விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு டிறிபேக் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அன்றையதினம் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறவுள்ளதால் கழகத்தின் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் கழகத்தில் புதிதாக இணைந்து கொள்ள விரும்புபவர்களும் வருகை தர முடியும் என கழகத்தின் தலைவர் ஸ்ரீ பாஸ்கரன் அறிவித்துள்ளார். (இ-5-89)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 645

Search for people, places and things Nagendram Home

அருள்ராஜ்





வரதன்




சலீம்





தலிராஜ்




நேசந்தன்




சந்துரு




**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

# இராணுவம் தப்பிக்கவும் புலிகளை போர்க்குற்றவாளியாக்கவும் சதி!



ஈழத்தில் நடைபெற்ற இறுதி யுத்தத்தில் இலங்கை இராணுவம் செய்துள்ள மனித உரிமை மீறல்கள், சரணடைந்த முன்னாள் போராளிகள், பொது மக்கள் மற்றும் பலவகையான கொலைகள், பற்றிய செய்திகள் காணொலிகள் பதிவுகள் அடங்கிய தகவல்கள் இப்போது உலகம் முழுவதும் உள்ளது பற்றி நாம் எல்லோரும் அறிவோம்.

அதைவிட முக்கியமாக லண்டனில் இருந்து இயங்கும் சனல் 4 ஆங்கில தொலைக்காட்சி ஊடாக உலகம் முழுவதும் அறிந்த உண்மையாக ஆதாரபூர்வமாக ஜெனீவா மனித உரிமை ஆணையத்தில் உள்ளது.

சனல் 4 தொலைக்காட்சியின் பணிப்பாளர் கெலும் மக்ரே கடந்த மஹிந்த ஆட்சியில் நேரடியாக கொழும்பு வந்து மஹிந்த ஆட்சியின் பல தடைகள் தாண்டி நேரடியாக வடக்கில் பாதிக்கப்பட்ட மக்களை கண்டு நேரடி தகவல்கள் பெற்று ஜெனீவாவில் சமர்ப்பித்துள்ளார்.

இந்த ஆண்டில் நடைபெறவுள்ள ஜெனீவா மனித உரிமை மாநாட்டில் மேலும் புதிய போர்க்குற்ற ஆதாரமொன்றை சனல் 4 வெளியிடவுள்ளது.

இலங்கை இராணுவத்தின் பலவகையான போர்க்குற்ற ஆதார ஆவணம் மற்றும் புகைப்படம் மற்றும் வீடியோ காட்சிகளை துறை சார்ந்த நிபுணர்கள் ஊடாக நிரூபித்து ஆதாரமாகவே சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. இது பற்றி உலகம் முழுவதும் அறியப்பட்டவிடயம்.

### இராணுவத்தை தப்பிக்க வைக்கும் சதி

இப்போது இந்தியாவின் றோவின் விசேட ஆலோசனை ஒன்றுக்கமைய இலங்கை இராணுவத்தை தப்பிக்க வைத்து விடுதலைப்புலிகளை போர்க்குற்றவாளிகளாக மாற்ற இந்தியா இலங்கைக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாம்.

இந்தியாவின் இந்த ஆலோசனைக்கு அமெரிக்காவும் பச்சைக்கொடி காட்டியுள்ளதாம்.

இதன் மூலமாக ஜனாதிபதி மைத்திரி தலைமையிலான அரசு எதிர்நோக்கும் சர்வதேசப் பிரச்சினைக்கும் உள்நாட்டில் சிங்கள மக்கள் மத்தியில் மஹிந்த விதைத்து வரும் விசமத்தனமான பிரசாரத்திக்கும் முற்றுப்புள்ளி வைக்கலாம் என்று இந்தியாவால் இலங்கை அரசுக்கு சொல்லப்பட்டுள்ளதாம்.

அதனால் கடந்த காலங்களில் விடுதலைப் புலிகள் செய்துள்ள கொலைகள் துப்பாக்கி பிரயோகங்கள் மற்றும் பல வகையான விடயங்களை திரட்டுமாறு பாதுகாப்பு அமைச்சினால் உத்தரவு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் அம்பாறை அரந்தலாவ பிக்குகள் கொலை, மட்டக்களப்பு காத்தான்குடி பள்ளிவாசல் கொலை, ஏறாவூர் முஸ்லிம்கள் கொலை, மட்டக்களப்பில் ஊறுகாமம் உட்பட 1987 ஆம் ஆண்டு தொட்டு, வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றம் உட்பட சிறு கொலை சம்பவத்தையும் தட்டி எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் பல கொலை சம்பங்களுக்கு விடுதலைப் புலிகள்தான் செய்தார்கள் என்பதற்கு தகுந்த ஆதாரங்கள் இல்லை என்பதும் அறியப்பட்டுள்ளது. அதாவது, விடுதலைப் புலிகள் அல்லாத மற்ற ஏனைய இயக்கங்கள் செய்துள்ள கொலைகளையும் விடுதலைப் புலிகளின் தலையில் போட்டுவிட்டு இந்திய சினிமா பாணியில் கேசை முடிக்கும் திட்டம். இந்த திட்டத்திக்கு சில முஸ்லிம் அரசியல்வாதிகளையும் அரசு வளைக்கும் திட்டம் உள்ளது.

### விடுதலைப் புலிகளை போர்க் குற்றவாளியாக்கும் தந்திரம்

போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளில் அனைத்துலக பங்களிப்புக்கு தமது அரசாங்கம் தயங்கவில்லை என்றும், ஆனாலும், இறுதி தீர்ப்பு உள்நாட்டு நீதிமுறைமைகளுக்கு ஏற்பவே வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

அண்மையில் இந்தியாவின் கேரள மாநிலத்தில் உள்ள குருவாயூரில் வழிபாடு செய்ய சென்றிருந்த போது பிரதமர் ரணில் கருத்து வெளியிட்ட போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான கலந்துரையாடல்களில் அயல்நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் மட்டுமன்றி அமெரிக்கா மற்றும் மனித உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகளும் கூட பங்கேற்க முடியும்.

பொதுமக்களின் மரணங்களுக்கு இலங்கை இராணுவமா? விடுதலைப் புலிகளா? பொறுப்பு என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. எத்தனை பேர் இலங்கை இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர் என்றோ, அல்லது விடுதலைப் புலிகளால் போர் வலயத்துக்குள் தள்ளிச் செல்லப்பட்டதால், எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்றோ தெளிவாகத் தெரியவில்லை என்றார்.

இந்த இழப்புகளுக்கு சரியான காரணிகளைக் கண்டறிவதற்கான நிபுணத்துவம் எம்மிடம் இல்லாதிருக்கலாம். எனவே, இதுபோன்ற காரணிகளைக் கண்டறிவதற்கு அனைத்துலக பங்களிப்பு வரவேற்கப்படுகிறது.

ஆனால் மரணங்களுக்கு யார் பொறுப்பாளிகள், அவர்களுக்கு என்ன தண்டனை என்று தீர்மானிக்கும் இறுதி தீர்ப்பை அளிக்கும் உரிமை இலங்கையின் நீதித்துறைக்கே இருக்கும்.

இலங்கையின் நீதித்துறை முன்னர் அவமானத்துக்குரியதாகவே இருந்தது. ஆனால் இப்போது அது வழமைக்குத் திரும்பியுள்ளது. இத்தகைய விவகாரங்களில் ஒவ்வொரு நாட்டினதும் இறைமை மதிக்கப்பட வேண்டும்.

இலங்கையின் உயர் நீதிமன்றம் ஆசியாவிலேயே பழைமையானது. நாம் பலமானதும், சுதந்திரமானதுமான நீதித்துறையைக் கொண்டிருக்கிறோம். என்றார். ரணிலின் கருத்துக்குள் விடுதலைப் புலிகளை குற்றவாளிகளாக்கும் தந்திரம் மறைந்துள்ளது. அதை விலாவாரியாக சொல்லியுள்ளார்.

### அரசு படையினரை பாதுகாக்குமாம்

நாட்டின் தற்போதைய அரசாங்கம் படையினரை பாதுகாப்பதில் எப்போதும் அர்ப்பணிப்புடன் இருப்பதாக அமைச்சர் சரத் அமுனுகம அண்மையில் தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசாங்கம் படையினரை சிறையில் அடைத்த போதிலும் தற்போதைய அரசாங்கத்தினால், படையினருக்கு எந்த பிரச்சினையும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கட்டியெழுப்பியுள்ள வெளிநாட்டு நட்புறவு தொடர்புகள் காரணமாக இலங்கைக்கு அதிக நன்மைகள் கிடைக்கும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடனான போர்க்குற்றங்களை இழைத்த போர்க்குற்றவாளிகளுக்கு எதிராக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும்" என்றும் அவர் தெரிவித்தார்.

### படையினருக்கு அஞ்சும் அரசு

பாதுகாப்புப் படையினர், பொலிஸார், நீதித்துறையினர், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், உயர் அரச அதிகாரிகளுக்கு தொழிற்சங்க உரிமையோ, கட்சி அரசியல் உரிமையோ கிடையாது.

அவர்கள் நடுநிலையாக கடமையாற்ற வேண்டும் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையிலேயே அக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இலங்கை பாதுகாப்புப் படை அரசியல் கட்சிமயப்பட்டு ஏதாவது அரசியல் கட்சிக்கு சார்பாக நடந்து அரசியல் விவகாரங்களில் தலையிடவில்லை என்றே கூறப்படுகிறது.

அதாவது பாதுகாப்புப் படையினரின் உயர் அதிகாரிகள் அவர்களுக்கு விரும்பிய கட்சியின் அரசாங்கமே ஆட்சியில் இருக்க வேண்டுமென வெளிப்படையான நிகழ்ச்சி நிரலைக் கொண்டு செயற்பட்டிருக்கவில்லை என்றே உள்ளது.

ஆனால் பதவியில் இருக்கின்ற அரசாங்கங்களுக்கு விசுவாசமாக பாதுகாப்புப் படையினரும், பொலிஸாரும் சேவையாற்றி வந்துள்ளனர். இந்நிலையில் மாற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்பொன்றை மகிந்த அணி அமைத்து வருகின்றது.

அதாவது, கடந்த ஆண்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்திற்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக பாதுகாப்புப் படையினர் செயற்படுவார்களோ என்ற அச்சம் நிலவியது.

ஆனால் பாதுகாப்புப் படையினர் அவர்களது கட்சி சார்பற்ற நிலையை உறுதி செய்தனர். புதிய அரசாங்கம் அமைவதற்கு இடையூறு விளைவிக்கவில்லை. ஆனால் மகிந்த ராஜபக்ஷவும், அவரது சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷவும் பாதுகாப்புப் படையினர் மத்தியில் அவர்களின் செல்வாக்கை அதிகரித்துக் கொள்ளும் வகையில் ஆரம்பம் தொட்டே செயற்பட்டு வந்துள்ளனர்.

படையினரை போர்க் குற்ற விசாரணைக்குட்படுத்தப் போவதில்லை என தொடர்ந்து கூறி வருவதுடன், மைத்திரி அரசாங்கம் பாதுகாப்புப் படையினரை போர்க்குற்ற விசாரணைக்குட்படுத்தி அவர்களுக்கு துரோகமிழைக்கப் போவதாகக் கூறி படையினரை மகிந்த தொடர்ந்து அச்சுறுத்தி வருகிறார்.

### மகிந்தவின் ஞானோதயம்

இதே மகிந்த ராஜபக்ஷ 1990 இம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஜெனீவாவில் நடைபெற்ற காணாமல் போனவர்கள் பற்றிய செயற்குழு கூட்டத்திற்கு இலங்கை பாதுகாபப்புப் படையினருக்கு எதிரான சாட்சியங்களைக் கொண்டு சென்றார்.

காணாமல் போனவர்கள் பற்றிய 533 ஆவணங்களையும் 19 பக்க புகைப்படங்களையும் ஜெனீவாவிற்கு கொண்டு செல்ல முற்பட்ட போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவை தடுத்து நிறுத்தப்பட்டன.

அதற்கு எதிராக அடிப்படை மனித உரிமைகள் மீறல் மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அவரது கருத்து வெளியீட்டு சுதந்திரம் மீறப்பட்டதாக அவருக்கு சார்பாக தீர்ப்பையும் பெற்றுக்கொண்டார். அப்போது அவர் எதிர்க் கட்சியில் இருந்தார்.

### மகிந்தவின் அந்தர் பல்டி

அவர் ஜனாதிபதியாகிய பிறகு ஜெனீவா சென்று காணாமல் போனவர்கள், மற்றும் மனித உரிமை மீறல்கள் பற்றி செய்யப்பட்ட முறைப்பாடுகளை தேசத்துரோக நடவடிக்கைகள் எனக் குறிப்பிட்டதுடன் முறைப்பாடுகளைச் செய்தவர்களை தேசத் துரோகிகள் என்று சாடினார்.

(தொடரும்)

# தவறாளர்களை சீர்திருத்தும் பணியில் நீதிமன்றங்களில் சீர்திருத்த காரியாலயம்

நீதிமன்றங்களில் குற்றவாளியாக அடையாளப்படுத்தப்பட்டு பெருந்தொகை குற்றப்பணம் மாற்றீடாக கட்டாய சிறைத்தண்டனை அனுபவிப்பதற்கு அனுமதிப்பதன் மூலம் குறித்த தவறாளர் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், சமூகத்தினர் பாதிப்படைந்து வருகின்றனர். தொடர்ந்து இக் குற்றவாளிகள் சிறையிலிருந்து மீண்டும் சமூகத்துடன் இணையும் போது அவர்களை ஒதுக்கி வைத்தல், அவர்களின் பிள்ளைகளிற்கு பாரபட்சம் காட்டுதல் போன்ற செயற்பாட்டின் மூலம் அப்பிள்ளைகள் தவறுகள் செய்தல், நீதிமன்ற வளாகத்திற்குள் குற்றவாளியாக அடையாளப்படுத்தப்படுதல் போன்ற செய்முறை தொடர்ந்தவண்ணம்உள்ளன.

இந்நிலையில் நீதவான் நீதிமன்றங்களில் சிறைத்தண்டனை மற்றும் பெருந்தொகையான குற்றப் பணத்திற்கு பதிலாக அவர்களை சமு தாய சீர்திருத்தக் கட்டளைக்கு உட்படுத்தி குறித்த தவறாளர்களையும் அவர்களின் குடும்பத்தினரையும் பாதுகாப் பதற்காக "சமுதாய சீர் திருத்த காரியாலயங்கள்" செயற் பட்டு வருகின்றன. சட்டம், கட்டளை மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகின்றசமுதாயம் சார் சீர்திருத்த திணைக்களம் இலங்கையிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் நீதவான் நீதிமன்றங்களில் சமுதாய சீர்திருத்த காரியாலயங்களை அமை த்து மக்களுக்கு சேவையாற்றி வருகின்றது .

இதனடிப்படையில் "யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தில் அமைந்துள்ள "சமு தாயம் சார் சீர்திருத்த காரியாலயம்" 1999ம் ஆண்டு 46ம் இலக்க சமுதாய சீர் திருத்த சேவைகட்டளைக்கு" அமைய தவறாளர்களை சீர்செய்து வருகின்றது. சமுதாய சீர்திருத்த திணைக் களத்தினால் சமுதாயத்தினை சீர்திருத்தும் பணியில் நீதி மன்றங்களில் சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் மற்றும வேலை பரிசோதகர் போன்றவர்களையும் ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் (DCBC) நியமித்துள்ளது.

இவ்வாறாக யாழ்ப்பாண சமுதாய சீர்திருத்தக் காரியாலயம் சமுதாய சீர்திருத்த கட்டளைக்கு உட்படும் தவறாளர்களுக்கு தனிப்பட்ட உளவள ஆலோசனை, குழு மற்றும் குடும்ப ஆலோசனைகள் , ஆன்மீக சிந்தனை நிகழ்வுகள் ,தலைமைத்துவம் ,முகாமைத்துவம் , உடல் உள ஆரோக்கியம் , சுகாதாரம் மற்றும் நல்ல உணவு பழக்கங்கள் தொடர்பான ஆளுமை விருத்தி செயற்பாடுகளையும், போதைப் பொருள் ,சூழல் பாதுகாப்பு, சட்டம் மற்றும் கல்வி தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளையும் , சுயதொழில் கற்கை நெறிகளையும் தவறாளர்களுக்கு வழங்கி வருகின்றது.

அநதவகையில் 2013ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தில் செயற்பட்டு வரும் சமுதாய சீர்திருத்த காரியாலயம் 2013இல் குறிப்பிட்ட தவறாளர்களை நீதிமன்றத்திடமிருந்து பெற்றுசீர்திருத்தி இருந்தன. தொடர்ந்து 2014ஆம் ஆண்டு 65 தவறாளர்களையும் , 2015ம் ஆண்டு 145 தவறாளர்களையும் சமுதாய சீர்திருத்த கட்டளைக்கு உட்படுத்தி அவர்களுக்கென சீர்திருத்த பணிகளை மேற்கொண்டுள்ளது . இவ்வாறான சமுதாய சேவைக் கட்டளையாளர்களில் 10 பேர் பெண்களாவர். இவர்களிற்கு சுய தொழில் வேலைவாய்ப்புக்களையும் கடன் திட்டங்களையும் , அவர்களின் பிள்ளைகளுக்கான பாடசாலை உபகரணங்களையும் எமது பிரதேசசெயலகத்தில் கடமை புரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக சமுதாய சீர்திருத்த கட்டளைக்கு உட்படுத் தப்பட்டதவறாளர்களுக்கு சிறப்பு பண்டிகை கொண்டாட்டங்களை ஒழுங்குபடுத்தி நடைமுறைப்படுத்துவதுடன் அவர்களின் விசேட திறமைகள் இனம்காணப்பட்டு அதற்கேற்றவாறு வேலை வாய்ப்புக்களையும் பயிற்சி திட்டங்களையும் வழங் குவதுடன் அவர்களை பயன்படுத்தி சிறப்பு வேலைத் திட்டமாக கடித உறைகளை தயாரித்து அரச மற்றும் தனியார் அலுவலகங்களுக்கு வழங்கி வருகின்றது.

இவ்வாறாக யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்திற்கு உட்பட்ட பிரதேச செயலகங்களான நல்லூர் ,யாழ்ப்பாணம், கோப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமித்துஅவர்களின் ஊடாக சமுதாய சேவை கட்டளைக்கு உட்படுத்தப்பட்ட தவறாளர்கள் சமுதாய சேவை கட்டளை நிறைவேற்றப்பட்டவர், சிறையிலுள்ளவர் குடும்பங்கள் சிறையிலுள்ளவர்கள ,குற்றம் புரிவதற்கு எத்தனிப்பவர்கள் போன்றவர்களை அடையாளப் படுத்தி அவர்களின் பிரச்சினைகள் பிரதேச செயலகங்களில கவனத்திற்கு கொண்டு வந்து பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மூலம் உளவள ஆலோசனைகளையும் தொழிற் பயிற்சிகளையும் கடன் திட்டங்களையும் வழங்கி இவ்வாறான பிரிவினர் மீண்டும் குற்றம் செய்யாத வகையில் அவர்களது பிரச்சினைகளை இனம கண்டு சமூகத்துடன் இணைத்து அவர்களை நல்வழிப்படுத்துவதே அபிவிருத்தி உத்தியோகத்தரின் கடமையாகும.

யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்தில் அமைந்திருக்கும் சமுதாய சீர்திருத்த காரியாலயம் திறந்த நீதிமன்றில் கட்டாய சிறைத் தண்டனை மற்றும் நட்ட ஈட்டு பணம் தவிர்ந்த ஏனைய தண்டப் பணங்களுக்கு, சிறு குற்றம் தொடர்பான தண்டனைக்கு கௌரவ நீதிவானின் அனுமதியுடன் சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் குறித்த தவறாளர் களைச் சமுதாய சீர்திருத்த கட்டளைக்கு உட்படுத்தி அவர்கள் தொடர்பான கோவைகளை பேணுவதுடன் அவர்களை பயன்படுத்தி வேலை பரிசோதகர் ஊடகநீதிமன்ற வளாகத்தில் சிறு வேலைத் திட்டங்களை செய்து வருகின்றனர்.

அதனுடன்இக்கூமக சேவை கட்டளையாளர் தொடர பான விபரங்களை எமது (தலைமை காரியாலயம் ) சமுதாயம் சார் சீர்திருத்த திணைக்களத்திற்கு வழங்கி வருகின்றது . இவ்வாறான செயற்பாடுகளில்யாழ்ப்பாண சமுதாய சீர்திருத்த காரியாலயம் செயற்பட்டு வருகின்றது.

சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர்,
சமுதாய சீர் திருத்த காரியாலயம்
நீதவான் நீதிமன்றம்
யாழ்ப்பாணம்

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்திற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின் பொருட்டு கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கல்வித்தகைமைகள்:- சிங்களம், தமிழ், ஆங்கிலமொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் க.பொ.த.(சா.த பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். அத்துடன் பிரயோக கணிதம், தூய்கணிதம், இரசாயனவியல், பௌதீகவியல், இணைந்த கணிதம் போன்ற பாடங்களில் இரண்டு பாடங்கள் உள்ளடக்கப்பட்டு விஞ்ஞான கணித துறைக்குரிய பாடங்கள் மூன்றில் க.பொ.த.(உ/த)பரீட்சையை ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். தொழிற்தகைமைகள்: மொறட்டுவ பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியியல் (குட்டடப்பொறியியல் துறையிலான டிப்போளாமா பெற்றிருத்தல் அல்லது கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் அங்கீகாரம் பெற்றுள்ள நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியியல் (கட்டடப் பொறியியல் துறையிலான) டிப்ளோமா பெற்றிருத்தல் அல்லது இலங்கை பொறியியல் நிறுவ னத்தினால் நடத்தப்படுகின்ற பொறியியல் பரீட்சையின் முத லாம் பகுதியை (கட்டடப் பொறி யியல் துறையில்ான ) வெற்றி கரமாகப் பூரணப்படுத்தியிருத்தல்.

வயதெல்லை:ஆகக் குறைந்தது 18 வயதிற்கு குறையாமலும் ஆகக் கூடியது30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 2016 பங்குனி 28 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னமோ கிடைக்கத்தக்கவாறு பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணை க்களம், த.பெ. இலக்கம் 13, கெட்டம்பே, பேராதனை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு 2016/02/26 இல் வெளிவந்த வர்த்தமானி பத்திரிகையை பர்வையிடலாம். (இ

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி (II)ஆம்தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் பொருட்டு கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கல்வித்தகைமைகள், இரசாயனவியல் விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம் மற்றும் உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களில் 2 பாடங்கள் உள்ளடக்கப்பட்டு விஞ்ஞான, கணிததுறைக்குரிய பாடங்கள் மூன்றிலும் க.பொ.த. (உ/த)பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். அத்துடன் சிங்களம், தமிழ், ஆங்கிலமொழி , கணிதம், விஞ்ஞானம்மற்றும் மேலும்ஒருபாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் க.பொ.த. (சா.த பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண் டும்.

தொழிற்றகைமைகள்:-மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையாளரினால் அங்கீகரிக்கப் பட்டுள்ள தொழில் நுட்பப் பாடசாலை ஒன்றில் இருந்து வழங்கப்படும். இருவருட கால கால்நடை வளர்ப்பு டிப்ளோமா தொடர்பான சான்றிதழை பெற்றிருத்தல் அல்லது கால் நடை வளர்ப்பு துறைக்குரிய தேசிய தொழிற்பயிற்சித்தன்மை (NVQ-6) மட்டத்தின் தகைமைகளை பூரணப்படுத்தி இருத்தல் அல்லது உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற் குறிப்பிட்தொழில்நுட்ப சான்றிதழை வழங்குகின்ற நிறுவனத்திடம் வினவி கருத்துகளைப்பெற்றுக் கொண் டதன் பின்னர் மேற் குறிப்பிடப் பட்ட தொழில் நுட்ப தகைமைகளுக்கு சகல விதத்திலும் சமமானது என மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும். ஏனைய தொழில்நுட்பதகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் ஆகக்கூடியது30வயதிற்குமேற்படாமலும் இருத்தல் வேண் டும்.

விண்ணப்பங்கள் 2016 பங்குனி 28 ஆம் திகதி யன்றோ அல்லது அதற்கு முன்னமோ கிடைக்கத்தக்கவாறு பணிப்பாளர் நாயகம், கால்நடைஉற்பத்திசுகாதாரத்திணைக்களம், த.பெ. இலக்கம் 13, கெட்டம்பே, பேராதனை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படுதல்வேண்டும். மேலதிக தக ல்களுக்கு 2016/02/26 இல் வெளி வந்த வர்த்தமானி பத்திரிகையை பார்வையிடலாம். (இ

# பிரசவத்தின் பின் வைத்தியசாலையிலிருந்து குழந்தையுடன் தலைமறைவானார் தாய்

பிரசவத்தின் பின்னர் இளம் தாய் ஒருவர் வைத்தியசாலையிலிருந்து குழந்தையுடன் தலைமறையாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் தம்புள்ள வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளதாக தம்புள்ளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். கலேவல, புலனவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதான யுவதி ஒருவர் பிரசவத்திற்காக தம்புள்ளை வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து அந்த யுவதிக்கு ஆண் குழந்தை பிறந்த நிலையில் அவர் திடீரென வைத்தியசாலையில் இருந்து குழந்தை யுடன் தலைமறைவாகி யிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளன. (இ)

# குளவி கொட்டுக்கு இலக்கான 15 பேர் வைத்தியசாலையில்

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உருளவ ள்ளி கீழ் பிரிவு தோட்டத்தில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த 15 ஆண் தொழிலாளர்கள் குளவி தாக்குதலு க்கு இலக்காகி அக்கரபத் தனை பிரதேச வைத்தி யசாலையில் சேர்க்கப்பட் டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 10 மணிக்கு இடம் பெற்றுள்ளதாக பாதிக்கப் பட்ட தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

சிகிச்சைக்காக அக்கரப்பத்தனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 15 தொழிலாளர்களில் 13 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளதாகவும் மேலும் ஒருவர் குறித்த வைத்திய சாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வரு வதாகவும் மற்றுமொருவர் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

# 43 நாய்கள் விடைபெற்றன

நெதர்லாந்திலிருந்து இந் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட 43 நாய்கள், உத்தியோகபூர்வ பொலிஸ் நாய் பிரிவில், ஆறு மாத கால பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறின.

இந்த வைபவம், கண்டி பொலிஸ் விளையாட்டு மைதானத்தில், 24ஆம் திகதி புதன் கிழமையன்று இடம் பெறறது.

வெடிபொருட்களைக் கண்டறிதல், போதைப் பொருட்கள், குற்றப்புலனாய்வு ஆகிய பயிற்சிகளை நிறைவு செய்து கொண்டுள்ள இந்த 34 நாய்களும், நாடளாவிய ரீதியில் உள்ள 5 பொலிஸ் பிரிவுகளில் சேவையில் ஈடு படுத்துவ தற்கு நடவடிக்கை எடுகப் பட்டுள்ளது. (இ)

# புதிய நிர்வாகத் தெரிவு

கலையரசி சனசமூக நிலையத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் அண்மையில் இடம்பெற்ற போது புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதற்கமைய தலைவராக ஜொலியும் செயலாளராக யோகச்சந்திராவும் தெரி வு செய்யப்பட்டனர். அத்துடன் இந்நிகழ்வில் 2015ஆம் ஆண்டில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த நிலையத்தின் பிள்ளைகள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (இ-5-52)

# இளைஞர்,யுவதிகளுக்கு யாழில் நேர்முகத்தேர்வு

தொழில் வாய்ப்புக்காக காத்திருக்கும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இளை ஞர், யுவதிகளை முன்னணி தனியார் நிறுவனம் ஒன் றின் 600 வரையான வெற்றிடங்களுக்கு சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகத் தேர்வு பொது மக்கள் தொழில் சேவை நிலையத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

இவ் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு நேர்முகத் தேர்வு மார்ச் மாதம் 10ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை யாழ்ப்பாணத் தில் நடைபெறவுள்ளது.

இந்நேர்முகத் தேர் விற்கு தோற்ற விரும்பும் க.பொ.த உயர்தரம் மற்றும் க.பொ.த சாதாரண தரம் வரையில் கல்வி கற்ற 27 வயதுக்கு மேற்படாத ஆண்களும் 24 மேற்படாத பெண் களும் தோற்றலாம்.

நேர்முகத் தேர்வுக்கு தோற்ற விரும்புவோர் முக்கியமாக தங்கள் கல்விச் சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், கிராம அலுவலரின் சான்றிதழ் என்பவற்றோடு அவசியமான ஏனைய சான்றிதழ்களுடன் நேர்முகத் தேர்விற்கு தோற்ற முடியும்.

இவ் அரிய வாய்ப்பினை தவறவிடாதுபயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன் மேலதிக விளக்கங்கள் மற்றும் அறிவுறுத்தல்களை மாவட்ட பொதுமக்கள் தொழில்சேவை நிலையத்தில் நேரடியாகவோ அல்லது 021 221 9359 இலக்க தொலைபேசியூடாகவோ அல்லது பிரதேச செயலகங்களில் மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் நேரடியாகத்தொடர்பு கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# தமிழ் சினிமா வரலாறு

**107**

## ஜனாதிபதியின் தங்கப்பதக்கம் பெற்ற “சம்சாரம் அது மின்சாரம்”

...1982 ஒகஸ்ட் 14 ஆம் திகதி வெளிவந்த சகலகலா வல்லவன் வெள்ளி விழா படமாக அமைந்தது. அது மட்டுமின்றி தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளிலும் டப் செய்யப்பட்டு வெற்றி பெற்றது.

ஏவி.எம்.ஸ்டுடியோவின் அடுத்த படம் பாயும்புலி. 1983 பொங்கலன்று இப்படம் வெளிவந்தது. ரஜினிகாந்தும், ராதாவும் இணைந்து நடித்தனர். பஞ்சு அருணாசலம் வசனம் எழுத இளையராஜா இசை அமைத்தார். எஸ்.பி.முத்து ராமன் டைரக்ட் செய்தார்.

இது 133 நாள் ஓடியது. இந்தி தெலுங்கு ஆகிய மொழிகளிலும் டப் செய்யப்பட்டது.

**முந்தானை முடிச்சு**

இளைய தலைமுறையுடன் இணைந்து படங்களைத் தயாரிக்க முடிவு செய்த ஏவி.எம். நிர்வாகம் அடுத்தபடியாக கே.பாக்யராஜை வைத்து ஒரு படத்தை உருவாக்க முடிவு செய்தது.

இந்தப்படத்தைத் தயாரிக்கும் முழுப்பொறுப்பையும் பாக்யராஜ் ஏற்றார். கதாநாயகனாக நடித்ததுடன் கதை-வசனம் எழுதி டைரக்ஷனையும் கவனித்தார்.

கதாநாயகியாக ஊர்வசி அறிமுகமானார்.

படத்துக்கு இளையராஜா இசை அமைத்தார். ஒ ளிப்பதிவு: அசோக் குமார்.

22.-7.1983 அன்று ரிலீசான இப்படம், தமிழ் நாட்டில் எல்லா சென்டர்களிலும் சக்கை போடு போட்டது. 201 நாள் ஓடி வெற்றி வாகை சூடியது.


இதில் இடம்பெற்ற முருங்கைக்காய் தமாஷ் பரபரப்பாகப் பேசப் பட்டது. இக்கதை பின்னர் இந்தியிலும் தெலுங்கிலும் நேரடியாகத் தயாரிக்கப்பட்டது.

ஏவி.எம். புரொடக்ஷன்ஸ் குறைந்த செலவில் தயாரித்த சம்சாரம் அது மின்சாரம் 1986 இல் இந்தியாவின் சிறந்த படமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஜனாதிபதியின் தங்கப்பதக்கத்தைப் பெற்றது.

**பாரதிராஜா**

கே.பாக்யராஜை வைத்து முந்தானை முடிச்சு படத்தை தயாரித்த சரவணன், பாக்யராஜின் குருவான பாரதிராஜாவை வைத்து ஒரு படத்தைத் தயாரிக்க விரும்பினார்.

பெரிய கம்பெனியின் படத்தை இயக்குவதில், பாரதிராஜாவுக்கு தயக்கம் இருந்தது. ஏனென்றால் தன் விருப்பப்படி முழு சுதந்திரத்துடன் படத்தை எடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பவர், பாரதிராஜா. அதை அறிந்திருந்த சரவணன், நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ, அதன்படியே படத்தைத் தயாரிப்போம். எதிலும் தலையிட மாட்டோம் என்று தெரிவித்தார்.



புதுமைப்பெண் படத்தில் ரேவதியும் பாண்டியனும்



சம்சாரம் அது மின்சாரம் படத்தில் விசு, லட்சுமி தோன்றும் காட்சி

அதைத் தொடர்ந்து, பாரதிராஜா டைரக்ஷனில் ஏவி.எம்.மின் புதுமைப்பெண் தயாராயிற்று.

இதில் ரேவதியும் பாண்டியனும் ஜோடியாக நடித்தனர். பஞ்சு அருணாசலம் வசனம் எழுத இளையராஜா இசை அமைத்தார்.

படம்14.07.1984 இல் வெளியாயிற்று. ஏவி.எம். பேனரில் பாரதிராஜா டைரக்ஷன் என்பதால் ரசிகர்களின் பெரும் எதிர்பார்ப்பைப் பெற்ற இப்படம், தரமானதாகவும் அமைந்து 184 நாட்கள் ஓடி வெள்ளிவிழா கொண்டாடியது.

**நல்லவனுக்கு நல்லவன்**

இதே ஆண்டு ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி, ரஜனிகாந்த்-ராதிகா நடித்த நல்லவனுக்கு நல்லவன் ஏவி.எம்.மின் மற்றொரு வெற்றிப்படமாகும். இது 152 நாட்கள் ஓடியது.

*(தொடரும்)*

# இலங்கை மீதான....

(நேற்றைய கட்டுரையின் தொடர்ச்சி)

...இதை விடுத்து தற்போது நடைமுறையிலிருக்கும் அரசாங்கம் மீது எதுவித பிரயோசனமுமில்லாமல் கற்களை வீசியடித்தும் சகதியை வாரியிறைத்து தூற்றுவதன் மூலம் நாட்டிற்கு நன்மைகளெதுவும் ஆகப் போவதில்லை என்பதுடன் இவையெல்லாம் அதிகாரத்திற்கு மீண்டும் வருவதற்கான அவரது வீண்பிரயத்தனங்கள் தான் என்பதையும் நாடு மிகுந்த விழிப்புடன் கண்டுகொண்டுதானுள்ளது.

இந்த விடயத்தில் மைத்திரி- ரணில் அரசானது இராஜதந்திர ரீதியில் எவ்வளவோ சாதித்துள்ளது. எம்முடன் ஏற்கனவே பகைமை கொண்டவையாகியிருந்த வல்லரசு நாடுகள், இப்போது எவ்வளவோ கூடுதல் அனுகூலமானபோக்கினை வெளிப்படுத்துவதுடன் சர்வதேச ரீதியில் பல நாடுகள் எம்மீது பதித்து வைத்திருந்த இழிவான கருத்தும் (international pariah) தற்போது எவ்வளவோ தூரம் மாறி விட்டிருக்கிறது.

‘UNHRC’ தீர்மானப்படி இலங்கை ஆயுதப்படை உறுப்பினர்கள் மட்டிலான வழக்குகளின் தீர்ப்புக்கான அமர்வுகளில் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்காற்றல் பற்றிய எதிர்வாதங்களே தீர்மானம் நடைமுறைப் படுத் தப்படுவதற்கு எதிராக கிளம்பியுள்ள பிரதான தடையாக இருக்கிறது. இந்த பிரச்சினை மட்டில் இலங்கைப் பிரதிநிதிகளுக்கும் தீர்மானத்தின் அனுசரணையாளர்களுக்குமிடையில் எவ்வளவோ கலந்துரையாடல் இடம்பெற்றிருக்கும் என்பதில் சந்தேகத்திற்கிடமேயில்லை.



அரசியலமைப்பில் உட்படுத்தப்பட்டுள்ள விசேட ஏற்பாடுகளின்படி வெளிநாட்டு நீதிபதிகள் எமது நீதிமன்றங்களின் அமர்வுகளில் பங்குபற்றுவது இயலுமான ஒன்றல்ல என பிரதமர் ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டியிருந்தார். பங்குபற்றுவதற்கான மாற்று ஏற்பாடாக அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படல் வேண்டும். இந்த மாற்றத்திற்கான திருத்தம் பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை பலத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் மக்களுக்கான கருத்துக் கணிப்பொன்றில் 2/3 பெரும்பான்மை பலத்துடன் அது உறுதிப்படுத்தப்படவும் வேண்டும்.

இவ்விதமாக இது மகிந்த ராஜபக்ஷ தனது மேலோட்டமான வரலாற்றுச் சிற்றறிவைக் கொண்டு கற்பனை செய்து அங்கலாய்த்துக் கொண்ட ‘கண்டி- உடன்படிக்கை’ போன்று அவ்வளவு எளிதான செயற்பாடுமல்ல. அரசியலில் தோல்வி கண்டிருக்கும் முன்னாள் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ஷவினதும் அவரதும் பலதும் எளிதான பிரச்சினை என்னவென்றால், இராஜ தந்திரம் என்பதை அவர்கள் சரியாக புரிந்து கொள்ளத் தவறியதேயாகும்.

அதனாலேயே அவர்கள் தென்பகுதி ‘வெண்கல- பாத்திரக் கடையுள் புகுந்து அட்டகாசம் செய்யும் அம்பாந்தோட்டை எருமை’ போன்ற எண்ணத்தில் உலகின் ஆகக் கூடுதல் வலிமை மிக்க வல்லரசு நாடுகளுடன் முட்டி மோதிக்கொள்ளலாமென எண்ணுகிறார்கள்.

கிராமப் புறத்து காடையனொருவன் தனது சாரத்தை உயர்த்தி சண்டிக் கட்டு கட்டியபடி..... “அடோ! பைற்றுக்கு (சண்டைக்கு) வாங்கடா ! ......” என்று சண்டித்தனமாக உரத்துச் சத்தமிடுவது போன்று கூப்பாடு போடுவதை விடுத்து அதற்குப் பதிலாக இராஜதந்திர நடவடிக்கைகளை பொறுப்புடன் கையாண்டு பயன்பெறக்கூடிய வாய்ப்புக்களையே தேடிக் கண்டுகொள்ள வேண்டும்!

(முற்றும்)

அறம் கணக்கற்ற பாவங்களை மூடிவிடும். ~ புனித பைபிள்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# குற்றச் செயல்களும் தண்டனைத் தீர்ப்புகளும்

கோடரியால் மனைவியை கொத்திக் கொன்ற கணவனுக்கு மரண தண்டனை. மாணவியின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நபர்களுக்கு தொடர்ந்தும் விளக்கமறியல் என நாளாந்தம் செய்திகள் வெளிவந்தவண்ணம் உள்ளன.

தண்டனைகள் வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் குற்றச் செயல்களும் அதிகரித்து வருவதைக் காண முடிகின்றது.

இவ்வாறு தண்டனைகள் வழங்கப்படுகின்ற போதிலும் குற்றச்செயல்கள் குறையவில்லையாயின் தண்டனைகள் குற்றச்செயல்களைக் குறைக்கமாட்டா என்பதும், மாறாக பாதிக்கப்பட்டவருக்கும் அவர் சார்ந்தவர்களுக்கும் நியாயம் கிடைக்கவேண்டும் என்ற அடிப்படையில் தண்டனைகள் அமைவதாகவுமே கருத முடியும்.

ஆக, தண்டனைகள் குற்றச்செயல்களைக் குறைக்கவில்லை எனில் குற்றச்செயல்களில் ஈடுபடாமல் இருப்பதற்குரிய வழிமுறையை கண்டறிந்து அவற்றை நடைமுறைப்படுத்துவதே ஒரே வழியாகும்.

நாளுக்குநாள் நம் மண்ணில் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதன் அடிப்படையில், எங்கள் மண்ணில் ஆன்மிகமும் பண்பாட்டு விழுமியங்களும் தேய்வடைந்து விட்டன என்பதையே உறுதி செய்துகொள்ள முடியும்.

ஒரு காலத்தில் ஆலயங்களில் கற்பூரம் அணைத்து சத்தியம் செய்கின்ற முறைதான் எல்லாக் குற்றச் செயல்களையும் தடுத்து வைத்திருந்தது.

ஆலயத்தில் பொய்ச் சத்தியம் செய்வது இறை நீதிக்குப் பங்கம். அது நம் வாழ்க்கையில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கைகள் பாவ பழிகளை செய்வதிலிருந்து பாதுகாத்தது.

இறை வழிபாடு, சமய நம்பிக்கை, பாவம் செய்யக் கூடாது, மற்றவர்களுக்குத் தீங்கு செய்தால் அது ஊழ்வினையாக நம்மை உறுத்தும், நம்பிக்கைத் துரோகம் இழைத்தலாகாது, பஞ்சமா பாதகங்களைச் செய்தால் அது எம் சந்ததியைச் சூழும் என்ற நம்பிக்கைகள் நம்மை வழிப்படுத்தின.

ஆனால் இன்று நிலைமை வேறு. இறை நம்பிக்கை என்பது அருகிவிட்டது. எப்படியும் பொருள் ஈட்டலாம்; அதற்கு எத்தகைய சூழ்ச்சிகளையும் செய்யலாம். இவை வியாபாரத் தந்திரம் என்று பொருள்படுமே அன்றி பாவ வினையென்று யாரும் நினைக்கக் கூடாது. என்பதாக நிலைமை மாறிவிட்டது.

சுருங்கக் கூறின் ஒரு காலத்தில் நம் முன்னோர்கள் கருதிய பாவ பழிகள், சூழ்ச்சிகள் இன்று பொருளாதாரத் தந்திரோபாயங்களாகவும் அரசியல் ராஜதந்திரமாகவும் போர் நுட்பங்களாகவும் காட்டப்படுகின்றன.

இதனால் எங்கும் அதர்மச் செயல்கள் தலைவிரித்தாடுகின்றன. இதன் விளைவுகள் தான் நாளாந்தம் நாம் அறிகின்ற பாலியல் வன்மங்களும் கொலைகளும் மற்றவர்களின் சொத்துக்களை அபகரிப்பதுமாக நடந்து கொள்கின்றன.

எனவே இத்தகைய நிலைமைகளை மாற்றி மீளவும்; இறை நம்பிக்கை, பண்பாட்டு ஒழுக்க விழுமியம், பாவபுண்ணியம் என்ற நம்பிக்கைகள், தர்மத்தின் வழியில் நடப்பதன் மூலம் இன்பமான வாழ்வை வாழலாம், பஞ்சமா பாதகங்களை அறவே கைவிட வேண்டும் என்ற சிந்தனைகளை நம் மாணவர்களிடம் ஏற்படுத்திவிட வேண்டும்.

இத்தகைய உயர் சிந்தனைகள் நிச்சயம் எங்களின் எதிர்கால வாழ்வில்; குற்றச் செயல்களும் இல்லை, தண்டனைகளும் இல்லை என்ற சூழமைவை ஏற்படுத்தும் என்பதால் பாடசாலைகள், வீடுகள், ஆலயங்கள் என எங்கும் அறக்கருத்துக்களை விதைக்கின்ற நுட்பங்களை அமுல்படுத்துவதே ஒரே வழியாகும்.

# மகிந்தவை பிரதமராக்கினால் சுதந்திரக் கட்சி பிளவுபடாது!

## ஊடக சந்திப்பில் கூட்டு எதிர்க்கட்சி கருத்து

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் ஒன்றை அமைத்தால் நாங்கள் கட்சியிலிருந்து வெளியேறாமல் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

கூட்டுஎதிர்க்கட்சிகள் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் விதமாகவே அவர் இதனைக் கூறியிருந்தார்.

மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் புதிய கட்சி ஆரம்பிக்கப்படுவதற்கு தாமதமாவது ஏன் என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்த அவர்,

தேர்தல் ஒரு வருடத்தால் பிற்போடப்பட்டுள்ளது. எனினும் நாங்கள் கூட்டு எதிர்க்கட்சியாக-அனைத்து அரசியல் கட்சிகளுடனும் இணைந்து பாரிய போராட்டம் ஒன்றை முன்னெடுப்போம் என்றார்.

அத்துடன் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியானதன் ரகசியம், இறுதி நேரம் வரை அவர்தான் வேட்பாளர் என்பதை வெளிப்படுத்தாமையே என்றும், அதனை வெளிப்படுத்திருந்தால் அவரின் வெற்றியை தடுத்திருக்க முடியும் என்றும் மஹிந்தானந்த அளுதகமகே கூறினார், (செ-12)

# இ.போ.ச பேருந்து மீது கல் வீசித் தாக்குதல்

(பொற்பதி)

இலங்கை போக்குவரத்து சபையின் பருத்தித்துறை சாலைக்கு சொந்தமான பேருந்து ஒன்றின் மீது நேற்றுக்காலை கல் வீசித் தாக்குதல் ஒன்று இடம்பெற்றதாக மருதங்கேணி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை சேவையில் ஈடுபட்ட குறித்த பேருந்து அன்றையதினம் மாலை வடமாராட்சி கிழக்கு கேவில் பகுதியில் தரித்து நிறுத்தப்பட்டது.

இதன் பின்னர் நேற்றுக் காலை 6.00 மணியளவில் வடமராட்சிக் கிழக்கு கேவில் பகுதியில் இருந்து பருத்தித்துறை நோக்கி சேவையில் ஈடுபட்டது.

காலை 6.00 மணியளவில் வத்தளை தாளையடியில் சென்றுகொண்டிருந்தபோதே குறித்த கல்வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றது.

இதனால் பேருந்தின் முன்பக்க கண்ணாடிகள் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து பேருந்து சாரதியும் நடத்துனரும் பேருந்தை மருதங்கேணி பொலிஸ் நிலையம் கொண்டு சென்றதுடன் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டது.

இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-5,64)

# பேருந்து மற்றும் பிக்கப்புடன் மோட்டார் சைக்கிள் விபத்து

## கால் முறிவுடன் நபரொருவர் படுகாயம்

(கெற்பேலி)

யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரிக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த நபர் ஒருவர் தனியார் பேருந்து மற்றும் பிக்கப் ரக வாகனம் என்பவற்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் அந் நபர் படுகாயமடைந்ததுடன் அவரது கால் ஒன்றும் முறிவடைந்துள்ளது.

இவ் விபத்துச்சம்பவம் நேற்று முற்பகல் 10.00 மணியளவில் சாவகச்சேரி பேருந்து நிலையத்தின் முன்பாக இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரிக்கு சென்று கொண்டிருந்த மேற்படி நபர் மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்ததில் கொடிகாமத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளாகியதுடன் அதே வேகத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் சென்ற பிக்கப்ரக வாகனம் ஒன்றுடனும் மோதியும் விபத்துக்குள்ளானார்.

இச் சடுதியான விபத்தினால் குறித்த நபர் படுகாயமடைந்ததுடன் அந் நபரது காலும் முறிந்தது.

இதையடுத்து அவர் உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இது தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரிப்பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (செ-5,83)

# கல்வியியற் கல்லூரியின் கணித தினவிழா இன்று

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கணிதத்தின விழா இன்று முற்பகல் 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை வலயக் கல்விப் பணிப்பாளர் அருளீஸ்வரி வேதநாயகமும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கணிதத்துறை ஆசிரியர் சபாநாயகம் அகிலனும்கலந்துகொள்ளவுள்ளனர். நிகழ்வில் கணிதத்துறை சார்ந்த ஓர்பிற் (Orbit – ஒழுக்கு) எனும் சஞ்சிகை வெளியீடும் இடம்பெறவுள்ளது. (இ-5)

# சமய அறிவுப்போட்டியும் பண்ணிசைப் போட்டியும்

(யாழ்ப்பாணம்)

மகா சிவராத்திரியை முன்னிட்டு உரும்பிராய் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ கண்ணகை பரமேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபையினரால் ஆண்டு தோறும் நடத்தப்படும சைவ சமய அறிவுப் போட்டிகள் மற்றும் பண்ணிசைப் போட்டி என்பன இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மதுரகவி காரை.எம்.பி. அருளானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கான பரிசில்தினம் எதிர்வரும் 7ஆம் திகதி சிவராத்திரி விசேட பூஜை தினத்தன்று நடைபெறும். (இ-5)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வடமாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

அந்தவகையில்சாரையடி, கிராமக்கோடு, பருத்தித்துறை நகரம், V.M. வீதி, கல்லூரி வீதி, தம்பசிட்டி, சாளம்பை, இரும்பு மதவடி, சக்களாவத்தை, மீசாலை, அல்லாரை, வெள்ளாம்போக்கட்டி, கச்சாய் துறைமுகம், கெற்பலி ஒரு பகுதி, கச்சாய் கடற்கரை, பாலாவி, கொடிகாமம், கலைவாணி, வரணி, இயற்றாலை, மந்துவல், கரம்பைக்குறிச்சி, கரமபன், வாழைத்தோட்டம், கொடிகாமம், சட்டநாதர் வீதி, பருத்தித்துறை வீதியில் கல்வியங்காட்டுச் சந்தியிலிருந்து நல்லூர் கோவில் வரை, நல்லூர் குறுக்குவீதி, செம்மணி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, கனகரட்ணம் வீதி, திருமகள் வீதி, மலர்மகள் வீதி, கலைமகள் வீதி, பூமகள் வீதி, சாஸ்திரியார் வீதி, நடுத்தெருலேன், நாவலர் வீதி, நொத்தாரிஸ் லேன், வலப்பர் வதி, புவனேஸ்வரி அம்மாள் வீதி, புறூடி லேன், ஸ்ரான்லி கல்லூரி வீதி, சுப்பிரமணியம் வீதி, முதலியார் வீதி, பாரதி லேன், புங்கன்குளம் வீதி புகையிரதக்கடவைவரை, நாயன்மார் வீதி, குகன் வீதி, பொன்னம்பலம் வீதி, நாவலர் வீதியில் மாம்பழம் சந்தியிலிருந்து நல்லூர் குறுக்கு வீதி வரை, ஏ-9 வீதியில் பாரதி வீதியிலிருந்து செம்மணி வளைவு வரை, நெடுங்குளம் வதிபுகையிரதக்கடவை வரை, முள்ளி, நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், SOS சிறுவர் பூங்கா, அரியாலை டீசல் அன்ட் மோட்டார் என்ஜினியரிங் பீ.எல்.சி, நாயன்மார் கட்டு Carlton Sports Network (CSN) ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் பிரமந்தனாறு, மயில் வாகனபுரம், தென்னியன் குளம், உயிலங்குளம், பாரதி நகர், மாங்காக்குடியிருப்பு, ஆலங்குளம், கல்விளான், கோவிந்தன் கடைச்சந்தி, பன்னன்கண்டி, வட்டக்கச்சி, கறுப்பிக்குளம், உடச்சக்கண்டி, மாயவனூர், இராமநாதபுரம், சாந்தபுரம், இரணைமடு, திருவையாறு, இரணைமடு விமானப்படை I மற்றும் II, வட்டக்கச்சி பாம், 651 ஆவது படைப்பிரிவு முகாம், பிள்ளையார் அரிசி ஆலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் சாம்பல்தோட்டம் கிராமம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் ஓலைத்தொடுவாய், தோட்டக்காடு, நீர்ப்பாசன சபை பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



குழந்தையாக இருந்தபோது நான் கொண்டிருந்த நம்பிக்கை, இப்போது நான் செயற்படுத்திக் கொண்டிருக்கின்ற நம்பிக்கை- அதுபோன்ற அசைக்கமுடியாத நம்பக்கையை உங்களிடம் நீங்கள் கொள்ளுங்கள். அத்தகைய மகத்தான நம்பிக்கையை, ஒவ்வோர் ஆன்மாவிலும் எல்லையற்ற ஆற்றல் இருக்கிறது என்ற நம்பிக்கையை நீங்கள் ஒவ்வொருவரும் கொண்டீர்களானால் உலகம் முழுவதையும் நீங்கள் புதுப்பித்து விடலாம்.

நான் உங்கள் அனைவரையும் நேசிக்கிறேன். ஏனென்றால நீங்கள் தெய்வங்களின் குழந்தைகள், மேன்மை மிக்க முன்னோர்களின் குழந்தைகள்.

சீதையைப் பற்றி என்ன சொல்வது! உலகம் முழுவதும் உள்ளகடந்தகால இலக்கியங்கள் முழுவதையும் அலசிப் பாருங்கள், அதுபோலவே எதிர்கால இலக்கியங்களையும் முடிந்தால் ஆராயுங்கள். இன்னொரு சீதையை நீங்கள் காணமுடியாது. இது உறுதி. சீதை இணையற்றவள்.

இராமர் வீரகாலத்தின் இலட்சிய புருஷர்,சத்தியம் மற்றும் ஒழுக்கத்தின் திரண்டவடிவம், இலட்சிய மகன், இலட்சியக் கணவன், இலட்சியத் தந்தை, இவைகளுக்கு மேலாக, இலட்சிய மன்னன்.

நமது புனிதமான தாய்த்திருநாடு ஆன்மீகமும் தத்துவமும் தழைத்த நாடு.ஆன்மீகச்செம்மல்களைப் பெற்ற நாடு.துறவின் உன்னதநாடு. இங்கு, இங்குமட்டுமே மிகப் பழங்காலத்திலிருந்து மிக நவீன காலம்வரை, வாழ்வின் மிகவுயர்ந்த இலட்சியம் மனிதனுக்குக் காட்டப்பட்டுள்ளது.

# கரவெட்டி பிரதேச கழகங்களுக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

## அரையிறுதியில் கருணாகரன்





கரவெட்டி பிரதேச கழகங்களுக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற போட்டியில் கருணாகரன் விளையாட்டு கழகத்தை எதிர்த்து கரவெட்டி நவசக்தி விளையாட்டுக்கழகம் மோதியது.

ஆட்ட நேர முடிவில் 2:1 என்ற செற்கணக்கில் கருணாகரன் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது. (கு)

## மாவட்ட ரீதியிலான துடுப்பாட்டம் வீனஸ் விளையாட்டு கழகம் வெற்றி



பருத்தித்துறை வாரியேர்ஸ் மற்றும் புலோலியூர் இளந்தளிர் விளையாட்டுக்கழகம் இணைந்து நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இதில் வீனஸ் அணியை எதிர்த்து வல்வை அணி மோதியது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற வல்வை அணி ஆரம்பத்தில் துடுப்பாடிய 6 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 35 ஓட்டங்களை பெற்றது.

வீனஸ் அணி சார்பாக சிறந்த முறையில் பந்து வீசிய கஜேந்திரன், நிரோ (சோனி), பிரதீபன் (மல்லி) ஆகியோர் தலா இரண்டு இலக்குகள் கைப்பற்றினர்.

பதிலுக்குதுடுப்பாடிய வீனஸ்அணி 3.1 பந்து பரிமாற்றத்தில் 2 இலக்குகளை இழந்து 36 ஓட்டங்களை பெற்று வெற்றி கிண்ணத்தை தன் வசமாக்கியது.

இதில் சிறந்த முறையில் அதிரடியாக துடுப்பாடி நிரோஜன் (சோனி) 14, விவேக் 14 ஓட்டங்களை அணிக்காக பெற்றுக்கொடுத்தனர். அதனைத் தொடர்ந்து இளந்தளிர் அணியுடன் நடைபெற்ற சவால் கிண்ண போட்டியில் வீனஸ் அணி வெற்றி பெற்று கிண்ணத்தினை தனதாக்கியது. (கு)

## வடமராட்சி வலய பூப்பந்தாட்டத் தொடர் ஹாட்லி, நெல்லியடி மத்தி வெற்றி

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான பூப்பந்தாட்டத் தொடரில் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் 15 வயதுக் குட்பட்ட ஆண்கள் பிரிவில் நெல்லியடி மத்திய கல்லூரியும் முதலிடத்தைப் பெற்றுள்ளன.

நெல்லியடி மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் குறித்த ஆட்டங்கள் இடம் பெற்றன.

முதலில் இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், நெல்லியடி மத்திய கல்லூரியும் பலப்பரீட்சை நடத்தின. 3 சுற்றுக்கள் கொண்ட இந்த ஆட்டத்தில் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று இந்த வருட வலயச் சம்பியனாகியது ஹாட்லிக் கல்லூரி அணி. இந்தப் பிரிவில் மூன்றாமிடத்தை புற்றளை மகா வித்தியாலயம் பெற்றுக் கொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற 15 வயதுப்பிரிவுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரியும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் பலப்பரீட்சை நடத்தின.

இதில் 2:1 என்ற செற் கணக்கில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்று வலயச் சம்பியனாகியது. இந்தப் பிரிவில் மூன்றாமிடத்தை புற்றளை மகா வித்தியாலயம் பெற்றது. (க)



ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான வருடாந்த மென்பந்து துடுப்பாட்ட போட்டியில் மாங்குளம் மின்னொளி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று சம்பியனாகியது. அவ் அணியினை படத்தில் காணலாம்.



க்ாந்திஜீ விளையாட்டு கழகத்தினரால் நடத்தப்பட்ட அணிக்கு 6 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட 8 பேர் பங்குபற்றிய துடுப்பாட்டத்தொடரின் இறுதிப்போட்டியில் அரசடி ஃபயர் போய்ஸ் அணியை வீழ்த்தி 3 ஓட்டங்க ளினால் வெற்றி பெற்ற காந்திஜீ சுப்பர் கிங்ஸ் அணியினரை படத்தில் காணலாம்.

## உதைபந்தாட்ட சமர் மன்னாரில் இன்று ஆரம்பம்

ஜோசப்வாஸ் நகர் சிராம மக்களும் ஜோசப்வாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக்கழகமும் மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனமும் இணைந்து நடத்தும் மாபெரும் மின்னொளியிலான உதைபந்தாட்ட சமர் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் வரலாற்றில் இரண்டாவது தடவையாக மின்னொளியிலான போட்டியாக ஜோசப்வாஸ்நகர் இராயப்பு ஜோசப்பு மைதானத்தில் போட்டிநடைபெறவுள்ளது.

அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் மேற்படி போட்டியில 26 முன்னணி விளையாட்டுக்கழகங்கள் பங்கு பற்றுகின்றன.

இன்று ஆரம்பமாகும் மேற்படி போட்டி இனிவரும் ஒவ்வொரு வெள்ளி, சனி,ஞாயிறு, ஆகிய நாட்க ளில் மாலை 6.30மணிக்கு ஏழு நாளு க்கு மூன்று போட்டிகள் வீதம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## கரைச்சி கோட்ட மட்ட சதுரங்கப் போட்டிகள்

### இன்று ஆரம்பம்

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட கரைச்சிக்கோட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டிகள் இன்று 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது என கரைச்சிக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அ.அமிர்தலிங்கம் அறிவித்துள் ளார்.

இதன்படி 15 வயதின் கீழ் ஆண், 15 வயதின் கீழ் பெண், 19 வயதின் கீழ் ஆண், 19 வயதின் கீழ் பெண் என நான்கு அணிகளாக இப்போட்டிகள் நடைபெறவுள்ளன. ஒவ்வொரு அணியிலும் 7 பேர் வீதம் பங்குபற்றுதல் வேண் டும்.

இப்போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களையும் பெறும் அணிகள் கிளிநொச்சி வலய மட்ட போட்டிகளில் பங்குபற்றுவதற்காகத் தெரிவு செய்யப்படும். (கு)

# வங்காலை கிராம மீனவர்கள் மீது இனம் தெரியாதவர்கள் தாக்குதல்

(மன்னார்)

மன்னார் வங்காலை மீனவ கிராமத்தில் இருந்து நேற்று முன்தினம் மாலை தூண்டில் மூலம் கணவாய் பிடிப்பதற்குச் சென்ற மீனவர்களை, கடலில் வைத்து இனம் தெரியாத நபர்கள் கடுமையாக தாக்கியுள்ளதாக வங்காலை மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ராஜன் மார்க் தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவு காலம் என்பதால் கணவாய் அதிகளவில் பிடிப்பட்டு வரும் நிலையில் வங்காலை கிராமத்தைச் சேர்ந்த அதிகளவான மீனவர்கள் கணவாய் பிடிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் வங்காலை கிராமத்தைச் நேர்ந்த 3 மீனவர்கள் படகு ஒன்றில் நேற்று முன்தினம் மாலை தூண்டில் மூலம் கணவாய் பிடிப்பதற்காக சென்றுள்ளனர்.

குறித்த மீனவர்கள் கணவாய் பிடித்துக்கொண்டிருந்த போது, வேறு கிராம மீனவர்களினால் கடலின் நடுவில் அமைக்கப்பட்டுள்ள பட்டி வலையில் குறித்த கணவாய் தூண்டில் மாட்டியுள்ளது.

மாட்டிய தூண்டிலை வலையில் இருந்து எடுக்க வங்காலை மீனவர்கள் முற்பட்டுள்ளனர்.

இதன் போது பிறிதொரு படகில் வந்த சிலர் எவ்வித பேச்சுக்களுமின்றி கொண்டு வந்த இரும்புக் கம்பிகளினால் குறித்த வங்காலை கிராம மீனவர்கள் மீது கடுமையாக தாக்கியதோடு, வங்காலை மீனவர்களின் படகில் காணப்பட்ட பெறுமதி வாய்ந்த பொருட்களை பறித்து, ஒரு மீனவரை கடுமையாக தாக்கி கடலில் தூக்கி எறிந்துவிட்டுச் சென்றுள்ளனர்.

ஒரு மீனவர் நீந்தி கரை சேர்ந்ததோடு மேலும் ஒரு மீனவர் படகின் மூலம் கரை திரும்பியுள்ளார்.

எனினும் கடலில் தூக்கி வீசப்பட்ட மீனவர் நீண்ட நேரமாகியும் கரை திரும்பாத நிலையில் வங்காலை மீனவர்கள் கடலில் தேடுதல்களை மேற் கொண்டுள்ளனர்.

இதன் போது மன்னார் சௌத்பார் கடற்கரையில் இருந்து தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் குறித்த மீனவரை மீட்டு சௌத்பார் கடற்கரைக்கு அழைத்துவந்துள்ளனர்.

பின்னர் வங்காலை கிராம மீனவர்கள் குறித்த மீனவரை வங்காலைக்கு அழைத்து வந்துள்ள நிலையில் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடலில் போடப்பட்டுள்ள பட்டி வலை தடை செய்யப்பட்ட தொழிலாக காணப்படுகின்றது.

குறித்த பட்டி வலைகளை அகறுமாறு பல தடவைகள் கோரிக்கை விடப்பட்டுள்ள போதும் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் அசமந்த போக்குடன் செயற்படுகின்றனர்.

வங்காலை கடலில் இருந்து சுமார் 3 கிலோ மீற்றர் தொலைவில் வேறு கிராம மீனவர்கள் பட்டி வலைகளை அமைத்து கடற்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் வங்காலை கிராம மீனவர்கள் தொடர்ந்தும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக வங்காலை மீனவர் கூட்டுறவுச்சங்கத்தின் தலைவர் ராஜன் மார்க் மேலும் தெரிவித்துள்ளார். (செ-281)

# உண்ணாவிரதமிருந்து போராடுவோம்

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கிலுள்ள தமது நிலங்கள் அனைத்தும் விடுவிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி 32 நலன்புரி முகாம்களை சேர்ந்த மக்களும் உண்ணாவிரத போராடடத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக நலன்புரி நிலையங்களின் பொது நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதன்படி ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் கண்ணகி நலன்புரி முகாமில் இருந்து தொடர்ச்சியாக ஒவ்வொரு கிழமையும் ஒவ்வொரு நலன்புரி முகாமில் உண்ணாவிரதத்தில் ஈடுபடவுள்ளோம் எனவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

நேற்று காலை யாழ்.சுன்னாகம் சபாபதிபிள்ளை நலன்புரி நிலையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர்கள் இதனை தெரிவித்தனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது,

ஆறு மாத காலத்துள் இடம் பெயர்ந்து முகாம் களிலுள்ள மக்களுடைய பிரச்சனைகளை தீர்ப்பதாக ஜனாதிபதி கடந்த மார்கழி மாதம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த போது தெரிவித்திருந்தார்.

எனினும் அதன் பின்னர் அரசில் இருந்து வெளியாகும் செய்திகள் குறிப்பாக பாதுகாப்பு செயலாளர் தெரிவித்த கருத்துக்கள் எமக்கு அவர்கள் மீது இருந்த நம்பிக்கையை கேள்விக்குறியாக்குகின்றது. எனவே தான் நாங்கள் அகிம்சை வழி போராட் டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

இத் தீர்மானமானது 32 நலன்புரி நிலையங்களையும் சேர்ந்த நிர்வாகத்தோடும் இது யாருக்கும் எதுவித இடையூறுமின்றி இருந்த இடத்திலிருந்தே உண்ணாவிரதத்தில் ஈடுபடவுள்ளோம்.

இதன்படி எதிர் வருகின்ற வெள்ளிக்கிழமை கண்ணகி நலன்புரி முகாமில் இருந்து ஒவ்வொரு கிழமையும் ஒவ்வொரு நலன்புரி முகாமில் உண்ணாவிரத்தில் ஈடுபடவுள் ளோம் என அவர்கள் தெரிவித்துள்ளனர். (செ-4)

## வடக்கு மாகாண சபையின்

# புதிய அரசியலமைப்பு தொடர்பான தொகுப்பு அறிக்கை விரைவில்

(யாழ்ப்பாணம்)

புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பாக வட மாகாண சபை அரசியல் குழுவின் தொகுப்பு அறிக்கை விரைவில் வெளியிடப்படும் என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசின் புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பாக வட மாகாண மக்களுடைய கருத்துக்களை தெரிவிப்பதற்காக வட மாகாணசபையினால் முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன், தலைமையில் 19 பேர்கொண்ட அரசியல் குழு உருவாக்கப்பட்டிருந்தது.

அக்குழுவின் 2ஆம் அமர்வு நேற்றையதினம் முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்றது. கலந்துரையாடலின் நிறைவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதேஅவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசியல் யாப்பு தொடர்பாக ஆராயும் குழுவின் கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தகுழுவின் முதலாம் அமர்வு கடந்த முதலாம் திகதி நடைபெற்றது. அதில் சரித்திரரீதியாக எம்மிடம் உள்ள உரித்துக்களை பற்றி பேசிக் கொணடோம். இன்றைய 2 ஆம் அமர்வில் 10 பேர் கலந்து கொண்டிருந்தனர். பல விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

கடந்த அமர்வில் பேசப்பட்ட விடயங்களின் அடிப்படையில் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பவற்றை பரிசீலித்து பார்க்க வேண்டும் என்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இதனடிப்படையில் வரலாற்று ரீதியான விடயங்களை ஆராய்வதற்கும், அரசியல் ரீதியான விடயங்களை ஆராய்வதற்கும், அதிகாரப்பகிர்வு ரீதியான விடயங்களை ஆராய்வதற்கும் என 3 விடயங்களில் ஆய்வுகளை நடத்தவும் வரைபுகளை தயாரிக்கவும் 3 குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளது. 3 குழுக்களாக பிரிந்து இவை தொடர்பான பல விடயங்களை ஆராய்ந்து தொகுப்பு அறிக்கை ஒன்றை தயாரிக்கவுள்ளோம்.

இந்தக் குழுவின் அடுத்த அமர்வு எதிர்வரும் மார்ச் மாதம் 17ஆம் திகதி நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# இராணுவ அதி...

மீண்டும் நேற்று வெள்ளிக் கிழமை ஆரம்பிக்கப்பட்டு தோல்வியடைந்துள்ளது.

2009ஆம் ஆண்டு விசுவமடு இராணுவ முகாமில் கடமையாற்றிய நபரொருவரை மற்றுமொரு இராணுவ அதிகாரி கொலை செய்து புதைத்ததாக சந்தேகிக்கப்படும் இடத்தில் மேற்படி அகழ்வு இடம் பெற்றது.

கொலைச்சம்பவத்தை நேரில் கண்ட நபரின் வாக்குமூலத்தை அடுத்து அவரையும் அழைத்து வந்தே இந்த அகழ்வு இடம்பெற்றது.

கடந்த மாதம் 9ஆம் திகதி விசுவமடு பாடசாலைக்கு பின்புறமாக விருந்த காணி ஒன்றில் இந்த அகழ்வு பணி இடம்பெற்ற போதும் எந்தவொரு தடயப் பொருட்களும் காணப்படவில்லை.

இந்த நிலையில் நேற்று மீண்டும் அகழ்வு பணிகள் இடம்பெற்ற நிலையிலும் எந்தவித தடயங்களுமின்றி அகழ்வு தோல்வியில் முடிவடைந்தது. (செ-12)

# மனித உரிமைகள்...

மனித உரிமைகளை கண்காணிக்கும் வகையில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் ஒன்றை இலங்கையில் ஸ்தாபிக்க அழுத்தம் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ள சர்வதேச மன்னிப்புசபை, இந்தக் கோரிக்கையை அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 31-வது அமர்வுக்கு அனுப்பி வைத்துள்ளது.

அந்த கோரிக்கையில்,

2015ஆம்ஆண்டு ஏற்றுக்கொண்ட மனித உரிமை காப்பு பிரமாணங்களை நடைமுறைப்படுத்த ஐக்கிய நாடுகளின் பேரவை, இலங்கை அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இலங்கையின் போர்க்குற்ற விசாரணைகளின்போது சர்வதேசத்தின் தொழில்நுட்ப மற்றும் நிதியுதவிகள் அவசியமானவை.

விசாரணைகளை நியாயமாக முன்னெடுப்பதன் மூலமே மீணடும் வரக்கூடிய வன்முறைகளை தடுக்க முடியும்.

இதற்காக இலங்கையில் மனித உரிமைகள் அலுவலகம் ஒன்றை அமைக்க வேண்டிய தேவையுள்ளது என மன்னிப்புச்சபை சுட்டிக் காட்டியுள்ளது.

மேலும் இலங்கையில் சாட்சி பாதுகாப்பு விடயங்கள் சர்வதேச நியமத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும்என்றும் அந்தக்கோரிக்கையில வலியுறுத்தப்பட்டுள்ளது. (செ-12)

# அதிகார பகிர்வுக்கு...

வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

வட மாகாண ஆளுநராக ரெஜினோல்ட் குரே நியமிக்கப்பட்டுள்ளமையை அடுத்து அவரை வரவேற்கும் நிகழ்வு கொழும்பில் நேற்று நடைபெற்ற போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அதிகார பகிர்விற்கு 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் சிறந்ததொரு காரணியாக அமையும்.

இதற்காக 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்குள்ள தடைகளை நீக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

ஜனநாயக மக்கள் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர் பிரபா கணேஷன் மற்றும் தலைவர் குமர குருபரன் ஆகியோரின் ஏற்பாட்டில் இந்த வரவேற்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கொழும்பு - பம்பலப்பிட்டி கதிரேஷன் ஆலயத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து இந்த வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது வட புலத்தைச் சேர்ந்த கொழும்பு தமிழ் மக்களினால் வட மாகாண ஆளுநர் வரவேற்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# அமெரிக்க...

த்திரபுரம் மகாவித்தியாலயத்தில் அமெரிக்க ஆசிய பசுபிக் பிராந்திய கட்டளை பணியகத்தினால் 52 மில்லியன் ரூபாய் நிதி உதவியில் அமைக்கப்பட்ட வகுப்பறை கட்டடம் மற்றும் புனரமைக்கப்பட்ட விவசாய, விஞ்ஞான கூடங்கள் ஆகியவற்றை அவர் திறந்துவைத்து மாணவர்களின் பாவனைக்கு கையளித்தார்.

நேற்று பிற்பகல் இரண்டு மணியளவில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், கரைச்சி கோட்டக்கல்வி அதிகாரி அமிர்தலிங்கம் பாடசாலையின் அதிபர் திருமதி மீனலோஜினி மற்றும் அயற் பாடசாலைகளின் அதிபர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர். (செ-12)

# நல்லாட்சியாளருக்கும்...

த்தில் என்ன நடக்கும் என்பதை பொறுத்திருந்து பாருங்கள் என நாமல் ராஜபக்ஷ தற்போதைய ஆட்சியாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் லெப்டினன்ட் யோஷித ராஜபக்ஷ உள்ளிட்ட ஐவருக்கு 2 ஆவது முறையாகவும் பிணை வழங்க மறுத்த கடுவலை நீதிவான் தம்மிக ஹேமபால, அனைவரையும் எதிர்வரும் மார்ச் 10 ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்தார்.

இந்த பிணை மறுப்பு தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எமது குடும்பத்தை பழிவாங்கும் நோக்கிலேயே திட்டம் தீட்டி பிணை மறுக்கப்பட்டுள்ளது. இதற்கு நிதி குற்றப் புலனாய்வு பிரிவினரும் உடந்தை.

1989-90 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவ்வாறே எங்கள் கிராமங்கள் மீது குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தி தமது எதிர்ப்பை காட்டினர்.

ஆனால் இன்று பொது சொத்துக்களை ஆவணங்களாக வைத்து கொண்டு எமக்கெதிராக செயற்படுகின்றனர்.

அவர்கள் ஒன்றை மறக்க தேவையில்லை. நல்லாட்சி என கூறிக்கொண்டு ஆட்சியில் ஈடுபடுபவர்களுக்கும் பிள்ளைகள் உண்டு என நாமல் தெரிவித்தார். (செ-12)

# கைதான சந்தேக நபருக்கு...

செய்யப்பட்டார்.

அவரை நேற்று வவுனியா மாவட்ட நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தினர். இதனை விசாரித்த மாவட்ட நீதிபதி சந்தேக நபரை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உததரவு பிறப்பித்துள்ளார்.

இதேவேளை, பலத்த பாதுகாப்பின் மத்தியில் சந்தேக நபர் நீதிமன்றுக்கு பொலிஸ் வாகனத்தில் அரழைத்து வரப்பட்ட அதேவேளை, நீதிமன்றம் முன்னால் இளைஞர்கள் பலரும் கூடியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஹரிஸ்ணவியின் மரணம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டமை தொடர்பாக ஊடகவியலாளர்கள் நீதிமன்றம் முன்றலில் பொலிஸாரிடம் கேள்வி எழுப்பிய போது அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,

ஹரிஸ்ணவி கொலை தெடர்பில் நாம் சாதாரண முறைப்படி விசாரணை செய்து சந்தேக நபரை கைது செய்துள்ளோம். அவ்வாறு விசாரணை செய்யப்பட்ட நபரிடம் சந்தேக படும்படியான பல கருத்துக்களை பெற்றே தற்போது கைது செய்துள்ளோம்.

சிலர் தாயை சந்தேகம் என கூறுகின்றனர். எனினும் அவவாறு எதுவும் இல்லை. அத்துடன் இச்சிறுமியும் எவரையும் காதலிக்கவும் இல்லை என்பதும் எமக்கு தெரியவந்துள்ளதுடன், களவெடுக்கும் நோக்கோடும் எவரும் இவ் வீட்டிற்குள் செல்லவும் இல்லை எனவும் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (செ-250,281)

# கிணற்றுக்...

நேற்று முன்தினமிரவு முகம் கழுவுவதற்காகக் கிணற்றடிக்குச் சென்ற மாணவி, கிணற்றடியில் படர்ந்திருந்த பாசி சறுக்கியதால் கிணற்றுக்குள் வீழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

மாணவியின் சடலம், ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படுவதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர். (செ-12)

## ஆணைக்குழு...

மாதம் 1ஆம் திகதிகளில் யாழ் மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை நடைபெறுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் மார்கழி மாதம் இவ் அமர்வுகளின் இரண்டாம் கட்ட விசாரணைகள் யாழில் இடம்பெற்றிருந்த நிலையில்,

யாழ்.மாவட்டத்தில் விசாரணைகள் இடம்பெறாத பிரதேச செயலக பிரிவுகளில் இவ் அமர்வுகள் தற்போது இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் இன்று 27 ஆம் திகதி கோப்பாய், பருத்தித்துறை, கரவெட்டி பிரதேசத்தை சேந்தவர்களுக்கு கோப்பாய் பிரதேச செயலகத்திலும்,

நாளை 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர், நெடுந்தீவு ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்களுக்கு வேலணை பிரதேச செயலகத்திலும் நாளை மறுதினம் 29ஆம் மருதங்கேணி மற்றும் சாவகச்சேரி பிரதேச பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு சாவகச்சேரி பிரதேச செயலகத்திலும்,

மறுநாள் மார்ச் மாதம் 01ஆம் திகதி சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்குட்பட்டவர்களுக்கு சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் இந்த அமர்வுகள் இடம்பெறவுள்ளது. 27,28, 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள விசாரணைகள் காலை 8.30 மணி தொடக்கம் 5.30 மணி வரையும், மார்ச் மாதம் 01ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-4)

## இராணுவத்தினர்...

பரிசோதிக்கப்பட்டதுடன், அவர்களின் உடமைகளும் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

சோதனை இடம்பெற்ற இடத்துக்குச் சற்றுத்தொலைவில் இராணுவத்தினர் சிலர் காவலிலும் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். நீண்டகாலத்துக்கு பின்னர் இராணுவத்தினரால் இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## கமரூன், ஹூசைன்...

அகதிகளாக வாழ்வதுதான் இந்தியாவின் விருப்பம் என்றால், அதனை நாம் நிறைவேற விடமாட்டோம் என விரக்தியுடன் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பாலாலி விமான நிலைய அபிவிருத்தி எந்த தடையும் இன்றி மேற்கொள்ளப்படும் என பாதுகாப்பு அமைச்சர் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் ஆகியோர் அறிவித்துள்ள நிலையில், நேற்று காலை யாழ்.சுன்னாகம் சபாபதிபிள்ளை நலன்புரி நிலையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர்கள் இதனை தெரிவித்தனர். இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது,

சர்வதேசமானது எங்களுக்கு தெளிவான ஒரு முடிவை தீர்வை பெற்றுத் தருமென நாங்கள் நம்பியிருந்தோம். சர்வதேச தலைவர்கள் ஒவ்வொருவரும் இங்கு வரும் போது எமக்கு கூறுவது, நீங்கள் உங்கள் இடங்களுக்கு செல்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் எடுத்து வருகின்றோம். அது தொடர்பாக நாம் இலங்கை அரச தலைவர்களோடு பேசி வருகின்றோம் என தெரிவித்தனர். இருந்த போதிலும் யாராலும் எதுவித பயனுமில்லை.

அத்துடன் சர்வதேசம் என்ன சொன்னாலும் யார் வந்து போனாலும் நாம் எமது ஜனாதிபதியையே நம்புகின்றோம். அவருக்குதான் எம்மை சொந்த இடத்தில் குடியமர்த்துவதற்கும் எமது காணிகளை மீளக்கையளிப்பதற்கும் உரிமையுண்டு. எனவே அவர் கூறியதுபோல ஆறு மாதத்துக்குள் எமக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதற்கு ஜனாதிபதியோடு இணைந்து நாம் விழிப்பாக இருக்கின்றோம் என்பதை புலப்படுத்தவே இப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம் என அவர்கள் தெரிவித்துள்ளனர். (செ-4)

## கட்சி அரசியல்...

மாநகரசபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஓரிரு மாதங்களுக்கு முன்னர் யாழ் மாநகர சபை ஊழியர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் மற்றும் வசதியீனங்கள் பற்றி நேரடியாக உங்களிடமிருந்து கேட்டு அவை தொடர்பாக முடியுமானவற்றிற்கு உடனடித் தீர்வு வழங்கப்பட்டுள்ளன.

நியமனங்கள் தொடர்பில் வகை தொகையின்றி 700ற்கும்மேற்பட்டவர்கள் எந்தவித நியமன ஒழுங்கு முறைகளும் பின்பற்றப்படாது வேலைக்கு உள்வாங்கப்பட்டனர். பின்னர் 2013ம் ஆண்டில் நாம் வடமாகாணத் தேர்தலில் வெற்றியீட்டியதும் இவ்வாறு நியமனம் செய்யப்பட்டவர்கள் உடனடியாகவே வேலையில் இருந்து நீக்கப்பட்டார் கள். யார் அவர்களை நியமித்தார்களோ அவர்களே தங்கள் நியமனங்களை இரத்துச் செய்து விட்டார்கள்.

எனினும் நாம் இவை பற்றி எந்தவித காழ்ப்புணர்வோ அல்லது மாற்றுக் கருத்தோ இன்றி கடமையாற்றிய அனைத்து ஊழியர்களையும் ஏதோ ஒரு விதத்தில் மீண்டும் கடமைகளில் இணைத்துக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம். இவற்றினால் ஏற்படக்கூடிய காலதாமதங்கள் தவிர்க்கப்பட முடியாதவை எனினும் எவ்வளவு விரைவாக இவற்றை நிறைவேற்ற முடியுமோ அவ்வளவு விரைவில் அவை நடைமுறைப்படுத்தப்படும். அரசியலானது நாங்கள் என்ன குறிக்கோளுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை மறக்க வைத்துள்ளது.

எங்களுடைய தனித்துவமான அரசியல், கட்சி ரீதியான ஏதோ எண்ணங்கள் எம்மை பிரித்து வைத்துள்ளன. எந்த கட்சியில் இருந்தாலும் எங்களுடைய நோக்கம்வடமாகாணத்தை விருத்தி செய்ய வேண்டும் என இருக்கும்போது அதற்கு இடமளிக்காது கட்சி ரீதியான பிரச்சினைகளில் ஈடுபடுவதால் எங்களுக்கிடையே பலவிதமான முரண்பாடுகள் வந்து கொண்டு இருக்கின்றன

சில தசாப்தங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் அல்லது வட பகுதியில் இயங்கிய அனைத்து அலுவலகங்களும் ஏனைய மாகாணங்களில் இயங்கிய அலுவலகங்களுக்கு அல்லது திணைக் களங்களுக்கு ஒரு முன் மாதிரியாக விளங்கின. ஆனால் இன்றைய நிலையோ எம்மை கையாலாகாதவர்களாகமாற்றி விட்டன.

எந்தவொரு விடயமாயினும் மத்திய மாகாணத்தை கேட்டுப்பாருங்கள் அல்லது மேல் மாகாணத்தைக் கேட்டுப் பாருங்கள் என்ற நிலைக்கு தள்ளப்பட்டி ருக்கின்றோம்.

இதற்கான வலுவான காரணம் நாம் சேவையில் இணைந்து விட்ட பின் தொடர்ந்து கற்கின்ற பழக்கத்தை அடியோடு மறந்து விட்டுள்ளோம். எமது முயற்சிகள் முழுவதும் பொருள் ஈட்டலிலும் குடும்பத்தை மேன் நிலைப்படுத்துவதிலும் மட்டுமே கழிந்து போகின்றன. சுயமேம்பாட்டில் நாட்டம் கொள்வதில்லை.

இதனாலேயே இன்று பலர் என்ன சேவையில் இணைந்தார்களோ அதே சேவையில் இளைப்பாறும்வரை ஏனோ தானோ என இருந்துவிட்டு ஓய்வு பெறுகின்றார்கள். இந் நிலைகளில் இருந்து மாற்றம் பெறுவது அத்தியாவசியமாகின்றது. எம்மவர்கள் முன்பு இருந்த நிலைக்கு உயர்வு பெற வேண்டும். அதற்கு நீங்கள் அனைவரும் பாடுபட வேணடும். நாம் ஒவ்வொருவரும் இந்த வட மாகாணத்தைக் கட்டிஎழுப்புவதில் ஏதோ ஒரு பங்கை வகிக்கின்றோம் என்ற எண்ணம் எம்மிடையே மேலோங்க வேண்டும். நாம் நினைத்தால் செய்ய முடியாதது ஒன்றுமில்லை. விரைவாக மாறிவருகின்ற இந்த இலத்திரனியல் உலகத்தில் நாமும் அதனுடன் ஒத்து ஓட வேண்டிய வர்களாக மாறுவது காலத்தின் கட்டாயம். இன்று வீட்டில் இருந்தவாறே தமக்குத் தேவையான அனைத்து வங்கி நடவடிக்கைகள், பொருட் கொள்வனவுகள், கொடுப் னவுகள் சீர் செய்தல ஆகிய அனைத்து வேலைகளும் இலத்திரனியல், கைத் தொலைபேசிகள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. இக் கால கட்டத்தில் நாம் இன்னமும் மேசை நிறைந்த கோப்புக்களையும் ஆவணங்களையும் குவித்து வைத்துக் கொண்டு சதாகாலமும் தேடல்களிலேயே காலத்தைக் கடத்துகின்றோம் இலத்திரனியல் உபகரணங்களையும் அவற்றிற்கான மென் பொருட்களையும் பாவிப்பதன் மூலம் வேலைகளை இலகுவாகவும் விரைவாகவும் நிறைவேற்றக் கூடிய ஒரு தன்மையை வளர்த்துக்கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## அரசியல்...

"ஜே" பிரிவில் உள்ள ஒரு பெண் கைதிஉட்பட 14 தமிழ் அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களை நேற்றைய தினம் பாராளுமன்ற உறுப்பி னர்களான சித்தார்த்தன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் சென்று பார்வையிட்டுள்ளனர். அத்துடன் நேற்றைய தினம் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 3 அரசியல் கைதிகளும் மீண்டும்தமது உண்ணா விரதத்தை மேற்கொண்டுள்ளனர். சிறைச்சாலை அத்தியட்சகர்கள் உணவு தவிர்ப்பை கைவிடு மாறு கோரிய போதும் இவர்கள் மருத்துவ வசதிகளை பெற்றுக் கொள்ளாமல் தமது போராட்டத்தை தொடர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-9)

## யாழ்.பல்கலையில்...

ஊழியர்கள் மற்றும் ஆண் மாணவர்கள், விரிவுரை மண்டபங்களுக்கு டெனிம் ஜீன்ஸ் மற்றும் டீ-ஷேர்ட் அணிந்து வருவது முற்றாகத் தடை செய்யப்பட்டிருந்ததுடன், விரிவுரைகளுக்குத் தாடியுடன் வருவதும் தடை செய்யப்பட்டிருந்தது.

அதேபோல், மாணவிகள் மற்றும் பெண் கல்விசார் ஊழியர்கள், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சேலை அணிந்து விரிவுரைகளுக்கு வரவேண்டும் என்றும், இந்த நியதிகளை மீறுபவர்கள், எக்காரணம் கொண்டும் விரிவுரைகளுக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் இந்த ஆடைக் கட்டுப்பாடு பல சர்ச்சைகளை உருவாக்கிய நிலையில், அந்த கட்டுப்பாடுகள் வாபஸ் பெறப்பட்டுள்ளதாக யாழ்.பல் கலைக்கழக கலைப்பீடத்தின் பதில்.பீடாதிபதி பேராசிரியர் மா.வேதநாதன் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

மேலதிக வருவாய்

உங்கள் இல்லங்களில் சுற்றுலா பயணிகளுக்கு (Tourist) விருந்தினராக உபசரித்து மேலதிக வருமானத்தை பெற்றுக் கொள்ளுங்கள்

(3719)

மேலதிக விபரங்களுக்கு;

அசோக்கவாடிக்கா
49-51, அம்மன் வீதி, நல்லூர்
யாழ்ப்பாணம்.
0777 360 353
0777 3400 26

MBBS DOCTOR

There are Vacancies in following countries recognized; registered English medium Medical Colleges for the 2016 in take.

Minimum A/L Qualification 2C S

- Russia
- China
- Malaysia

(சி-3845)

New Zealand Study and live

Study now and become a New Zealand Citizen. Various courses in various recognized colleges and Universities

Ashokavatika
49-51, Amman Road, Nallur, Jaffna.
T.P No :- 0777360353, 0777340026




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.